# மறை ஞானப்பேழை

ரமளான் – ஷவ்வால்

ஜுன் 2021

Volume - 13 Issue - 4

## பேழைக்குள்......

*ஜமாலிய்யா தோட்டத்தில்.....*
*திருமறைப் பக்கம்.*
*ஹதீஸ் பக்கம்.*
*அமுத மொழிகள்.*
*86 ஆம் உதயதின விழா.......!*
*வஹ்தத்துல் வுஜூத் - போட்டி*
*முதல் பரிசு பெற்ற கட்டுரை.*
*காலத்தின் அதிபர்....*
*அறிவும் தெளிவும்!*
*மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ரஹ்)*
*தீர்க்க தரிசன மகிமை!*
*85 ஆம் உதய நாள் உரைகள்.*
*அலீ அஹ்மது ஸாபிரீ (ரஹ்)*
*இனிக்கும் இறைமொழி!*
*சாமான்யரா சர்தார் நபிகள்?*
*ஒரு பாடல் பாடிட...*
*மற்றும் பல் சுவை செய்திகள்.*

## Be in all and get the power of God

**ஆன்மிக மாத இதழ்**

**வெளியிடுவோர்**
**அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை**
பாகிரா காம்ப்ளக்ஸ் 74, பழனிரோடு.
திண்டுக்கல் – 624 001.

**நிறுவனர்**
குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்

**கௌரவ ஆசிரியர்**
தலைமை கலீஃபா H.M. ஹபீபுல்லாஹ் B.Sc.,

**ஆசிரியர்**
கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**உதவி ஆசிரியர்**
N.S.N. அப்துஸ்ஸலாம் ஆலிம், B.Com.,

**சிறப்பாசிரியர்**
கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**
J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**
R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**
ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165

செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி
**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**
**கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்**
229/ 4, மீரா காம்ப்ளக்ஸ், மேற்கு ரத வீதி,
ஃபயர் சர்வீஸ் எதிரில், திண்டுக்கல் – 624 001.
**CELL : 99445 76165**
**Website:www.emsabai.org**
**email: aalimpulavar07 @ gmail.com**
**email: j.mdrahmathulla@yahoo.com**

# இப்னு அறபி (ரலி) அவர்கள் வந்தால்....

**க**த்தார் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை நடத்திய 'வஹ்தத்துல் வுஜூது' கட்டுரைப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுவிட்டன. பரிசுகள் பெற்ற அனைவருக்கும், போட்டியில் கலந்து கொண்ட முரீதுகள் அனைவருக்கும், போட்டிக்கு ஏற்பாடுசெய்த, கத்தார் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையினருக்கும் 'மறைஞானப் பேழை' வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

மார்க்கத்தின் உயிர் நாடி போன்றது 'இர்ஃபான்' எனும் ஞானம். முஸ்லிம்களிடம் 'மஃரிபா' எனும் ஞானம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பது சிந்திக்க வேண்டிய கேள்வி.

இந்த ஞானத்தேட்டம் உள்ளோரிலும் 'வஹ்தத்துல் வுஜூத்' எனும் மெய்யான ஞானம் எத்தனை பேரிடம் இருக்கிறது என்பது இரண்டாவது கேள்வி.

சற்று வெளிப்படையாகச் சொல்லப் போனால்.... தரீகா வழி நடத்தும் செய்குமார்களில் கூட இந்த வஹ்தத்துல் வுஜூது ஞானம் நிறைவாக இருக்கின்றதா என்றால், அவர்களின் உரைகளில், அது வெளிப்படவில்லையென வருத்தத்தோடு கூறமுடியும்.

என்ன செய்வது? வஹ்தத்துல் வுஜூது என்றாலே பலருக்கு அலர்ஜி. அதைப் பேசும் சிலரும் தப்பும் தவறுமாகபேசி மக்களை மிரட்டிவிடுகிறார்கள்.

இத்தகைய காலகட்டத்தில், வஹ்தத்துல் வுஜூதை சிந்திக்கின்ற– அதனை விளங்குகின்ற– அதைப்பற்றி எழுதுகின்ற ஒரு புதிய சமுதாயத்தை சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் உருவாக்கிவிட்டார்கள் எனும்போது அவர்களின் வல்லமையும், அதற்காகப் பாடுபட்ட உழைப்பும் நன்கு புலப்படுகிறது.

இந்தப் போட்டிக்கு எழுபத்தொரு கட்டுரைகள் வந்தன. அத்தனை கட்டுரை யாளர்களும் வஹ்தத்துல் வுஜூதை தெளிவாக விளங்கி எழுதியிருந்தது வியப்பை யளித்தது. இவர்களெல்லாம் ஆலிம்களில்லை. மார்க்க விற்பன்னர்களில்லை. எழுத்தாளர்களில்லை. ஆச்சரியம்! அல்ஹம்து லில்லாஹ்!

*" ஞானமேதை ஹள்ரத் இப்னு அறபி (ரலி) அவர்கள் இக்காலத்தில் வந்தால், இரண்டு சிறப்புகளுக்காக எங்களைத் தேடி வந்து சந்தித்து மரியாதை செய்வார்கள்; ஒன்று, நாங்கள் நபிபேரர் என்பதற்காக, மற்றொன்று அவர்கள் விளக்கிய வஹ்ததுல் வுஜூதை இக்காலத்தில் உயர்த்திப் பிடிப்பதற்காக"* என சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் ஒருதடவை முழங்கினார்கள்.

உண்மைதான். ஹள்ரத் இப்னு அறபி (ரலி) அவர்கள் இப்போது வந்தாலும் மிக்க மகிழ்ச்சியடைவார்கள். ஏனெனில் வஹ்தத்துல் வுஜூதை விளக்கி எழுத இத்தனை முரீதுகளா? இவர்களை உருவாக்கியிருக்கும் அற்புத குருவா? என மகிழ்ந்து வாழ்த்துவார்கள். உண்மைதானே!

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**

**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**

**ஜமாலிய்யா**

**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**

**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



ஹக்குத் தியாகத்தைப் பல வழிகளிலும் எதிர்பார்க்கும். தகுதிக்கேற்பவே தியாகம் உண்டு.

ஒவ்வொரு நிமிடமும் நம் பிள்ளைகளின் ஞாபகம் உண்டு. நமக்கு. நம் பிள்ளைகள் நமக்கு இந்த ஸமானில் ஹக்குத் தந்த பேரருள்கள். வரப்பிரசாதங்கள்.

நம்மீது நீங்கள் எவ்வளவு அன்பு கொண்டு தௌஹீதில் ஈடுபடுகிறீர்களோ அதுவே நீங்கள் நமக்குச் செய்யும் காணிக்கைகளில் மிகப்பெறுமதியுள்ளது.

– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –

# ஜமாலிய்யாத் தோட்டத்தில்

**தி**ருமுல்லைவாசல் மேலப்பள்ளிவாசலிலே ஹிஜ்ரா1358 ஜமாதுல் அவ்வல் பிறை 2, திங்கட்கிழமை மக்ரிபுக்கும் இஷாவுக்குமிடையிலே எனது பாட்டனார் மஹ்பூப் ஸுப்ஹானி (றலி) அவர்களின் பிரசன்னத்தைப் பெற்றேன். துஹ்பதுஸ் ஸூபிய்யா, ரிஸாலா கௌதிய்யா, எனும் பெயர்களையுடைய அவர்களின் அரிய இருகிரந்தங்களை எனக்குக் கொடுத்து நானும் என்னைத் தொடர்கிறவர்களும் அவற்றைக்கொண்டு பிரயோசனம் பெறும் படி கூறினார்கள், அல்லாஹ் அவர்களைப் பொருந்துவானாக. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்குரியன. கலிமா விருட்சக்கனிந்த கனி நூலில் ஸய்யிதுனா யாஸீன் நாயகம் (ரலி)அவர்கள்.

இதனைக்கொண்டு, இவ்விருநூல்களும் நம் தரீகத்துல் ஹக்கியத்துல் காதிரிய்யாவின் மூல நூல்கள் என்பதை உணர்ந்து கொள்ளலாம். இந்நூல்கள் ஏகத்துவ ஞானத்தின் பொக்கிசங்கள். கற்று மனதில் வைத்துக்கொள்ளவேண்டிய கருவூலங்கள். என்பதனை மேற்கண்டது கொண்டு விளங்கலாம்.

**தி**ருச்சியில் என் நண்பர் மர்ஹூம் அல்ஹாஜ் சூபி, நெய்னா முஹம்மது ஸாஹிப் அவர்கள் வீட்டிலே ஹிஜ்ரா 1358 ஜமாதுல் ஆகிர் பிறை 20, செவ்வாய்க்கிழமை காலை எனது மனாமில் நான் உலமாக்கள், ஸூபியாக்கள் உடைய கூட்டத்திலே, உபதேச சபையிலே என்னைத் தொடரும் படியும் என்னைப் பிரியம் வைக்கும் படியும், உபதேசித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது எனது பாட்டனார், மஹ்பூபு ஸுபுஹானி (ரலி) அவர்கள் பிரசன்னமாகி ஒவ்வொரு அறபி மாதமும் 14 ஆம் இரவிலே திக்ரு உபதேசத்திற்குரிய சபையை எனது சக்திக்குத் தக்கபடி நடத்துமாறு சொல்லி, செல்வங்கள், நலன்கள் சிலகொண்டு எனக்கு நற்சொற் கூறினார்கள். அல்லாஹ் அவர்கள் ரகசியத்தைப் பரிசுத்தப் படுத்தி அவர்கள் ஆத்மாவை சிறப்பிப்பானாக. அவனின் திருவருள் மீது எல்லாப் புகழும் அவனுக்கே உரியன. (கலிமா விருட்சக்கனிந்த கனி நூலில் ஸய்யிதுனா யாஸீன் நாயகம் (ரலி)அவர்கள்.)

மேலே எழுதப்பட்டுள்ள அருமையான கனவின் மூலம் 14 ஆம் அன்று இரவு திக்ரு சபை யொன்றை நம்முரீதீன்கள் நடாத்துவது மிக அவசியம் என்பது தெள்ளிதிற்புலனாகும். இதனை முரீதீன்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும், அவ்வாறு நடாத்துவதனிமித்தம்சபையோர் கண்டிலா அற்புதச் சிறப்புகளை நிறைய அடைவர் என்பதற்காகவுமே மேற்கண்ட அருளுரை இங்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. காண்க.

(விளக்கம்: சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள்)

கொய்த மலர் கொய்த மலர்

# அல்லாஹ் அருள்கிறான்!



தீமைகளைச் செய்வோர் நம்மை மிகைத்துவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்களா? என்ன? அவர்கள் எடுக்கும் தீர்மானம் மிகவும் மோசமானதாகும். (20-29,4)

தன்னுடைய தாய் தந்தையரிடம் நல்ல முறையில் நடந்துகொள்ளவேண்டுமென நாம் மனிதனுக்கு அறிவுறுத்தினோம். (20-29,8)

அவன் மனிதனை ஒரு துளி விந்திலிருந்து படைத்தான் (14-16,4)

இறை நம்பிக்கையாளர்களே! யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் உங்கள் உற்ற நேசர்களாக்கி கொள்ளாதீர்கள். அவர்களில் சிலர் சிலருக்கு நெருங்கிய நண்பர்களாய் இருக்கின்றனர். மேலும் உங்களில் எவரேனும் அவர்களை உற்ற நண்பர்களாக்கிக் கொண்டால் அவரும் அவரைச் சார்ந்தவராகவே கணிக்கப்படுவார். நிச்சயமாக அல்லாஹ் அநியாயக்காரர்ளுக்கு நேர்வழி காட்டுவதில்லை. (6-5.51)

அல்லலாஹ்வும் அவனுடைய தூதரும் இறை நம்பிக்கையாளர்களும் தான் உங்களுக்கு உற்ற நண்பர்கள். (அவர்கள் எத்தகையோரெனில்) தொழுகையை நிலை நிறுத்துவார்கள், மேலும் ஜக்காத்தை வழங்குவார்கள். இன்னும் (அல்லாஹ்வுக்குப்) பணிந்து வாழ்வார்கள். எவர் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் இறை நம்பிக்கையாளர்களையும் தம் உற்ற நண்பர்களாய் ஆக்கிக்கொள்கிறாரோ அவர் தெரிந்து கொள்ளட்டும் ; அல்லாஹ்வின் குழுவினர்தாம் வெற்றியாளர்கள். (6-5.55,56)

மனிதர்கள் இழைக்கும் அக்கிரமங்களுக்காக அல்லாஹ்அவர்களை (உடனுக்குடன்) பிடிப்பதாயிருந்தால், பூமியில் எந்த உயிரினத்தையும் அவன் விட்டு வைத்திருக்க மாட்டான். ஆயினும் ஒரு குறிப்பிட்ட தவணைவரை அவர்களுக்கு அவன் அவகாசம் அளிக்கின்றான். பிறகு அந்த நேரம் வந்துவிடுமாயின் ஒரு விநாடி கூட அவர்களால் பிந்தவும் முடியாது. முந்தவும் முடியாது. 14-16.61)

எவர்கள் கற்புடைய பெண்கள் மீது அவதூறு சொல்லிப் பின்னர் நான்கு சாட்சியங்களைக் கொண்டுவரவில்லையோ அவர்களுக்கு எண்பது சாட்டையடிகள் கொடுங்கள்.

இனி அவர்கள் கூறும் சாட்சியத்தை என்றைக்கும் ஏற்றுக் கொள்ளாதீர்கள். மேலும் அவர்களே தீயவர்கள். ஆனால் எவர்கள் இந்தக் குற்றத்திற்குப் பின்னர் பாபமன்னிப்புக் கோரித் தங்களைச் சீர்திருத்திக் கொண்டார்களோ அவர்களைத்தவிர. அல்லாஹ் அவசியம் (அவர்கள் விஷயத்தில்) அதிகம் மன்னிப்பவனாகவும் கருணை புரிபவனாகவும் இருக்கின்றான். (18-24.4,5)

الحديث

**ஹதீஸ் பக்கம்**

பாகவி பின் நூரி

# அழகோ அழகு - சிறப்பழகு

*ஆறு குணம், அறுவருக்கு அழகு; மற்ற அறுவருக்கு சிறப்பழகு.*

1. நீதம், மனிதனுக்கு அழகு, அதுவே தலைவர்களுக்கு சிறப்பழகு

2. தருமம் மனிதனுக்கு அழகு, அதுவே செல்வந்தர்களுக்குச் சிறப்பழகு

3. பேணுதல் மானிடர்கட்கு அழகு, அதுவே ஆலிம்களுக்குச் சிறப்பழகு

4. பொறுமை, மனிதர்களுக்கு அழகு அதுவே ஏழைகட்கு சிறப்பழகு,

5. பிராயச் சித்தம் மானிடர்கட்கு அழகு, அதுவே வாலிபர்களுக்கு சிறப்பழகு,

6. நாணம் மனிதர்கட்கு அழகு, அதுவே மங்கையர்களுக்கு சிறப்பழகு.

**உப்பில்லா உணவு**

தலைவன் நீதவானாக இல்லை எனில், மழை பெய்யா மேகத்தைப் போன்றாவான்.

செல்வந்தன் தர்மவானாக இல்லை எனில் பழமில்லா மரம் போன்றாவான்.

ஆலிம் பேணுதலாக இல்லை எனில், மற்றவர்களின் நன்மைக்காக, தன்னைத் தானே அழிக்கும் மெழுகுவர்த்தி போலாவான்.

ஏழை பொறுமையாக இல்லை எனில், புல் பூண்டற்ற பூமி போலாவான்.

வாலிபன் பிராயச் சித்தம் செய்யாதவனாக இருப்பின், தண்ணீரில்லாத கிணறு போன்றாவான்.

மங்கையர்கட்கு மானம், நாணம் இல்லை எனில் உப்பில்லா உணவு போன்றாவாள்.

**நபிமார்களின் கூலி**

தலைவன் நீதமாக இருப்பின், அவனுக்கு இஸ்மாயீல் (அலை) அவர்களின் கூலி போன்று கூலி கிடைக்கும். செல்வந்தன் தர்மவானாக இருப்பின், இப்ராஹீம் நபி (அலை) யின் கூலி போன்று கூலி கிடைக்கும்.

மங்கை மான நாணமுள்ளவளாக இருப்பின், மரியம் (அலை) அவர்களின் கூலி போன்று, கூலி கிட்டும்.

ஆலிம் பேணுதலாக இருப்பின் யாகூப் நபி (அலை) யின் கூலி போன்று நற்கூலி கிடைக்கும்.

அப்துல்லாஹ் இப்னு மஸ் ஊது (ரலி) அறிவிக்கின் றார்கள்! அல்லாவிற்காகவே, சிலர் வாழ்வர். அல்லாஹு தஆலா அவர்களை தன் அருள் வடிவாகவே படைத்துள்ளான்.

மக்களில் சிலரை, தன் அருகிலிருந்து விலகிச் செல்பவராகவும் சிலரை, பிறருக்குத் துன்பம் விளைவிப்பவராகவும் படைத்துள்ளான். தேவையின் போது, அருளாளர்களிடம் வருவோர். தேவை நிறைவேறி பின், திடுக்கத்திலிருந்து நிம்மதியடைவர்.

# நன்றி..நன்றி..நன்றி..!

மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி வளர்ச்சி நிதிக்காக இவ்வாண்டும் தங்களுடைய ஜகாத் தொகைகளை தாராளமாக அளித்த மேலும் ஜமாஅத்தார்கள் பொதுமக்களை அணுகி வசூல் செய்த அன்புக்குரிய முரீதுகள், அஹ்பாபுகள். மதுரஸா உஸ்தாதுகள், மாணவர்கள் அனைவருககும் நன்றிகளை உரித்தாக்குவதோடு, சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மேலான துஆவுக்கும் உரித்தாவார்களாக எனப் பிரார்த்திக்கின்றோம்.

*–மதுரஸா நிர்வாகிகள்–*



சங்கைக்குரிய குத்புல் அக்தாப் ஜமாலிய்யா அஸ்ஸையிது

**யாஸீன் மௌலானா (ரலி)** அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய்

நாயகமவர்களின் **57 ஆவது கந்தூரி விழா!**

பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

ஈருலக இரட்சகர் முஹம்மது முஸ்தபா ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உள்ரங்க வெளிரங்க வாரிசும் கௌதுல் அஉளம் முஹிய்யுத்தீன் ஆண்டகை (ரலி) அவர்களின் சம்பூரணப் பிரதிநிதியும் காலத்தின் இமாமும் ஆத்ம ஞான குருநாதருமான குத்புல் அக்தாப் ஜமாலிய்யா செய்யிது யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் **57** ஆவது வருடக் கந்தூரி விழா **ஹிஜ்ரி 1442 துல்கஃதா பிறை 7 ( 18.06.2021 ) வெள்ளிக்கிழமை மாலை சனி இரவு திருமுல்லைவாசலில் மௌலானா நாயகம் (ரலி) அவர்களின் தர்ஹா ஷரீஃபில்** இன்ஷா அல்லாஹ் ஆரம்பமாகி பிறை **17 ( 28.06.2021) திங்கள் மாலை செவ்வாய் இரவு** நிறைவு பெறவுள்ளது. **தமிழக அரசின் வழி காட்டுதல்படி பக்தர்கள் கலந்து கொள்வது பற்றி இன்ஷா அல்லாஹ் பின்னர் வாட்ஸ்அப் மூலம் அறிவிக்கப்படும். அறிவிப்பின்றி வருகை தர அனுமதியில்லை –தர்ஹா கமிட்டி–**

# திருக்குறள்

**சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்**
**பட்டுப்பா டூன்றுங் களிறு**

தன்னுடம்பில் தைத்துள்ள அம்புகளாலே வேதனை அடைந்த போதும், களிறு, (யானை) தன் பெருமையை நிலை நிறுத்தும். அவ்வாறே ஊக்கமுள்ளவர் அழிவிலும் தளரமாட்டார்கள்.

---

## இம்மாதச் சிறப்பு தினங்கள்

பிறை

شوّال

**ஷவ்வால்**

1 ஈதுப் பெருநாள்

3 புகாரி தங்கள் கந்தூரி

16. சங்கைமிகு ஜமாலிய்யா செய்யிது கலீல் அவ்ன் மௌலானா நாயகம் அவர்கள் உதயதினம்.

25 ஹைதராபாத் அப்துல் காதிர் ஸூஃபி ஹள்ரத் உரூஸ்

---

ذوالقعدة

**துல் கஃதா**

23 ஏர்வாடி சையிது இப்றாஹீம் ஷஹீது (ரலி) கந்தூரி

---

**இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.**

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் அன்பு முரீது, மன்னார்குடி ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை செயலாளர், அய்யூப் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் மனைவியும், ஏ.மெ.சபை. குளோபல் தலைவர், ஜனாப். முனைவர், கலீபா. ஏ.பி.சஹாப்தீன் பி.இ.எம்.பி.ஏ. அவர்களின் சம்மந்தியும், ஏ.முஹம்மது ஷர்புத்தீன், ஏ.முஹம்மது நபீல ஆகியோரின் தாயாருமான ஏ.வஹீதா பானு ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் 27.5.2021 வியாழன் அன்று வஃபாத்தானார். 28.502021 அன்று கல்பாக்கம் கப்ருஸ்தானில் நல்லடக்கம் நடைபெற்றது. அன்னாரின் பிழைகள் பொறுத்து சுவனப்பேறுகளை அருள்வானாக! ஆமீன்.

---

வாசக அன்பர்களே! மறைஞானப் பேழை சந்தா புதுப்பித்து விட்டீர்களா? **மறைஞானப் பேழை சந்தா அனுப்ப வேண்டிய வங்கிக் கணக்கு எண்:**

**HUSSAIN MUHAMMAD.S. & JAHIR HUSSAIN.A**

**Indian Overseas Bank, SB A/c No. 209801000025255.**

**IFSC Code.IOBA 0002098**

**Branch- RM COLONY. DINDIGUL**

***பெயர் – முகவரி*** பணம் அனுப்பியவுடன் தயவுசெய்து இந்த எண்களில் ஒன்றைத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துங்கள்.

**A. JAHIR HUSSAIN. 9597912410 - 9944576165**

**சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்**



# அமுத மொழிகள்

**உ**ங்களுடைய சகோதரனான முரீதிற்கு நீங்கள் உதவியாளராக இருக்க வேண்டும். உங்கள் உடலில் ஓடக்கூடிய இரத்தம்தான் அவரிடமும் ஓடுகின்றது என்பதனை உணர்ந்து கொள்ளுங்கள்.

எந்த ஒரு முரீதுக்கும் வரக்கூடிய துன்பத்தை உங்களுக்கு வந்ததாகக் கருதி, ஓடி, ஓடி உதவி செய்யுங்கள். இதுதான் தவ்ஹீதின் முக்கிய அம்சமாகும்.

♦ யாராவது ஒருவர் கெடுதியோ, குற்றமோ, தவறோ செய்துவிட்டால், அவரிடம் அதைத் தனிமையில் தான் விசாரிக்க வேண்டும். அதனைப் பற்றி தனிமையில் தான் பேச வேண்டும். பலர் முன்னிலையில் அவரின் தவறைப் பற்றிப் பிரஸ்தாபிக்கக் கூடாது.

♦ இன்னொருவர் துன்பப்படுவது கண்டு நாம் சந்தோஷம் கொள்ளக் கூடாது. கஷ்டப்படுபவர்களைக் கண்டால், அவர்களுக்குச் சாந்தமான வார்த்தைகளைக் கூறிச் சந்தோஷப்படுத்த வேண்டும். தம்மால் இயன்ற உதவிகளைச் செய்துவர வேண்டும்.

♦ ஹக்கு யாருக்கு நேர்வழி காட்டுகிறதோ அவர் அவனின் அருளைக் கொண்டு படிப்படியாகவும் அமைதியாகவும் பல படிகளை ஒரே நேரத்தில் கடந்து விரைவாகவும் "உரூஜ்" சென்று விடுகிறார்கள்.

இப்படி உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களுக்கு "நுஜூல் ஊரூஜ்" என்னும் வித்தியாசம் அற்றுவிடும். அவர்களுக்கு நுஜூல் - உரூஜ் என்பது மிகவும் இலகுவாக இருக்கும்.

அவர்கள் கீழ்ப்படிக்கு வந்து பார்க்கும்போதும் அவர்கள் உயர்படியில் இருப்பதையே நினைப்பார்கள். உயர் படியை மறந்துவிடவும் மாட்டார்கள்.

♦ "ஆதி" என்பது ஆதி அற்றநிலை. இதற்கு முன்னால் எனக் கூறிக்

கொள்ள முடியாத நிலையே ஆதிநிலையாகும். ஆதியே இறைவன். அந்த ஆதி இறைவனை இந்தப் பாமாலைகள் கொண்டு புகழ்ந்து பாடப்பட்டன. மேலும், "ஆதி" என்னும்போது ஆதிக்கு ஆதியும் அதற்கு ஆதியும் இல்லை.

ஆதி என்பது ஒன்றே எங்குமான நிலை. ஓரிடம் இல்லாத நிலை. சூனியமான நிலை. அப்பொழுது எங்களுக்கு (நம்மிடையே) எந்த விதமான பேதமும் இல்லை.

♦ ஆண்களோ பெண்களோ மிருகமோ இப்படியான பஞ்ச பூதங்களோ ஆகிய எந்த வகையான மாற்றங்களும் எந்தவிதமான பேதங்களுமின்றி ஒன்றாக அந்தக் காலத்தில் இருந்தோம்.

அந்தக் காலத்தில் எனும்போது பூரண நிலையிலிருந்தோம். அப்படி யிருந்த நாம் எப்படி இங்கு வந்தோம்?

(அந்தப் பரிபூரணம்) ஓர் அசைவை நாடியது. நாடியதும் இக்கோலத்தில் வந்துவிட்டோம்.

மனிதர்களாக, மிருகங்களாக, மண்ணாக, காற்றாக, பறவைகளாக, இப்படிப் பலவகை உருவங்களைக் கொண்டு வந்த பிறகு நாம் பேதப்பட்டு விட்டோம். பல வேறுபாடுகளைக் கொண்டு வந்தோம்.

எங்கிருந்தோம் என்பதனையும் எவ்வாறிருந்தோம் என்பதனையும் மறந்துவிட்டோம்.

எனவே, வேறுபாடுகளை மறந்து நாம் எப்படியிருந்தோம்? எவ்வாறிருந் தோம்? அப்போதிருந்த நிலையில் தான் இப்போதும் இருக்கிறோம் எனும் உண்மையை நினைத்துக் கொண்டால், பூரணமான ஒரு நிம்மதி நிலை மனிதனின் உள்ளத்தில் பிரகாசிக்கும்.

அந்தப் பிரகாசம் தான் பரிபூரண நிலை இருக்கவேண்டிய மனம் என்னும் சிம்மாசனம் என்னும் சிறப்பான தானமாகும்.

ஆனால், எம் சமூகமோ ஆத்துமார்த்த அறிவை புறக்கணிக்கிறதோடு, ஆத்துமார்த்த தேவஞானிகளையும் புறக்கணிக்கின்றனர்.

♦ எம் சமூகத்தில் ஆலிம்கள் என்னும் பெயரில் கணக்கற்றவர்கள் உள்ளனர்.

இவர்களில் உள்ளவை யெல்லாம் ஹலாலும் ஹராமும் ஆகும். இவர்கள் ஷிர்க்கை அறியவில்லை. இதனாலேயே "இப்னு அறபி" போன்ற மாபெரும் மகான்களைப் புறக்கணித்தனர்.மற்றது, ஜமாஅத்

# அமுத மொழிகள்

எனப் பெயர் கொண்ட ஆத்ம ஞானத்தின் புல்லுருவியாகும். இவ்விரண்டு பகுதியாரும், கலிமாவை மறைக்க வந்தவர்கள். இவர்களின் வாழ்க்கை ளாஹிரிய்யத்தானதாகும்.

♦ வெளிப்பகட்டு என்பதற்கு இங்கு "ளாஹிரிய்யத்" என்கிறோம். எங்கு ஹலாலும் ஹராமும் கூடி விட்டதோ அங்கே வெளிப்பகட்டு, மக்களை ஏய்க்கும் தன்மை ஆகியன கூடிவிடும்.

இந்த நிலையில் எங்கே இவர்களில் ஆத்மீகம் உண்டாகும். இவர்கள் உடலைப் பார்ப்போரே யல்லாது ஆத்துமாவைப் பார்ப்போர் அல்லர்.

உள்ளத்தில் எழும் உண்மையை வெளிப்படுத்தும்போது உடனே "காபிர்" எனும் பத்துவாவை உயர்த்தி விடுவார்கள். காபிர் என்பது என்ன என்பதை அறியாதோரே அவர்கள் ஆவர்.

♦ நாம் ஒன்றைச் செய்தபின் நாம் செய்தவற்றில் மற்றவர்கள் குறை காணுவார்களா எனப் பின்னால் எண்ணிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

எப்போதும் எம்மைப் பற்றியும் மற்றவர்களைப் பற்றியும்சிந்தித்துக் கொள்ள வேண்டும்.

நமக்குப் பொருத்தமற்றவற்றை மற்றவருக்குச் செய்வதோ செய்விப்பதோ கூடாது. நாம் நமக்கு அருவருப்பாகக் கருதும் ஒன்றை மற்றவர்கள் முன்னில் செய்வதை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

மற்றவருக்காக, அவர் எம்மை நல்லவர் எனக் கூறுவதற்காக, நாம் நல்லவர்போல் நடித்துக் கொள்ளக் கூடாது. எம் மனச்சாட்சிக்கு நாம் நல்லவராக நடந்து கொள்ள வேண்டும்.

ஒருவர் நம் நடத்தையில் அல்லது பேச்சில் பிழை கண்டு திருத்தின் அது உண்மையாக விருந்தால் ஒப்புக்கொண்டு திருந்திக் கொள்ளல் வேண்டும்.

♦ "ஸித்ருல் அர்ஷி மஸ்பூலுன் அலைனா

வ ஐனுல்லாஹி நாழிரதுன் இலைனா

பி ஹவ்லில்லாஹி லாயக்திரு அஹதுன் அலைனா"

என்பதனையும்,

"பிஸ்மில்லாஹில்லதீ லா யளுர்ரு மஅஸ்மிஹி ஷைஉன் பில் அர்ளி வலா பிஸ்ஸமாஇ வஹுவஸ் ஸமீஉல் அலீம்" என்பதனையும் எப்போதும் ஓதி வாருங்கள். எதிரிகள் பலமற்றுப் போவார்கள்.

# அமுத மொழிகள்

♦ பணத்தை அல்லது ஒரு பொருளை நாம் எடுத்துக் கொண்டால், அதில் இரண்டு பக்கமுண்டு. அதேபோல், மார்க்கத்தை எடுத்தாலும் அதற்கு இரண்டு பக்கமுண்டு.

அல்லாஹ் வானத்தி லுள்ளான். அர்ஷிலுள்ளான் என்பதாக வெளிரங்கத்தை மட்டும் அறிந்து கொண்டவர்கள் கூறுவர்.

மற்றொரு பிரிவினரோ, சரியான விளக்கத்தைச் சொல்லிக் கொண்டிருப்பர்.

ஆகவே, முக்கியமான விஷயம் என்னவென்றால், அல்லாஹுத் தஆலா ஒருவன் என்பதை நாம் நல்ல முறையில் அறிந்து அந்த ஷிர்க் (இணைவைத்தல்) எனும் நிலையிலிருந்து மாறிக் கொள்ள வேண்டும்.

♦ **உ**ண்மையான ஷரீஅத்தைப் பின்பற்றிப் பாவம் புண்ணியம் நன்கறிந்து அவற்றை விட்டும் விலகி, ஐங்காலத் தொழுகைகளையும் சரிவரச் செய்து காலையில் குர்ஆன் ஓதி உண்மைக்கு மாற்றமில்லாதவாறு நடந்து வரும் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் முஸ்லிம்களா?

இன்றேல், இஸ்லாத்துக்கே மாற்றமான அல்லாஹ் - ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் விலக்கப்பட்ட குடி, சூது, ஸினா, லிவாத் முதலான கொடிய ஹராம்களிலும் ஷிர்க்கிலும் மூழ்கியிருப்பவர்களும், தமது சகோதர முஸ்லிம்களுக்கு எக்குற்றமுமின்றியும் வீணே இம்சிக்கும் கொடியவர்களும் முஸ்லிம்களா? என்பதனைப் பொறாமை, கள்ளம், நயவஞ்சகம், மது வெறி முதலானவைகளை விட்டு விட்டுச் சிந்தித்துப் பார்த்தால், உண்மையான முஸ்லிம்களும் ஈமானுள்ளவர்களும் யார் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

♦ **ஒ**ரு தொழில் கெட்டு விட்டால் நஷ்டம் ஏற்பட்டுவிட்டால் அதனையே எண்ணி கவலைப்பட்டுக் கொண்டிராமல் வேறு ஏதாவது நன்கு தெரிந்த தொழிலை கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். எந்தத் தொழிலும் இல்லாமலிருப்பது கேவலமான தொன்று. தனக்குத் தெரியாத தொழிலில் முதலீடு செய்வது முட்டாள்தனமாகும். சிலர் தனக்குத் தெரியாத தொழிலிற்குத் தேவையான பணத்தைப் பிறரிடம் கொடுத்துவிட்டு அந்தத் தொழிலைப் பற்றி சிறிதும் அறிந்து கொள்ளாமல் இருந்து விடுவர். பணத்தைப் பெற்றுக் கொண்டவர் இலட்சக்கணக்கில் சம்பாதித்து பெரிய பணக்காரராகி விடுவர்.

# சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின்

# 86 ஆம் உதயதினகாணொளிக் கூடல் விழா!

**ச**ங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் 86 ஆம் உதயதின உலகளாவிய காணொளிக் காட்சி விழா, ஜூம் வழியாக 28. 5.2021 வெள்ளிக்கிழமை இரவு 7 மணிமுதல் 10 மணி வரை நடைபெற்றது. விழாவிற்கு கண்மணி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருக்குடும்பத்தார், கலீபாக்கள் முன்னிலை வகிக்க, செய்யிது மஸ்ஊத் மௌலானா அல்ஹாதீ அவர்கள் தலைமைவகித்து தலைமையுரை நிகழ்த்தினார்கள். ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை குளோபல் தலைவர் ஜனாப். முனைவர், கலீபா. ஏ.பி.சஹாப்தீன் .பி.இ.எம்.பி.ஏ. அவர்கள் விழாவை நெறிப்படுத்தினார். ஹாபிழ். வி.எம். முஹம்மது ஜகரிய்யா யாஸீனிய்– (இமாம் ஈஸா பள்ளிவாசல், இராமநாத புரம்) அவர்கள் கிராஅத்: ஓதித்தொடங்க, வஹ்தத்துல் வுஜூதுபாடலை குவைத் அப்துல் ஹமீது பாகவி– முபாரக் அலி ஹக்கிய்யுல் காதிரிய் ஆகியோர் இசைக்க, அதன் பொருளுரையினை சிங்கப்பூர் அப்துல் சுபஹான் ஹக்கிய்யுல் காதிரிய் வழங்க, ஜனாப். பேராசிரியர் ஏ.சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய், ஜனாப். அஹ்மது கபீர் ஹக்கிய்யுல் காதிரிய் (மதுக்கூர்) குருபோற்றல் பாடினர். ஜனாப். ஜஃபர் சாதிக் ஹக்கிய்யுல் காதிரிய் (அபுதாபி) வரவேற்புரை வழங்கினார். ஜனாப். யாஸீன் அலி மௌலானா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள். (திருமுல்லைவாசல்) அப்துல் ஹக்கீம் யாஸீனிய் அவர்கள் ((குவைத்) கலீபா. அட்வகேட். ஏ.என்.எம். லியாகத் அலி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் (மதுக்கூர்), ஜனாப். அப்பாஸ் ஷாஜஹான் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் (துபை), ஹைதர் நிஜாம்.பி.இ. ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் (சென்னை), ஜனாப். வெஸ்மி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் (இலங்கை), ஜனாப். ஏ.என்.எம். முஹம்மது யூசுப் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் (கத்தார்), கலீபா. எஸ். ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பயீ ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கலீபா. முஹம்மது முஸ்தபா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள், (மதுக்கூர்) மெய்ஞ்ஞானப் பாடல் இசைத்தார். ஜனாப். சாஹுல் ஹமீது ஹக்கிய்யுல் காதிரிய் (துபை) அவர்கள் நன்றி கூறினார்.

கத்தார் ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை நடத்திய வஹ்தத்துல் வுஜூத் கட்டுரைப் போட்டி முடிவுகளை கத்தார் சபைத்தலைவர். ஜனாப். ஏ.என்.எம். முஹம்மது யூசுப் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் அறிவித்தார். திண்டுக்கல் சுபுஹானி ஹக்கிய்யுல் காதிரிய் தயாரித்து நாகூர் சதாம் பாடிய பாடல் விழாவின் தொடக்கத்தில் ஒலிபரப்பப்பட்டது. ஜனாப். ஏ.என்.எம். முஹம்மது யூசுப், பேராசிரியர் ஏ.சிராஜுத்தீன், கலீபா. ஆலிம் புலவர் எழுதிய சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் புகழ்ப்பாடல்கள் , கத்தார்– துபை– குவைத் – சபைகள் சார்பில், இம்தாதுல்லாஹ் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் மேற்பார்வையில் சென்னை சாஜித்கான் இசையில், தயாரிக்கப்பட்ட இசைத்தொகுப்புகள் வெளியிடப்பட்டன. செய்யிது மஸ்ஊத் மௌலானா அல்ஹாதீ அவர்களின் துஆவுடன் விழா நிறைவு பெற்றது.

# வஹ்தத்துல் வுஜூத்

**ஹிஸாம் ஹிஜாஸ்** – ஸ்ரீலங்கா.

சிருஷ்டிகளில் மனித இனமல்லாத மற்ற இனங்கள் இறையிடத்தே இறையாகி இறைக்குள்ளிருந்து வணக்கம் செலுத்திக்கொண்டிருக்கின்றன, அவை தம்மை சிருஷ்டி என அறியாமல் முன்னிருந்த நிலையிலேயே உள்ளன. ஹக்கிலிருந்து அவை வெளியாகிய போதிலும் அவை வெளியாகிய தன்மையை அறியவில்லை. மனிதனைப் போன்று அவற்றிற்கு இதை அறியும் புத்தியில்லை. தாமே தம்மையறியா அவையே இறையான நிலையில் வணக்கம் செலுத்துகின்றது. ஆனால் இறையில் இருந்து வெளியாகிய மனித இனம் இறையை மறந்து விட்டது. மனிதன் பிறந்த போது எந்தவித ஆசாபாசமும், எந்தச் சிந்தனையுமின்றி ஹக்குடன் இரண்டறக் கலந்த நிலையிலேயே பிறக்கிறான். அவன் பிறந்து வளர வளர சிறிது சிறிதாய் உலகத்தை அறியும் போது அவன் முன்னிருந்த பரிபூரண நிலையை மறந்து விடுகிறான். பல பிரிவினைத் திரைகள் ஹக்கை அறிவதை விட்டும் அவனை சூழ்ந்து கொள்கின்றது. இதனால் அவன் உரூஜில் நின்றும் இறங்கி நுஸூலுக்கு வந்து விடுகிறான். உலக ஆசாபாசங்களில் கட்டுண்டு அதிலேயே லயித்து தான் வெளியானதன் நோக்கத்தை படிப்படியாக மறந்து விடுகிறான். தன்னை அறிந்து இறைவனை அறியும் பாதையை மறந்து விட்டதால் தான் வந்த பாதையை மறுபடியும் நினைவு கூரக் கடமைப்பட்டவனாகின்றான். அறிவையும் சிந்தனையையும் கொண்டே ஹக்கை அறிய முடியும். மனிதனே இத்தத்துவத்தை விளங்கும் அனுபவமும் ஆற்றலும் பெற்றவன். தான் முன்னிருந்த நிலையை அறிவதற்கும் அனுபவங்கள் பெற்று அதை அடைவதற்கும், தன் சுயமாகிய ஆரம்ப நிலையான ஆதிநிலையின் பால் மீளுவதற்கும் உள்ள அறிவு ஞானமே எல்லாம் ஒன்று, ஒரே உள்ளமை என்னும் தத்துவார்த்தமான **வஹ்தத்துல் வுஜூத்** ஆகும்.

அனைத்து அறிவிற்கும் தலையாயதும் அவசியம் அறியப்பட வேண்டியதுமான இறைவனைப் பற்றிய இவ் அறிவை மஉரிஃபாவுடைய ஞானம் என்றும் கூறலாம். **'அவ்வலுத் தீனி மஉரிஃபதுல்லாஹ்'** மார்க்கத்தில் முதன்மையானது அல்லாஹ்வைப் பற்றிய மஉரிஃபா எனும் தௌஹீதுடைய அறிவாகும். இதனையே சங்கைக்குரிய காமில் குரு, குதுபுஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் அல்ஹாஷிமிய் நாயகம் அவர்கள் **கலையினிற் சிறந்தது ஞானம் அதிற் காண்பது சுத்தநற் சத்தியமே** என்றும் திருவாய்

மலர்ந்தருளி யுள்ளார்கள். இன்னும் **'மன் அரப நப்ஸஹு பகத் அரப ரப்பஹு'** தன்னை அறிந்தவன் நிச்சயமாக தன் இறைவனை அறிந்தவனானான், என பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளதால் இந்த ஞானம் எந்த அளவு முக்கியமானது என்பதையும் தான் ஹக்கைவிட்டு வேறானவனல்லன் என்பதையும் அறிந்து கொள்ள முடியும்.

ஹக்கை அறியாதோர் எப்படிப்பட்டவர்கள் என்பதையும் ஹக்கை அறிவதன் அவசியத்தை சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்கள் கீழ்வருமாறு கூறுகின்றார்கள்.

**நாயனையே யறியாதான் நாயினிலும் கேடன்**
**வாயினையே கொண்டுமவன் வார்த்தையிலா ஊமை**
**மாயாவிருள் தனில் மூழ்கி மாய்ந்துகெடும் மூடன்**
**தூயபர மறியாதான் தீயனவ னிறையே.**

**உள்ளத்துள் ளுறைந்தவனை உணராதான் மூடன்**
**எள்ளளவும் அறிவில்லான் இழிகுலத்தான் நீசன்**
**கள்ளவுளம் கொண்டவனும் கறைபடிந்த உளத்தான்**
**உள்ளகலை பலகற்றும் ஊனனவ னிறையே.**

என்று அறியாதோரின் நிலையை தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

நாம் இவ்வுலகில் பிறந்ததன் தாற்பரியம் உலகிலேயே இறைவனின் இன்பங்களை அடைதலோடு, உடலுடன் இருப்பதுடனே ஹக்காகிய இறையோடு இரண்டறக் கலந்து பேரின்பப் பரவசமடைதலாகும். இதனையே **மரணிப்பதற்கு** என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியுள்ளார்கள்.

ஞான வழியாகிய தௌஹீதுடைய அறிவை நாடிச் செல்பவர்கள் ஷரீஅத், தரீகத், ஹகீகத், மஉரிபத் ஆகிய நிலைகளின் தன்மைகளை அறிந்திருப்பது அவசியமாகும். அதனடிப்படையில்,

**ஷரீஅத்:** ஷரீஅத் என்னும் படியில் உள்ளவர்கள் வெளிரங்கமான புறக் கிரிகையகளுடன் மாத்திரம் தன்னை மட்டுப் படுத்திக் கொண்டு இறை பற்றிய சிந்தனை இல்லாமல் பல திரைகளுக்குள் கட்டுண்டு இருப்பர். **ஆகாயம்– மேகம்** ஆகிய உதாரணத்தின் மூலம் இவர்களை அடையாளப்படுத்த முடியும். ஆகாயமும்

மேகமும் ஒன்றாக இருந்தாலும் மேகம் பல திரைகளால் தன்னை மறைந்துக் கொண்டிருப்பது போல் ஷரீஅத்தின் நிலையில் மாத்திரம் உள்ளவர்கள், ஹக்கை அடைவதில் அநேக திரைகளில் சிக்குண்டு இருப்பவர்களாகும். ஹக்கை அறியாதவர்களுக்கு இச் ஷரீஅத் திரையாகவும் ஹக்கை அறிந்தவர்களுக்கு அது ஒரு பாதுகாப்பு வேலியாகவும் அமைந்து இருப்பதையும் காணலாம்.

**தரீகத்:** அசுத்தமான எண்ணங்கள் நீங்கி அல்லாஹ்விற்கு மாத்திரம் தமது வணக்கங்களை மேற்கொள்கின்றேன் என்ற எண்ணம் தரீகத் நிலையில் உள்ளவர்களுக்கு மலர்கின்றது. இறை நன்றியுணர்வுடன் கூடிய பக்தி உணர்வு இவர்களில் இருக்கும். இத்தகையோரின் நிலையை **நெருப்பு- இரும்பு** ஆகிய உதாரணத்தின் மூலம் தெளிவுபடுத்தலாம், இரும்பானது நெருப்பிலிடப்பட்டதும் இரும்பு நெருப்பின் தன்மையைப் பெற்று நெருப்பாகக் காட்சியளிக்கிறது. இதுபோன்றே ஹல்கு ஹக்குடன் ஒன்றிக்கும் போது ஹக்கின் தன்மையைப் பெற்று ஹக்காக பிரதிபலித்தாலும் நெருப்பை விட்டு இரும்பானதை வெளியே எடுத்து விட்டால் அது நெருப்பின் தன்மை நீங்கி இரும்பாகக் காட்சியளிப்பதானது ஹல்கு எவ்வளவு ஹக்குடன் ஒன்றித்தாலும் **ஹக்குவேறு ஹல்குவேறு** எனும் மனோநிலையில் இருப்பவர்களாகும். இத்தகையோர் தமது நிலையை உயர்த்தி பரிபூரண ஹக்கை அடைய முயற்சிக்க வேண்டும். முயற்சிக்காவிட்டால் இதுவும் அவர்களுக்கு ஹக்கை அறிவதில் திரையாகவே இருக்கும்.

**ஹகீகத்:** இந்நிலையில் உள்ளவர்கள் மனதைப் பக்குவப்படுத்தி ஒருமுகப்படுத்தி ஹக்கை அடையும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். தன்னைத் தானே சோதித்து தன்னிலையை சீர்படுத்திக்கொண்டு இறை வழியில் முன்னேறும் இவர்களின் நிலையை **ஆகாயம்- புகை** என்னும் உதாரணத்தின் மூலம் தெளிவுபடுத்தலாம். புகைமண்டலம் தன்னுருவை ஆகாயத்தில் இரண்டறக் கலக்க முயற்சி எடுப்பது போல், இந்நிலையில் உள்ளவர்கள் தமது உள்ளமையையும் ஹக்கின் உள்ளமையையும் அறிய முயற்சி எடுத்து முன்னேறிச் செல்பவர்களாகும்.

**மஉரிபத்:** எனும் ஞானம் என்பது அல்லாஹ்வை அறிவது. ஞானத்தின் மூலம் கலிமாவாகும், கலிமாவென்பது நம்மிலும் நம்மில் இருந்து பரந்து விரிந்து அனைத்திலும் நீக்கமற நிறைந்து பரிபூரணமாக வியாபித்துள்ளது என்பதை ஆராய்ந்து உணர்ந்து, தனது உள்ளமை ஹக்கின் உள்ளமையை விட்டு வேறானது அல்ல என்று அறிந்து பனிக்கட்டி தண்ணீரில் தம்மை அழித்து இரண்டறக் கலப்பது போல் இவர்கள் தம்மை ஹக்கில் மாய்த்து இரண்டறக் கலக்கும் தன்மையில் உள்ளவர்கள்.

### *வஹ்ததுல் வுஜூத் ஞானத்தை அறிய வழிகாட்டியின் அவசியம்*

**‘அல் இன்ஸானு ஸிர்ரீ வ அன சிர்ருஹூ’** மனிதன் எனது இரகசியம் நான் மனிதனின் இரகசியம் என்று ஹதீஸுல் குத்ஸியில் அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான். இந்த இறைவனின் இரகசிய ஞானமாகிய வஹ்ததுல் வுஜூதை அறிய, அகக்கண் திறக்கும் குரு அவசியம். ஹக்கை தன் ஞானக் கண்ணால் கண்டு இரண்டறக் கலந்த பூரண மனிதனான **இன்ஸானுல் காமிலாகிய** ஷெய்குமார்களை அண்டி, அறிந்த அனுபவத்தினாலேயே ஹக்கை அடைதல் வேண்டும்.

ஞான வழி நடக்கும் முரீத் தன்னை இந்த இறை ஞானத்தின் பால் வழிகாட்டும் குருவின் முன் மய்யித்துப் போன்று இருத்தல் வேண்டும். அதாவது தனக்கென்று தனிப்பட்ட ஆசை விருப்பம் இல்லாது தன் செய்கின் குணங்களை தன்னில் பிரதிபலிக்கச் செய்யும் பாக்கியம் பெற்றவரே ஷெய்கில் தன்னை அழித்துக் கொண்டவராவார். இந்நிலையை **‘ஃபனா பிஷ் ஷெய்க்’** என்று கூறப்படும். தன்னை முழுமையாக குருவிடம் அர்ப்பணிப்பதன் மூலமே இத்தூய ஞானமாகிய தௌஹீதுடைய அறிவை அடைதல் முடியும். வழிகாட்டிகள் என குருமாரும் ஷெய்குமாரும் நிறைய இருந்த போதும் உண்மையான காமிலான ஷெய்குமாரை அடைந்து அவர்களின் மூலமே **‘ஃபனா பிர் ரசூலையும், ஃபனா ஃபில்லாஹ்’** வையும் அடைய முடியும். அஹதியத்தின் மர்தபா வரை ஒரு முரீதை அழைத்துச் செல்லக்கூடிய வழிகாட்டியின் வரைவிலக்கணத்தை கீழ்க்காணும் வாரிதாத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**‘குன்து ஷைகன் காமிலவ் வஸய்யிதவ் வஹாதியா தாஇயன் அஉலா மராதீபி அஹ்மதி’ – “நான் காமிலான ஷைகாகவும், தலைவராகவும் நேர்வழி காட்டுபவராகவும் இருக்கின்றேன். நான் அஹ்மதிய்ய உள்ளமையின் உயரிய தகுதிகளை பிரச்சாரம் செய்கிறவராகவும் உயரிய தரங்களளவில் அழைக்கிறவராகவும் இருக்கிறேன்”.**

**‘குன்து சுல்தானல் அவாலிமி லிஸ்ஸமானி பி அஹ்மதீ’ – “அஹ்மதிய்யாவைக் கொண்டு அகிலத்துக்கு (இக்) காலத்தின் அதிகாரியாக இருக்கிறேன்”** என்று காலத்தின் குதுபாகிய சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்கள் தனது வாரிதாத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். இத்தகைய, ஹக்கின் உயரிய ஸ்தானத்தில் இருக்கும் ஒரு குதுபை வழிகாட்டியாகப் பெற்று அவர்கள் மூலம் பரிபூரண தௌஹீதுடைய ஞானத்தை அடையும் பாக்கியம் பெற்றிருப்பது இறை எமக்கு அருளிய பேரருளாகும்.

பாவங்கள், துர்க்குணங்கள் இறைவனை அடையும் பாதையின் தடைக்கற்களாகும். இறைவனை அறியாது பாவத்தில் மூழ்கிக் கறைபடிந்து இருக்கும் உள்ளங்களை கறைநீக்கி வஹ்ததுல் வுஜூத் ஞானத்தை ஊட்டி இறைவனை அறியச்செய்து அவனுடன் இரண்டறக் கலந்து பேரின்பப் பரவசமடைய, ஆரம்ப நிலையில் இருக்கும் ஒரு முரீதை உயரிய ஸ்தானத்தை அடையும் வரை, அவன் எவ்வாறு இறைவனை அறிவது? அறிந்ததைக் கொண்டு எவ்வாறு அதை அனுபவிப்பது? தன்னுள் எவ்வித மற்றங்களைக் கொண்டுவர வேண்டும்? அந்த மாற்றத்தின் பின் தன்னிலே எவ்வாறு உள்ளமையின் சூரியன் உதயமாகும்? ஹக்கின் உதிப்புக்கள் எவ்வாறு உண்டாகும்? என்பது போன்ற ஒரு முரீது அடைய வேண்டிய அனைத்து அனுபவங்களையும் திக்ர் (இறைவனை சிந்தனை செய்வதன்) மூலம் அடையும் வழியை நாம் மாதாந்தம் ஓதிப்பயனடையும் ராதிபில் அழகாக தெளிவுபடுத்தியுள்ளார்கள். இறை சிந்தனையின் மூலம் எம்மில் ஏற்பட வேண்டிய மாற்றங்களை ராதிபில் இருந்து ஆராய்ந்து இரத்தினச் சுருக்கமாக குறிப்பிடுவது சிறந்தது என நினைக்கிறேன்.

பாவத்தை ஏவக்கூடிய, துர்க்குணங்கள் குடிகொண்டு மூழ்கிப்போன, பல திரைகளையுடைய **ஷரீஅத்**தின் படியில் இருக்கும் சாதாரண மனிதனின் நப்ஸாகிய **ஆலமுல் நாஸூத்தில்** சஞ்சரிக்கக்கூடிய **நஃப்ஸே அம்மாராவையும்**, அம்மாராவின் துர்க்குணங்களைக் களையும் ஆசையும் ஆர்வமும் கொண்ட போதும் அதை விட்டு மீள முடியாதவாறு கட்டுண்டு இருக்கும் **மலகூத்துடைய ஆலத்தில்** சஞ்சரிக்கும் **லவ்வாமாவாகிய நஃப்ஸையும் தரீக்கத்**தின் படியில் இருந்து "**இல்லல்லாஹ் இல்லல்லாஹ்**" எனும் இறை திக்ரின் (இறைத் தியானத்தின்) மூலம் நீக்கிக் கொண்டு **முல்ஹிமாவாகிய நப்ஸை** அடைந்து **ஹகீகத்** என்னும் படியாகிய **ஜபரூத்துடைய** ஆலத்தை அடையும் போது, நீ ஒரு தானத்துக்கு முன்னேறுவாய். இதனால் சில சந்தேகங்கள் நீங்கி அறிவு உனக்கு வெளியாகும். மேலும் நீ அல்லாஹ்வை காட்சி கண்டவனாய்க் கலப்பற்றவனாய் "**அல்லாஹ் அல்லாஹ்**" என்பது கொண்டு முன்னேறும் போது மேற்கூறிய நப்ஸுகள் உன்னைவிட்டு நீங்கி **முதுமஇன்னா** எனும் **மஉரிபத்தின்** படியான **ஆலமுல் லஹூத்** எனும் உயர்நிலையை அடைவாய். இந்த உறுதியான தானத்தில் பூரணத்தை நிறைவு செய்துகொள்வாய். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் குணங்களைக் கொண்டு குணம் பெறுவாய். துர்குணங்களை நீக்கி ஹக்கல்லாது வேறு இல்லை எனும் உண்மை நிலையான **முதுமஇன்னா**விற்கு வந்துவிடுவாய். மிக உணர்ந்த தலைமைத் துவத்தையுடைய உன் ஷெய்கின் ஆலோசனைப்படி இறை ஒன்று என்னும் நிச்சயமூலாதாரத்தை

நினைத்துக்கொண்டு உன் கண்களைக் குளிராக்கிக் கொள். தொடர்ந்தும் இப்பாதையில் முன்னேறும் போது, நீ **நஃப்ஸே ராலியா** என்னும் **வாஹிதியத்து**டைய நிலைக்கு வந்துவிடுவாய். இந்த நிலையில் உள்ளவர்களின் நாவிலிருந்து வெளியாகும் வார்த்தைகள் ஹதீஸுடைய தரத்தையுடைய வார்த்தைகளாகவும் இருக்கும். இன்னும் நீ தானத்தில் முன்னேறும் போது **நஃப்ஸே மர்லியா** என்னும் **வஹ்தத்து**டைய நிலைக்கு வந்துவிடுவாய். **ஆலமுல் லாஹூத்தில்** உள்ள மிகப்பெரும் ரகசியத்தைக் கொண்டு நீ அழகாகக் காண்கின்ற உன்னுடைய உள்ளமையை பரம ரகசியத்தில் அழித்துவிட்டாய். மெய்ப்பொருளோடு உன் தாற்பரியத்தை இரண்டறக் கலப்பதனால் நீ மெய்ப்பொருளானாய். இறைவனை நீ உன்னில் காட்சி காண்கிறதனிமித்தம் பூரணமானாய். இதுதான் நிச்சயமான **வஹ்தத்** எனும் முஹம்மதிய்ய அந்தஸ்தாகும். முஹம்மதிய்ய தாற்பரியமே இறையோனின் தாற்பரியமாகும். இந்நிலையில் இருந்து வெளியாகும் வார்த்தைகள் கடலும் அலையும் போன்ற **ஹதீஸுல் குத்ஸி**யுடைய தரத்தில் உள்ள வார்த்தைகளாகவும் இருக்கும். ஹக்கை அனைத்திலும் காண். அவ்வாறே அனைத்தையும் ஒன்றிலே காண். இவ்வாறு பயிற்சி கொள்ள உன்னில் உள்ளமையின் சூரியன் தோன்றும். அப்போது அனைத்தும் நீயாகிவிடுவாய். இவ்வாறான முஷாஹதாவிலே நீ பரிபூரணம் அடைந்து **நஃப்ஸே காமிலாவை** அடைவாய். இந்த நிலையே **அஹதிய்யத்** என்னும் பூரண நிலையாகும். இந்த நிலையில் இறை உதிப்புக்கள் உண்டாகும். இந்நிலையை அடைந்த உத்தமரின் நாவில் இருந்து வெளியாகும் வார்த்தைகள் கடல் போன்ற குர்ஆனிய்ய உயர் வசனங்களின் தரத்தையுடையதாகும். என்பது சங்கைக்குரிய காலத்தின் உத்தமரின் வழி காட்டுதலாகும்.

எனவே மேலுள்ள அந்தஸ்தை அடைவதனிமித்தம், **"அமா"** எனும் குறிப்பற்ற நிலையில் இருந்த பரம்பொருள் எவ்வாறு சிருஷ்டிகளாக வெளியானது என்பதை அறிதல் இன்றியமையாததாகும். ஹக்கு **"லாதய்யுன்"** எனும் குறிப்பற்ற நிலையில் இருந்த தன்னில் தானே மாற்றம் கொண்டு தன்னில் தானாய் தன்னிலே வெளியான விதத்தை படித்தரங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஆதிநிலையாகிய **"ஆலம் லாத அய்யுன்"** என்னும் குறிப்பற்ற நிலையில் இருந்து ஹக்கு தன்னில் தானாகவே ஏற்பட்ட மாற்றத்தினால், யதார்த்தங்களின் மூலப் படித்தரமான **தாத்தையும் சிபத்தையும்** நுணுக்கமாக அறியும் தானமான **"ஆலம் தஅய்யுனுல் அவ்வல்"** என்னும் **ஹகீக்கதே முஹம்மதிய்யாவாக** மாற்றம் கொண்டு, பிரபஞ்சம் அனைத்தினுடைய அறிவும் வெளியாகும் தளமாகிய

**"ஆலம் தஅய்யுனுஸ்ஸானி"** என்னும் **ஹகீகத்துல் இன்ஸானிய்யாவாகிய** மானிட உள்ளமையின் யதார்த்த நிலையாக மாற்றம் கொண்டு, பின் **ஆலமுல் அர்வாஹ்** என்னும் ஆத்ம உலகாகவும், **ஆலமுல் மிதால்** என்னும் வெளியாக இருக்கும் படைப்பினங்களின் கற்பனையான மாய ரூபங்களை உள்ளடக்கிய சூக்கும உலகாகவும் மாற்றம் பெற்று, பின் **ஆலமுல் அஜிஸாமாகிய ஜட உலகு** என்னும் நுண்ணணுக்கலங்கள் ஒன்று சேர்ந்த ஒருவகை ஜட அமைப்பான மாற்றம் கொண்டு இறுதியாக **ஆலமுல் இன்ஸான்** என்னும் மானிட உலகான பூரணத் தோற்ற நிலையான சிருஷ்டிகளாக ஹக்கு தோன்றியிருக்கும் படித்தரங்களாகும். இதுவே ஹக்கின் கடைசி மர்தபாவாகும். தன்ஸீஹில் இருந்து தஷ்பீஹாக ஹக்கு வெளியான விதத்தை மேலே உள்ள 7 படித்தரங்களில் இருந்து மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் அறிந்து கொண்டோம். இன்னும் இவை நுஸுல் என்னும் இறக்கப் படிகளாகும்.

படித்தரங்கள் 40 என்றும் 7 என்றும் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதில் மருண்டுவிடத் தேவையில்லை. அவை **தோற்றமின்மை (தன்ஸீஹ்)** மற்றும் **பூரணத் தோற்ற நிலை (தஷ்பீஹ்)** ஆகிய இரண்டு நிலைகளாக அறியலாம். பல படித்தரங்களாக வெளியாகி இருந்தாலும் முடிவான நிலையில் எல்லாம் ஒரே படியாகும். ஹக்கு பஞ்சபூதங்களாக, பிரபஞ்சமாக இயற்கை எழில்களுடன் தோற்றங் கொண்ட போதிலும் **'ஹுவல் ஆன கமா கான'** முன்னர் எப்படி இருந்ததோ அப்படியே இப்போதும் உள்ளது என்பதே யதார்த்த உண்மையாகும். இதனையே **"தத்துவமசி"** என்னும் மகா வாக்கியமும் விளக்கி நிற்கின்றது. இந்த யதார்த்த உண்மையை அடைய உருஜ் என்னும் ஏற்றப்படியில் இறை சிந்தனையால் முன்னேறுபவர்கள் இப்படித்தரங்களை படிப்படியாக அடையும் போது, முறையே **ஆலமுல் அர்வா**ஹின் உணர்வை **மஉரிபாத்**துடைய நிலையைப் பெற்றவர்கள் உணர்வர், **ஆலம் தஅய்யுனுஸ்ஸானி** என்னும் இரண்டாவது குறிப்பினுடைய தாற்பரியத்தை வாஹிதிய்யத்துடைய நிலையைப் பெற்றவர் ஞானக் கண்கொண்டு உணர்வர். **ஆலம் தஅய்யுனுல் அவ்வல்** என்னும் ஹக்கின் முதற் குறிப்பினுடைய தாற்பரியத்தை **வஹ்தத்துடைய** நிலையை அடைந்தவர் தன்னில் உணர்வர். **அஹதியத்**துடைய நிலையை அடைந்தவர் **"லாத அய்யுன்"** ஹக்கும், ஹல்கும் இல்லாத குறிப்பற்ற நிலையில் எந்தவொரு குறிப்பும் வர்ணனையும் இல்லாத நிலையை பெறுவர்.

பலர் இந்த நுணுக்கமான அறிவை தன்னிச்சையாக அறியப் போய் தடம் புரளும் சந்தர்ப்பங்கள் அநேகம். எனவே இன்ஸான் காமிலின் துணையுடனேயே

இவ்வுண்மையை அடைய முயற்சிக்க வேண்டும். இந்த கூர்மையான அறிவை தெளிவாக அறியாதோர் எவ்வாறு இறையை எண்ணியுள்ளனர் என்பதை, **மள்ஹருள் ஹக்காக** இருக்கும் சங்கைக்குரிய எமது குருபிரான் இவ்வாறு எமக்கு அறியப்படுத்துகிறார்கள்....

**உருக்கொண்ட திறையென்பர் ரொருசாரா ருன்னார்**
**அருக்கொண்ட தவென்பர் அருவுருவை எண்ணார்**
**மரங்கல்லை மண்கதிரை மதித்தீயை அறியார்**
**பரமெனவே கூறிடுவர் பரந்துறையு மிறையை**

**விரிந்தது திரிந்துவரும் வேற்றுமையைக் காணார்**
**திரிந்தபொரு ளிறையென்பர் சித்தத் தெளி வில்லார்**

இந்தப் பிரிவினைகளை நீக்கி அறிந்து தெளியும் போது ஹக்கில் இருந்து வெளியான சிருஷ்டிகளை முழுமையாகிய ஹக்கின் பெயரைக் கொண்டு அழைக்க மாட்டோம்.

**சூனியமான சுத்தப் பிரம்மம்**
**தானதன் வடிவில் தனித்தனித் தோன்றும்**
**ஆனவை யாவும் ஆதிப் பிரணவ**
**மானதன் பகுதி யாகு மன்றே**

எனத் தெளிவாகவும் இரத்தினச் சுருக்கமாகவும் கூறியிருப்பதானது தனித்தனித் தோற்றம் கொண்ட போதும் அவை யாவும் முழுமையின் பகுதிகளே என்பதாகும். பகுதிகளுக்கு முழுமையின் பெயரைக் கொடுக்கலாகாது.

அதாவது பரிபூரணத்தில் இருந்து வெளியான பகுதிகளுக்குப் (ஜுஸ்உக்குப்) பரிபூரணத்தின் பெயரைக் கொண்டு அழைத்தலாகாது என்பதே இங்கு மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும். இவ்வாறு அழைப்பது எம்மை இணைவைத்தலான ஷிர்க்கில் கொண்டுபோய்ச் சேர்த்து விடும் அபாயகரமான நிலையாகும். இதை இன்னும் விபரித்து தெளிவாகக் கூறுவதாயின்.

**“தன்ஸீஹை மட்டும் ஹக்கென்று நீர் சொன்னீரானால் நீர் அதைக்கொண்டு மட்டும் தளையிடப்பட்டவராகுவீர், தஷ்பீஹை மாத்திரம் ஹக்கென்று நீர் சொன்னீரானால் நீர் அதைக்கொண்டு மட்டும் எல்லையிடப்பட்டவராவீர். தன்ஸீஹ் தஷ்பீஹ் ஆகிய இரண்டையும் சேர்த்து ஒன்றாக்கி நீர் சொன்னீரானால் மெய்ஞ்ஞான அறிவிலே நீர் நாயகரானீர்”.**

என்று ஷெய்குல் அக்பரின் கூற்றை சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்கள் துஹ்பதுல் முர்ஸலாவில் இன்னும் அழகாகத் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அதாவது தன்ஸீஹ், தஷ்பீஹ் ஆகிய இரண்டையும் சேர்த்து தன்ஸீஹ் மஹ்ழை ஹக்கென்று அறிந்தவாறே உண்மையான வஹ்ததுல் வுஜூத் கொள்கையை பின்பற்றும் முவஹ்ஹிதாவார். **"உருவுருவான பிரிவதனை அருவுருவாக்கிக் கலந்திடுவாய்"** இவர்களே ஹக்கை அறிதலின் அருவநிலையையும் உருவநிலையையும் ஒன்றாக்கி **அருவுரு** எனும் நிலையில் ஹக்கை அறிபவர்களாகும்.

எனவே இத்தூய இறை அறிவை அடையும் பாதையில் பயணிப்பவர்கள் திக்ர் என்னும் இறை சிந்தனையும், அறிவும், நுண்ணிய ஆராய்ச்சியும், பயிற்சியும் கொண்டு அவனுடைய ஆத்மாவை பரிசுத்தப்படுத்தி மடமைத் திரைகளைக் களைந்து ஹக்குடன் பிரிவறக் கலந்து குன்ஹு ஆகிய தன்னில் தானான தன்மையை அடைய வழி வகுக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. **"நின்னை அனைத்திலாக்கு நீயற்றதில்லை நோக்கு உன்னில் அனைத்துமாகும் உயர் காட்சி போதுமாகும். தேகமழிந்து ஏகத் திரையில் மறைந்து போக ஏகாதியாகினேனே"** எனும் வாப்பா நாயகத்தின் வாக்குப்படி ஏகத்தில் எம்மை பனிக்கட்டி நீரில் கரைவதுபோல் அழிந்து (அழித்தல் என்பது எண்ணத்தாலாகும்) அனைத்தும் ஏகமாக கண்டுவருவதன் மூலமே **ஐனுல் யகீன்** என்னும் நிர்ணய பார்வையுடைய நிலையை அடைய முடியும். இதுபோல் இவ்வாறு தன்னை அனைத்துலுமாக்கி காட்சி காண்பதன் மூலம் **ஹக்குள் யகீன்** என்னும் பேரின்ப அனுபவமான **ஏகாந்த** நிலையை அடைய முடியும்.

**"லா இலாஹ"– இலாஹ் இல்லை, (சிருஷ்டிகள் ஒவ்வொன்றாய் எதுவும் இறை அல்ல). "இல்லல்லாஹ்"– அனைத்துமாய் பரிபூரணமாய், பிரிக்கவியலாததாய்க் கலந்திருக்கும் இறையைத் தவிர. என்னும் கலிமாவின் மூலக்கருத்தை அறிந்து. "நானும் சர்வமும் அல்லாஹுவாயிருக்கும்", முஹம்மதுர் ரசூலுல்லாஹ் அல்லாஹ்வுடைய சுயமென்று ஒப்புக்கொண்டு, கலிமதுத் தய்யிபாவை உள்ளத்திலேயிருத்தி, வணங்கப்படுபவன், வணக்கம், வணங்குபவன் என்ற பிரிவினை இல்லாமல் அனைத்தும் ஒன்றே** என்ற மேலே நாம் ஆரம்பம் தொட்டு இதுவரைபேசப்பட்ட அறிவுகள் உணர்வுகள் அனுபவங்களின் தாற்பரியம் வஹ்ததுல் வுஜூத் என்னும் ஒரே உள்ளமை என்ற எண்ணத்தில் சதா அல்லாஹ்வை பரிபூரண நிலையில் இணையின்றி வணங்கி, இந்த புனிதமான நோன்பு காலத்தில் சங்கைக்குரிய வாப்பா நாயகம் காட்டித்தந்த விதத்தில்:

**ஆதியேகா உன்னிலெம்மைக் கலந்தருள்வாய் ஆதியேகா.**

**ஆதிமூல உண்மைச் சத்தை நம்மில் நித்யமாக்கு ஏகா.**

**ஆதியேகா இணையதான நரகினின்றும் காப்பு ஏகா.**

**ஆதி வழியாம் சோதி சுவனம் சேர்த்தருள்வாய் ஆதியேகா.**

எனும் தன்னை அறியாப் பாவத்துக்கான தௌபாவை வேண்டி உரூஜ் என்னும் ஆன்மீக உயர்ச்சியை அடைய ஏக இறை அருள்பாலிக்குமாக! ஆமீன்!!.

**ஹிஸாம் ஹிஜாஸ்–** ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை– ஸ்ரீலங்கா.

---

*அதிசயம்*



**கௌ**துஸ்ஸமான் ஜமாலிய்யா மௌலானா–(ரலி) அவர்களின் சம்பைப் பட்டினம் மௌலானா தோட்டத்திலுள்ள தர்ஹா ஷரீபில் தென்னை மரங்கள் உள்ளன. அந்த மரத்திலுள்ள கிளையொன்று காற்றில் விழுந்தபோது அந்தக்கிளை இரண்டு பிளப்பாக இருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டு அங்கு பணிபுரியும் தர்ஹாவின் காவலர் பழனி என்பவர், அப்துல் ஜப்பார் ஹக்கிய்யுல் காதிரி அவர்களுக்கும் மற்ற நிர்வாகிகளுக்கும் தெரிவித்தார்.

தென்னை மரத்தில் இவ்வாறு இரண்டு பிளப்பாக கீற்று இருப்பதில்லை. முன்னர் ஒரு தடவை மௌலானா அவர்கள் தோட்டத்துத் தேங்காய்க்கு கொம்பா முளைத்திருக்கிறது? என்று ஒருவர் கிண்டலாகக் கேட்க, அவர் கேட்டதற்கு விடையளிப்பதுபோல தேங்காயில் கொம்பு முளைத்திருந்தது கண்டு மக்கள் அதிசயித்தனர்.

*(தகவல்: அப்துல் ஜப்பார்– சாதிக் ஹக்கிய்யுல் காதிரிய்கள் .)*



# யாஸீன் நாயகர் - இறை நேசர்களின் தலைவர்!

*(கலீபா. மர்ஹூம், நாகூர் யாஸீன் ஆலிம் அவர்கள் எழுதி, கஸீததுல் அவ்னிய்யா நூலில் வெளிவந்துள்ள 'ஜல்ல ஷஃனுல் கலீலி' என்ற பைத்துக்கு என். சயீது முஹம்மது ஆலிம் மிஸ்பாஹி ஹக்கிய்யுல் காதிரி அவர்கள் பெயர்த்த தமிழ் மொழி பெயர்ப்பு.)*

1. படைப்பினங்களின் பொறுப்பாளர் கலீல் அவ்ன் நாதரின் அந்தஸ்து மகத்துவமிக்கது.

2. மக்களின் அடைக்கலம் ஜீலிய்யி (ரலி) அவர்களின் திருப்பேரர் உயர்வு கண்ணியமானது.

3. நீங்கள் காலத்தின் அதிபர் இறைநேசச் செல்வர்களின் தலைவர்.

4. ஒன்றித்தல் எனும் பரிசுத்த வெளிப்பாட்டை உம்மிலிருந்து எங்களுக்கு கொடை வழங்குவீர்களாக.

5-6. இறையின் தட்ப வெப்ப ஜோதி தோன்றுவதற்கு முன்பு நீங்களும் நாங்களும் எங்கிருந்தோம்?

7-8. பரிபூரணம் உடையோரிடம் வந்து மன அமைதி பெற்ற ஒவ்வொருவருக்கும் கிடைத்த கொடையாகிறது நேரடி முரண்பாட்டை அழிக்கும் கொடையாகும். (வேற்றுமை அற்ற நிலையாகும்)

9-10. நல்லடியார்களின் இறையிடமிருந்து பேரொளி வீசும் வெண்முத்து.

11-12. அந்த இறைரகசியம் உயர்வு- தாழ்வு எனும் உயிராக மாறிய பின் அதிகாரியும் பூமிக்குரியவருமான நபி ஆதம் (அலை) அவர்களின் உள்ளத்தில் ஊதப்பட்டது.

13-14. எல்லா நபிமார்களும், இரஸுல்மார்களும் உயர்வுக்குரிய மனித இனத் தலைவரும் முதல் பாட்டருமான நபி ஆதம் (அலை) அவர்களின் சந்ததிகளேயாவர்.

15-16. பரிபூரண முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் புனித வருகையின் மூலம் மேன்மைக்குரிய இரஸுல்மார்களின் ஒளியை அல்லாஹ் முடித்துவிட்டான்.

17-18. இன்ஜீல் உட்பட அனைத்து வேதங்களும் ஆதாரங்களின் ஆதாரமான திருக்குர்ஆனில் உள்ளடங்கியுள்ளது.

19-20. மகத்துவமுடைய அல்லாஹ்வின் வாக்கியமான திருக்குர்ஆனில் மலைகள், பூமி, வானங்களில் உள்ள அனைத்தும் ஒன்று சேர்ந்துள்ளது.

21-22. அவ்ன் நாதரின் பாட்டனார் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திடமாக சொன்னார்கள்.

உங்களில் இரண்டு உயர்வுமிக்க இரண்டு வழிகாட்டிகளை விட்டுச் செல்கிறேன்.

23-24. கலீல் நாதரின் பாட்டனார் அவர்களின் ஹதீஸை விளங்கி திருக்குர்ஆனையும் அவ்ன் நாயகரையும் வழிகாட்டும் அதிகாரிகளாக ஆக்கிக் கொண்டேன்.

25-26. இனிவரும் எல்லா குத்புமார்களும் எனது மகாமை (ஸ்தானம்) நெருங்கி வருபவர்களே எனக்கூறிய மக்களின் அடைக்கலம் கௌது நாயகத்தின் திருப்பேரரே.

27-28. மேலும் அவர்கள் உள்ளம் இறந்து போன மற்றும் உயிரோட்டமுள்ள அனைவருடனும் (அவர்கள்) உள்ளார்கள்.

அவர்களை நேசம் வைத்த அனைவருக்கும் அவர்களது மைதானத்தில் கூடாரம் உண்டு.

29. அவ்வாறே (கௌஸ் நாயகம் போன்றே) எமது வாழ்க்கையிலும் எமது காலத்திலும் நீங்களே உள்ளீர்கள்.

30. எமது பகுதி- தகுதியில் உள்ள அனைவருக்கும் நீங்களே அடைக்கலம்.

31-32. எனது உள்ளத்தில் இவ்வுலக சூழலைச் சிந்திக்கும் போது

இவ்வுலக வாழ்வு எப்படி இருந்தாலும் அதை நான் பொருட்படுத்த மாட்டேன்.

33-34. எனது மறுவுலக முடிவுகளின் திடுக்கங்களை நினைவு கூறும்போது எனது பாதுகாவலரே உம்மைக் கொண்டு உதவி தேடுவேன்- உம்மை கொண்டே உதவி தேடுவேன்.

35-36. அல்லாஹ்வைச் சேர்ந்தோருக்கு இவ்வுலகு- அவ்வுலகு என எங்கே உள்ளது? அதிகாரம் படைத்த அல்லாஹ்வை தவிர்த்து அனைத்தும் சமமானது.

37-38. இரவு முழுவதும் பாவங்களை மன்னிக்கும்படி விண்ணப்பிக்கிறேன். வேண்டுகோள் மூலம் எனது பாவமன்னிப்பை ஆதரவு வைக்கிறேன்.

39-40. பாவம் உடையோருக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் திருக்குடும்பத்தினரே அட்சயப் பாத்திரம்.

எங்களுக்கும் எங்களைப் போன்றோருக்கும் நீங்களே சிபாரிசு ஆவீர்கள்.

41-42. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிலே தன்னை அழித்து மறைத்துக்கொண்ட எத்தனையோ பேர் உள்.

அவர்கள் ஒப்புக்கொள்ளப்பட ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பேருதவியைத் தக்க வைத்துக் கொண்டனர்.

43-44. உயர்ந்த இறை ஒன்றித்தல் எனும் விடா முயற்சியை எங்களுக்கும் உம்மிலிருந்து அன்பளிப்புச் செய்யுங்கள்.

பேரழகு- மாட்சிமையுடைவர்களில் என்னை இணையுங்கள்.

45- 46. நல்லடியார்களின் காலங்களில் கலீல் நாதரின் கூட்டத்தினர் (வாழும்) காலம் மணமானது.

மகத்துவமிக்க இறையின் அனுகூலங்களைக் கொண்டு அவர்களின் செயல்பாடுகள் அலங்காரமானது.

47-48. மக்களின் கருவூலமே! மூலத்திற்கெல்லாம் மூலமாக உம்மின் பக்கம் ஒன்றிக்கும் நெருக்கத்தை எனது ஆதாரமாக எமக்கு கொடை அளித்திடுவாயாக.

49-50. இறையின் ஸலவாத்துகள் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்ள மீதுண்டாகும்.

51. சிறந்து முழுமையான ஸலாமாகிறது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் திருக் குடும்பத்தார் மீதும் மார்க்க நட்சத்திரங்களான அவர்களின் திருத் தோழர்கள் மீதும் உண்டாகுக.

அந்த இறைவன் மிகப் பெரும் பொறுப்பாளன். அல்லது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மிகப் பெரும் பொறுப்பாளர்.

52. நமது அடைக்கலமாக ஜீலிய் (ரலி), அவர்களின் இரகசியத்தை அல்லாஹ் பரிசுத்தமாக்குவானாக.

53-54. இவ்வாறே அவர்களின் பிரதிநிதி கலீல் நாதர் அவர்களின் இரகசியத்தையும் பரிசுத்தமாக்குவானாக ஆமீன்.

அவர்கள் பரிபூரண நிலவாகவும் உள்ளமையின் சூரியனாகவும் திகழ்கிறார்கள்.

## இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் முரீதாவும், திருச்சி மர்ஹூம், ஹெச். அப்துல் கரீம் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் மனைவியும், ஏ. முஹம்மது மீரான் (கேம்ப்-குவைத்) ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் தாயாரும், என். சயீது முஹம்மது ஆலிம் மிஸ்பாஹி ஹக்கிய்யுல் காதிரிய் - முஹம்மது அனஸ் ஹக்கிய்யுல் காதிரிய் ஆகியோரின் மாமியாரும், முஹம்மது ராவுத்தர் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் சகோதரியுமான ரோஜாஅம்மாள் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் 1.6.2021 செவ்வாய் அன்று வஃபாத்தானார். அன்றே திருச்சி துருப்பு பள்ளிவாசல் கப்ருஸ்தானில் நல்லடக்கம் நடைபெற்றது. அல்லாஹ் அன்னாரின் பிழைகள் பொறுத்து சுவனப்பேறுகளை அருள்வானாக! ஆமீன்.

# அறிவும் தெளிவும்!

நேசரின் நேசன் **N.M.R.** ஆலிம் நூரி– திருச்சி.

ஒருவருக்கு அறிவும், தெளிவும், எப்படி கிடைக்கிறது என்று சொன்னால்! ஞானகுருமார்கள் மூலமாக, அவர்களின் ஆசியின் மூலமாக, அவர்களின் நெருக்கத்தின் மூலமாகவே கிடைக்கும். நம் படிப்பின் மூலமாக, நம் சிந்தனைகளின் மூலமாக அல்ல. அவர்களின் நிலைபாடுகள் வேறு, நம் நிலைபாடுகள் வேறு.

அறிவும் அதுவே. அதன் தெளிவும் அதுவே. இப்படி இருக்க நாம் எங்கே? அவர்கள் எங்கே? அவர்கள் பிரபஞ்சத்தின் நாயகர்கள், இதனால்தான் இறைவசனம் கூறுகிறது.

*அல்லாஹ், தான் விரும்பியவர்களுக்கே அறிவுஞானத்தைக் கொடுக்கின்றான். எவர் அறிவு ஞானத்தை பெற்றுக் கொண்டாரோ! உறுதியாக எல்லாவிதமான சிறப்புகளையும் பெற்றுக் கொண்டவர் ஆவார், இவ்விஷயம் சிந் தனையாளர்களுக்கே புரியும். (அல்குர்ஆன்– 3– 269)*

ஆக, ஞானக் கடலாக ஞான உதிப்பாக இருப்பவர்களே! ஞான மேதைகள்.

இதுசம்பந்தமான ஒரு செய்தி. ஒருமுறை ஹழ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் தலைமைக்கு கீழ் ஆயிரக்கணக்கான ஸஹாபாக்கள், அமர்ந்திருந் தார்கள்.

அத்திருச்சபைக்கு ரோம நாட்டிலிருந்து, ஒரு தூதர் வந்து அமர்ந்தார், வந்தவர் கலீபா அவர்களிடம் கலீபா அவர்களே! என்னுடைய சில வினாக்களுக்கு பதில் கூறுக எனக் கூறி தன்னுடைய வினாக்களைத் தொடுத்தார்.

ஒரு மனிதர் இருக்கிறார். அவர் சுவனத்தை ஆதரவு வைக்க மாட்டார். நரகத்தைப் பற்றிய பயம் அவரிடம் இருக்காது, இறைவனையும் பயப்படமாட்டார்– ருகூவு, சுஜ்து செய்ய மாட்டார், பிஸ்மி கூறி அறுக்கப்படாத இறைச்சியை சாப்பிடுவார். உதிரத்தை சாப்பிடுவார், கண்ணால் பார்க்காத விஷயத்திற்கு சாட்சியாக இருப்பார். இந்தத் தன்மை உள்ளவர் யார்? என்று தன் வினாவை முடித்தார்.

உடனே கலீபா அவர்கள் தங்களுக்கு அருகிலே அமர்ந்திருந்த ஹழ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், உமரே! இந்த வினாவுக்கு பதில் கூறுக என்றார்கள். உடனே ஹழ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த தன்மைகள் நிறைந்த மனிதர், இறை மறுப்பாளர் என்று முழங்க சபை அமைதி பெற்றது.

இத்திருச்சபைக்கு தாமதமாக வந்த ஞான கருவூலம் ஹழ்ரத் அலி (ரலி) வந்தார்கள், அமர்ந்தார்கள். சபையோரின் பார்வை இவர்களையே நோக்கி இருந்தது.

இதை அறிந்த கலீபா அவர்கள் ரோம் தூதரை விளித்து! அன்பரே, தாங்கள் வினாவை மறுபடியும் கூறுவீர் என்று கூற, சபையில் மீண்டும் அதே வினா. இப்பெழுது கலீபா அவர்கள், அறிவின் சிகரமே! இந்த வினாவுக்கு அறிவார்ந்த தெளிவான விடையை சபையோருக்கு அள்ளித் தாரும் என்று கூற, அதுகேட்டு நாவும், உள்ளமும் இனிக்க இனிக்க ஓர் அறு சுவையான பதிலைப் படைத்தார்கள் ஹழ்ரத் அலி (ரலி) அவர்கள்.

இதோ இந்த அம்சமுள்ள மனிதர்; அல்ல புனிதர்... இறைநேசர்! என்று கூற களைகட்டியது சபை. ஏன் முன் பதிலுக்கு அப்படி நேர்மாற்றமான பதில்? அதிர்ந்தது சபை. சபையோர், அறிவு ஞானமே! எங்களுக்குத் தெளிவு படுத்துங்கள் என்று கூற, அப்போது வாய் மலர்ந்து ஹழ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறத் தொடங்கினார்கள்.

ஒரு மனிதர் சுவனத்தை ஆதரவு வைக்க மாட்டார் என்றால், அவர் சுவனத்திற்காக இறைவனை வணங்க மாட்டார், இறைப் பொருத்திற்காகவே என்று பொருள். இரண்டாவது: நரகத்தை பயப்படமாட்டார் என்றால் பாவம் செய்யமாட்டார் என்று பொருள். மூன்றாவது: அல்லாஹ்வை பயப்பட மாட்டார் என்றால் மாற்றம் புரிந்தாலல்லவா பயப்பட வேண்டும். அல்லாஹ் தங்களுக்கு தண்டனை கொடுத்து விடுவான் என்பதை நினைத்து பயப்படமாட்டார்கள் என்று பொருள். ருகூவு, சுஜூது செய்யமாட்டார் என்றால் தொழுக மாட்டார் என்ற பொருளல்ல ருகூவு, சுஜூது இல்லாத தொழுகை ஜனாஜா தொழுகையாகும். இந்தத் தொழுகையை இறைநேசர் அதிகம் தொழுவார்கள்.

அடுத்து, அறுக்கப்படாத பிராணி சாப்பிடமாட்டார் என்றால், அறுக்கப்படாத பிராணி என்பது மீனாகும். இறைநேசர்கள் மீனை விரும்பிடுவார்கள் இதை சாப்பிடுவது ஹராமா? ஆக அறுக்கப்படாத பிராணி மீனாகும். அடுத்து, உதிரத்தை சாப்பிடுவார் என்றால் வெட்டுக்கிளியை சாப்பிடுவார் என்று பொருள். வெட்டுக் கிளியை சமைத்துச் சாப்பிடலாம். பார்க்காத விசயத்திற்கு சாட்சியாக இருப்பார் என்றால் இறையைக் கண்டதில்லை சுவனம், நரகம் இப்படி மறைவான விஷயங்கள் நிறையே இருக்கின்றன.

இந்த விஷயங்கள் அனைத்தும் உண்மைதான் என்பதில் நம்மை விட அவர்கள் மன உறுதியுடன் இருப்பார்கள் எனக் கூறினார்கள்.

இந்த அருமையான அறுசுவையான பதிலைக் கேட்டு நெகிழ்ந்து போனார்கள் சபையோர்கள்.

இதை அமைதியாகக் கேட்டு கொண்டிருந்த ஹழ்ரத் உமர் (ரலி) அவர்கள், உயர்ந்த சப்தத்துடன்,

“அறிவின் சிகரம் அலி (ரலி) அவர்கள் இல்லை யென்றால் இந்த உமர் அழிந்திருப்பேன்” என்று கூறினார்கள். இதை ஹழ்ரத் உமர் (ரலி) அவர்கள் அடிக்கடி கூறிய விஷயம் கிதாபுகளிலே ஏராள ம் உண்டு. ஆக, அறிவும் தெளிவும் எங்கே துவங்கி எங்கே முடிந்தது என்பதை நாம் புரிந்தோம் அறிந்தோம். இதுவே, உண்மையின் உண்மை. குறிப்பாக : அஹ்லு பைத்தினர்கள், ஞான மேதைகளின் தகுதி தராதாரம் இதுவே ஆகும் என்பனவே நமக்குப் பாடம்.

***மரணத் தருவாயில் முஸ்லிம் பெண்ணுக்கு கலிமா சொல்லிக்கொடுத்த டாக்டர் ரேகா கிருஷ்ணன்.***

கோவிட்நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள சேனா மருத்துவ மனையின் கொரோனா வார்டில் ஐ.ஸி.யூ.வார்டில் சிகிச்சை பெற்றுவந்த கேரளா பட்டிக்காட்டைச்சேர்ந்த முஸ்லிம் பெண்மணியொருவரின் மரணவேளையில் கலிமா ஷஹாதா சொல்லிக்கொடுத்தார் அந்த மருத்துவமனையில் பணிபுரியும் டாக்டர் ரேகா கிருஷ்ணன். இறப்புத் தருவாயில் உறவினர் யாரும் பக்கத்தில் இல்லாத காரணத்தால் அப்பெண்மணிக்கு தமே கலிமாவை சொல்லிக் கொடுத்துள்ளார். லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர்ரஸூலுல்லாஹ் என கடைசி நேரத்தில் கூறுவது பாக்கியம் மிகுந்த செயலாகும். தாயைப்போன்ற பரிவுடன் கலிமாவுடன் அப்பெண்ணை மறுமைக்கு வழியனுப்பிய டாக்டரின் வாஞ்சையான செயல் அனைவரையும் நெகிழவைத்துள்ளது.

***வீர மங்கை!***

முஸ்தபா ஹஸன் அல்ஆபித் என்ற ஃபலஸ்தீனப் போராளி உயிர்துறந்த போது அவர் மனைவி உம்மு காலித் அவர்கள் சொன்ன வார்த்தைகள் நமது நெஞ்சைச்சுடும்.

என் கண்கள் அழாது. என் உள்ளம் கவலை கொள்ளாது. உங்கள் பிரிவை எண்ணிக் கவலை கொள்ளவில்லை. அல்ஹம்து லில்லாஹ். நீங்கள் விரும்பியதைப் பெற்றுக்கொண்டீர். என் பிரச்னை என்னவென்றால், அவர் எனக்கும் முன்பாக உயிர்த்தியாகம் செய்துவிட்டார். அவர்மட்டும் அதைப்பெற்றுக் கொண்டார்.அவரது நான்கு குழந்தைகளையும் போராட்டம் மற்றும் தியாகத்தின் பாதையில் வளர்ப்பேன்.

நாங்கள் அனைவரும் மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு அர்ப்பணம். சர்வ வல்லமையுள்ள அல்லாஹ்வுக்கு அர்ப்பணம் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள். யா அல்லாஹ்! உன்னைப் பொருந்திக் கொண்டோம். யா அல்லாஹ்! நீ எங்களைப் பொருந்திக் கொள்வதற்காக எங்கள் உயிரையும் எடுத்துக் கொள்!

# மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ரஹ்)

*M. சிராஜுதீன் –திருச்சி.*

காயல்பட்டினத்திலிருந்து விடைபெற்றுக்கொண்டு நாகைக்குப் புறப்பட்டார்கள். அவர்களுடன் அவர்களின் மூத்த மகனாரும் உடன் சென்றார்கள். அங்கே சிலகாலம் தங்கிவிட்டு கீழக்கரைக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் புறப்பட்டது ஹிஜ்ரி 1276 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் 22 ஆம் நாள் ஆகும். கிடைத்த வாகனங்களில் ஏறியும், கால் நடையாகவும் அவர்களின் பயணம் தொடர்ந்தது. அப்படி வரும் வழியில் புதுப்பட்டினத்தில் அவர்கள் தங்கினார்கள்.

அங்கு அவர்கள் சாய்ந்திருந்த போது உறக்கமும், விழிப்பும் அற்ற நிலையில் அவர்களுக்கு ஒரு காட்சி தென்பட்டது. அச்சமயம் அவர்கள் வாயிலிருந்து ஓர் அரபி பைத் வெளிப்பட்டது.

*“ஃபஸாரத் பிஹுக்மில்லாஹி ஸாரத் ஸவ் ஜத்தீ, இலா ஜன்னத்தில் ஃபிர்தௌஸி அய்யத்தி ஜன்னத்தி”*

அதாவது,

*“என் அன்பு மனைவி, சாரா துன்பம் மிகுந்த, இவ்வுலகை விட்டு நீங்கி இன்பச் சுவனம் புகுந்துவிட்டார். அச்சுவனமோ மிக மிக அழகும் வனப்பும் வாய்ந்ததாகும். அதன் மாண்பையும் மகிமையையும் வார்த்தைகளால் விவரிக்க முடியாது”.*

அருகில் இருந்த இவர்களது மூத்த மகனார் அழத் தொடங்கி விட்டார்கள். மறைந்ததாக வெளிப்பட்ட அரபி பைத் அவர்கள் தாயாரைப் பற்றியது அல்லவா? ஆலிம் அவர்கள் மகனார் அழுவதைக் கண்டு, “மகனே! ஏன் அழுகிறீர்கள்?” என்று கேட்டார்கள். “சற்று முன் தங்கள் வாயிலிருந்து என் அன்புத் தாயார் மறைவுபற்றி பைத் ஒன்று சொன்னீர்களே, அதைக் கேட்டவுடன் எனக்கு துக்கம் அடக்க முடியாமல் அழுகையாக வெளிப்பட்டு விட்டது” என்று அழுது கொண்டே கூறினார்கள்.

அதற்குமேல் அங்கு தங்கப் பிடிக்காமல் உடனே கீழக்கரை நோக்கி புறப்பட்டு விட்டார்கள். வாகன வசதிகள் போதுமான அளவு இல்லாத காலம் அது. அதனால் அவர்கள் ஊர் வந்து சேரும்போது சாரா அம்மா அவர்களின் பொன்னுடல் விண்ணுலகத்தின் தலை வாயிலான கபுரில் வைக்கும் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது.

தகவல் பரிமாற்றமும் அவ்வளவாக இல்லாத காலம் அது. மகனார் அம்மாவை கபுரில் வைத்துவிட்டது கண்டு கதறி அழுதுவிட்டார்கள். ஆலிம் அவர்கள் மௌனமாக நின்றுகொண்டிருந்தார்கள். சற்று நேரத்தில் அடக்கம் முடிந்து அனைவரும் வீடு திரும்பிவிட்டார்கள். *(வலம் வருவார்கள்)*

## இமாம் ஷாதுலி நாயகம் ரலியல்லாஹு அன்ஹு!

♦ ஷவ்வால் தொடங்கி துல்கஃதா வரை உலகமெங்கும் ஞாபகப்படுத்தப்படுகிறவர்கள் குதுபுல் அக்பர் இமாம் அபுல் ஹஸன் சாதுலி நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள். ஹிஜ்ரி 593-ஆம் ஆண்டு (கி.பி. 1195ஆம் ஆண்டு) ஷவ்வால் மாதம் பிறை 10ஆம் தேதி, இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பரம்பரையில், அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அருந்தவப் புதல்வராக ஆப்ரிக்காவின் சப்தா என்னும் நகரத்தில் கிமாரா என்னும் சிற்றூரில் அவதரித்தார்கள். இளமையிலேயே மார்க்கக் கல்வியில் தேர்ந்த அவர்கள், கடலிலும் பரந்த அறிவுடையவர்களாகத் திகழ்ந்தார்கள். ஷரீஅத்துக் கலையில் மேதைமை கொண்டிருந்ததுபோலவே, மஃரிபா என்னும் மெய்ஞ்ஞானக் கலையிலும் ஞானக் கடலாகவே திகழ்ந்தார்கள் இமாம் அபுல் ஹஸன் சாதுலி நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.

♦ ஒருமுறை இமாம் சாதுலி நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஷைகு குதுபு அப்துஸ்ஸலாம் இப்னு மஷீஷ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம், தாங்கள் இவ்வளவு பெரிய ஞானியாக இருக்கிறீர்களே, நீங்கள் ஒரு கிதாபு கோர்வை செய்யக் கூடாதா? தங்களுக்குப் பின்னால் இந்த ஞானம் இல்லாமல் போய்விடுமே என்று வினவப்பட்டது. அதற்கு, ஷைகு மஷீஷ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், நான் ஓர் ஈத்த மரம் வளர்த்து வருகிறேன். அது பிற்காலத்தில் வளர்ந்து பரந்து பெரும் விருட்சமாகி, உலகெங்கும் பயனுள்ள கனிகளைக் கொடுக்கும் என்று இமாம் சாதுலி நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார்கள். அதுமட்டுமல்ல, ஷைகு மஷீஷ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஒரே சீடர் இமாம் சாதுலி நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மட்டும்தான். வேறு எவரையும் அவர்கள் தம் சீடராக ஏற்றுக் கொள்ளவில்லை.

♦ தங்கள் ஷைகுநாதரின் வாக்கின்படியே இமாம் சாதுலி நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உலகமெங்கும் போற்றப்படும் இமாமாகப் புகழ்பெற்றதோடு, ஷாதுலியாத் தரீக்கா உருவாக்கிய தலைவராகவும் திகழ்கிறார்கள்.

♦ இமாம் சாதுலி நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பெயரில் ஷாதுலியா தரீகா அழைக்கப்பட்டாலும் அதன் உண்மையான பெயர் தரீகதுஷ்ஷுக்ர் என்பதாகும். **-தகவல் : இபுனு கிபுலா ஹள்ரத், திருச்சி.**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# திருமண (நிக்காஹ்) அழைப்பிதழ்

பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்).

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பேரருளாலும், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் துஆ பரக்கத்தாலும் அவர்களின் திருப்பேரர் **குத்புஸ்ஸமான், ஷம்ஷூல் வுஜூது, ஜமாலிய்யா அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹூஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம்** அவர்களின் நல்லாசியாலும் நிகழும் ஹிஜ்ரி 1442 **ஆம் ஆண்டு துல்கஃதா** பிறை 14 **26.06.2021 சனிக்கிழமை காலை 11. மணிக்கு மேல் 12 மணிக்குள் முபாரக்கான நன்நேரத்தில்**

---

தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன் பட்டினம் (மர்ஹூம்) தோனா. முகைதீன் அப்துல் காதர் மரைக்காயர் (மர்ஹூம்) **S.A.** லத்தீப் ஆகியோரின் பேரனும் எங்களுடைய இளைய புதல்வனுமான தீன்குலச் செல்வன்

## J. முகம்மது அப்துல் காதர் M.B.A.,

**மணமகனுக்கும்**

கரூர் மாவட்டம், பள்ளபட்டி, ஆட்டுக்கால் (மர்ஹூம்) ஹாஜி. **A.A.** மைதீன் பாட்சா (மர்ஹூம் **K.A.**ரைசூல் இஸ்லாம் அவர்களின் பேத்தியும் **A.M.** முபாரக் அலி அவர்களின் புதல்வியுமான தீன்குலச் செல்வி

## A.M. பாத்திமா நவ்சின் M.Com., மணமகளுக்கும்

---

இன்ஷா அல்லாஹ் நிக்காஹ் (திருமணம்) பெரியோர்களால் நிச்சயித்த வண்ணம் சென்னை-10 கீழ்ப்பாக்கம், நெ.17, பால்ஃபோர் ரோட்டில் உள்ள **(CSI Bains School) LITE திருமண மஹாலில்** நடைபெறும் நிக்காஹ்விற்கும் அதன் பின்னர் நடைபெறும் விருந்திற்கும் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் வருகை தந்து மணமக்ககளை வாழ்த்தி அவர்களின் ஹக்கில் துஆ செய்து சிறப்பித்துத்தருமாறு அன்புடன்அழைக்கின்றோம்.

தங்களன்புள்ள...

**O.M.C. ஜெய்லானி** ஹக்கிய்யுல் காதிரிய்

**J. ஹாரிஷா பேகம்** ஹக்கிய்யுல் காதிரிய்

எண்.13/33, டிரைவர் தெரு, புதுப்பேட்டை.

சென்னை- 2.

**Mob- 9444276651**

அவ்வண்ணமே கோரும்...

**தோனா குடும்பத்தினர்**

**V.A. சையது இப்ராகிம் குடும்பத்தார்**

**V.S. அப்துல் ரகுமான்**

**M. அப்துல் குத்தூஸ் குடும்பத்தார்**

தங்களன்புடன்

**மதிஹா & சரிஹா**

**அன்பைக் கொடுத்து அன்பளிப்பைத் தவிர்க்கவும்**

*நீங்கா நினைவுகள்!*

# தீர்க்க தரிசன மகிமை!

*இப்னு மீரான் - திருச்சி.*

**ந**மது கண்மணி ஷெய்கு நாயகம் அவர்களின் அருமைத் தகப்பனார் அஷ்ஷெய்கு குதுபுல் அக்தாப் ஜமாலிய்யா செய்யிது யாசீன் மௌலானா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இலங்கை தலைமன்னாரிலிருந்து கப்பல் ஏறி இந்தியாவுக்கு தனுஷ்கோடி துறைமுகம் வந்து இறங்குவார்கள். அதன்பின் அந்த கப்பலை எதிர்பார்த்து புறப்படும் 'போட் மெயில்' என்று அழைக்கப்படும் ரயிலில் ஏறி அவர்களின் இந்திய விஜயத்தை மேற்கொள்வது வழக்கம்.

இதுபோன்ற ஒரு சமயத்தில் நமது அருமை குதுபுல் பரீது யாஸீன் நாயகம் (ரலி) அவர்கள், மறைந்த கலீபா வலீய்யுல் ரஹிம் கோவிலூர் நாட்டாண்மைக்காரர் அப்துல் ரஹீம் அவர்களுக்கு எழுதிய பட்டோலையில்,

மஹ்பூபே! நாம் இன்று இத்தனை மணிக்கு (மணிநேரம் நினைவில் இல்லை) திண்டுக்கல் ரயில்வே ஸ்டேஷனுக்கு வரும் 'போட் மெயிலில்' வருகிறோம். அங்கு எம்மை வந்து சந்திக்கவும். இந்த நமூனாவில் தான் இப்பூவுலகில் ஹக்கின் தரிசனம் நடைபெற்று வருகிறது என்று எழுதியிருந்ததை நானே பார்த்திருக்கிறேன்.

இப்படியாக நமது அருமை குதுபுல் அக்தாப் யாஸீன் நாயகம் (ரலி) அவர்களின் இந்திய விஜயம் நீண்ட நெடுங்காலமாக நடந்து வந்தததாம்.

1962 ஆம் ஆண்டு அவர்களின் இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு இலங்கைக்கு திரும்பும் போது திண்டுக்கல் கலீபா **S.** அப்துல் கறீம் அண்ணன், கலீபா **A.P.** ஷாஹுல் ஹமீது மாமா இவர்களைப் பார்த்து "இன்ஷா அல்லாஹ் அடுத்த ஆண்டு நாம் இலங்கை ஜாஃப்னா விமான நிலையத்திலிருந்து விமானம் மூலம் திருச்சி விமான நிலையம் வந்து இறங்குவோம்". என்று சொல்லிச் சென்றார்களாம் அதன்படியே 1963 ஆம் ஆண்டு இறுதியில் திருச்சி வந்து இறங்கி எங்கள் பங்களாவில் முதன் முதலாக வந்து தங்கி அவர்களது பிரயாணத்தைத் தொடங்கினார்கள். அவர்களது இந்தியப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு திரும்பும் போது எங்கள் பங்களாவில் வந்து தங்கி விட்டு விமானம் மூலம் இலங்கை புறப்பட்டார்கள். இதன் காரணமாக எங்கள் பங்களா "யாஸீன் மன்ஜில்" என்று அழைக்கப்பட்டது.

1964 ஆம் ஆண்டு இறுதியில் இந்த கோரப் புயல் வந்து தனுஷ்கோடி என்ற துறைமுகம், ஊர் எல்லாம் அழிந்து போனது.

**இந்தச் சம்பவத்தை அந்தக் காலத்தில் நமது அருமைக் கண்மணி குத்புல் அக்தாப் நாயகம் அவர்களின் தீர்க்கதரிசனமாக புகழ்ந்து அனைவரும் பேசுவார்கள்.**

**அந்த ப் பழைய உண்மை சம்பவம்**

இதோ இன்னும் சில மணி நேரங்களில், இன்றிரவுக்குள் "நிவர்" புயல் கரயைக் கடந்துவிடும். அடர் மழையும், காற்றும் அடித்துக் கொண்டிருக்க, இந்த இயற்கைச் சீற்றத்திற்கு நடுவே, நம்மிடம் மொபைல் போன் முதல், நமக்குச் சொந்தமான பல சாட்டிலைட்டுக்குள், வயர்லெஸ் கருவிகள், இலவச வாட்ஸ்அப் தொடர்பு, மத்திய அரசின் அவசரக்கால உதவிகள் வரையென நம்மைக் காப்பாற்ற, பாதுகாப்புடன் சந்தோஷமாக இருக்கிறோம். நாம் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். ஆம். பழைய நினைவொன்றை, இன்றைய தலைமுறையினர் நினைத்துப் பார்க்க வேண்டிய நேரமிது.

சுமார் 55 ஆண்டுகளுக்கு முன், தனுஷ்கோடியில் நடந்தது என்ன?

இன்றைய தலைமுறையினர் சிலருக்கு மட்டுமே தனுஷ்கோடி என்ற ஊர் தமிழகத்தில் இருந்திருக்கிறது என்று தெரியும்.

தனுஷ்கோடி என்ற தொலைந்து போன ஊரின் பின்னே இருக்கும் அந்த கடுந் துயரத்தைப் பற்றி இன்று யாருக்கும் தெரியாது.

ராமேசுவரத்தில் இருந்து சுமார் 21 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது தனுஷ்கோடி.

தனுஷ்கோடியில், அப்போது கோவில்கள், துறைமுகம், மருத்துவமனை, பள்ளிக்கூடம், தபால் நிலையம், ரயில்வே குடியிருப்புகள், ரயில் நிலையம், எனச் சகலமும் இருந்தன. புராண காலந்தொட்டே மிகவும் புகழ் பெற்ற ஊர் அது.

மதுரை, சென்னை உள்ளிட்ட ஊர்களில் இருந்து வரும் ரெயில்கள், ராமேசுவரம் வருவது கிடையாது. நேராக தனுஷ்கோடி சென்று விடும். ராமேசுவரத்திற்கு வர விரும்புபவர்கள் பாம்பனிலிருந்து 'சன்டிங்க்' என்று சொல்லக்கூடிய தனி ரெயிலில் ராமேசுவரம் வருவர்.

யாருமே எதிர்பார்க்காத தினமாக 23.12.1964- ந் தேதி அமைந்தது.

அன்று இரவில் சுமார் 120 கிலோ மீட்டர் வேகத்திற்கு மேல் வீசிய கடும் புயலாலும், பலத்த மலையாலும், மன்னார் வளைகுடா கடல் பகுதியில் இருந்து சுமார் 20 அடி உயரத்திற்கு எழும்பிய ராட்சத அலைகள் தனுஷ்கோடியை மூழ்கடித்து சின்னாபின்னமாக்கியது.

தனுஷ்கோடியின் அன்றைய தினமானது, தொடக்கம் முதலே வழக்கத்தை விட அதிகமான காற்றையும் மழையையும் எதிர்கொண்டிருந்தது.

கடலுக்குள் செல்வதற்கு யாருக்கும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கவில்லை.

வங்கக் கடலில் தோன்றிய புயல் எங்கு, எப்போது கரையைக் கடக்கப்போகிறது என்பது பற்றியும் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

இன்று, நம்மிடமுள்ள மிக நவீன உபகரணங்கள் எதுவுமே, அன்று நம் மூத்தோரிடம் இல்லை.

அவர்களைப் பொறுத்தவரை புயல் மையம் கொண்டுள்ளது, காற்றடிக்கும், மழை பெய்யும், கடலுக்குள் செல்லக் கூடாது என்றளவில் மட்டுமே விழிப்புணர்வு இருந்தது.

புயல் எச்சரிக்கை என்பது தெரியும், ஆனால் புயல் எங்கு கரையைக் கடக்கப் போகிறது என்பதை எல்லாம் அறிந்து கொள்ளும் வசதி அந்நாளில் இல்லை.

புயலின் தீவிரம் இந்த அளவிற்கு இருக்கும் என்பது புயல் கரையைக் கடந்த பின் மட்டுமே தெரிந்து கொண்டாக வேண்டிய காலக்கட்டம் அது. அது வரை, நடக்கவுள்ள கொடூரத்தை அறியாது வாழ்ந்தனர் நம் முன்னோர்.

பாம்பனில் இருந்து தனுஷ்கோடி வரை செல்லும் தனுஷ்கோடி– பாம்பன் பாஸன்ஜர் சரியாக 11.55 க்கு தனுஷ்கோடி நோக்கிய தனது (இறுதி) யாத்திரையைத் தொடங்கியது.

ரயில் தனுஷ்கோடியை நெருங்கும் சில நூறு மீட்டர்களுக்கு முன், காற்றின் வேகம் தீவிரம் அடைந்து, கடல் கொந்தளிக்கத் தொடங்கி இருந்தது.

இஞ்சின் டிரைவர் ரயில்வே சிக்னல் வேலை செய்யவில்லை என்பதை அப்போதுதான் கவனித்து இருந்தார்.

தனுஷ்கோடியை புயல் தாக்கத் தொடங்கி இருந்ததால் அனைத்து தொடர்பு சாதனங்களும் செயல் இழந்து இருந்தன. ரயில்வே சிக்னல், தந்திக் கம்பங்கள் என எதுவும் வேலை செய்யவில்லை.

டிரைவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

‘பலத்த மழையின் காரணமாக சிக்னல் செயல் இழந்து இருக்கும்’ என்று கணிக்கத் தெரிந்தவருக்கு வரப்போகும் அபாயத்தைப் கணிக்கத் தெரியவில்லை.

எங்கும் இருள் சூழ்ந்து இருக்கவே, ரயில் வருவதைத் தெரிவிக்க... தன்னிடம் இருந்த விசிலை ஊதிக் கொண்டே வண்டியை நகற்ற ஆரம்பித்தார்.

இந்த நிமிடம், இந்த நொடி, அந்த 115 பேரும் என்ன மனநிலையில் இருந்திருப்பார்கள்.........

ஊழிக்காலமெனப் பாய்ந்த, ஆழிப் பெருங்காற்றும் அதைத் தொடர்ந்த ராட்சதப் பேரலையும், இரயிலை வாரி அணைத்துக் கொண்டு, கடலுக்கடியில் மூழ்கடித்துக் கோரத்தாண்டவமாடியது.

ரயிலில் பயணித்த அத்தனை பயணிகளும் ஜலசமாதி ஆயினர்.

ரயில் நிலையத்திற்கும் ரயிலுக்குமான சில நூறு மீட்டர் இடைவெளிகளில் இந்தக் கொடூர சம்பவம் நிகழ்ந்து விட்டது.

ஒரு சில நிமிடங்கள் அவர்களுக்குக் கிடைத்திருக்குமானால் அந்த பாஸன்ஜர், ரயில் நிலையத்தை அடைந்திருக்கும்.

அத்தனை உயிர்களும் மிகப் பத்திரமாகக் காப்பாற்றப்பட்டிருக்கும்.

'விதி சற்றே வலியது', அதனால் தானோ என்னவோ, அவர்கள் உயிர் பிழைக்க வழி கொடுக்காமல் தன்னுடன் அழைத்துக் கொண்டது.

தனுஷ்கோடிக்கு முன்பே, புயல் தலைமன்னாரை நெருங்கி இருந்தது, தலைமன்னாரும் பல ஆயிரம் உயிர்களை புயலுக்கு காவு கொடுத்திருந்தது.

தலைமன்னார் கடலில் கலந்து உயிர்கள், தனுஷ்கோடிக் கரையில் உடலாக ஒதுங்கத் தொடங்கியிருந்தன.

தனுஷ்கோடியிலோ நிலைமை இன்னும் பரிதாபம், மின்கம்பங்கள் அறுந்து ஊரே இருளில் மூழ்கியது. கட்டிடங்களின் கூரைகள் பிய்த்துக் கொண்டு பறக்கத் தொடங்கின..

அவசரகால தகவல் தொடர்புச் சாதனமான தந்திக் கம்பங்களும் அறுந்து தொங்கின.

"இன்னது நடக்கிறது...." என்று தகவல் சொல்லக் கூட அங்கிருந்தவர்களுக்கு வழி இல்லாமல் போனது.

கடல் அலைகள் பல அடி உயரத்திற்கு எழும்பி ஊரையே மிரட்டிக் கொண்டிருந்தன. நடுநிசியில், ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த பலராலும்...... ஆழிக்காற்றின் வேகத்தை உணர முடியவில்லை. உறக்கத்தில் உயிரைத் தொலைத்தவர்கள் அநேகம் பேர்.

இருந்தும் அதிகரித்த காற்றின் வேகமும், அலைகள் மூலம் ஊருக்குள் புகுந்த தண்ணீரும் வரப் போகும் அசம்பாவிதத்தை எடுத்தியம்பத் தொடங்கின.

இயற்கை கொடுத்த இந்த 'அபாய அறிவிப்பை' உணர்ந்து கொண்டவர்கள் வேகமாக செயல் படத்தொடங்கினார்கள்.

அங்கு குடியிருந்த மக்களில் பெரும்பாலானவர்கள் மீனவர்கள் என்பதால் குழந்தைகள் பெண்களை சுமந்து கொண்டு பாதுகாப்பான இடம் தேடி நகரத் தொடங்கினார்கள்.

இதில், 'நீச்சல் காளி' என்னும் மீனவர் மட்டும் தனியொரு ஆளாக பல உயிர்களைக் காப்பாற்றி இருக்கிறார்.

அடைமழையில் அவர்களுக்கு கிடைத்த ஒரே ஒரு பாதுகாப்பான இடம் உயர்ந்த மணற்குன்றுகள் மட்டுமே.

அதைத் தவிர அவர்களுக்கு வேறுவழி இல்லை. உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அங்கு தான் நின்றாக வேண்டும்.

இதைத் தவிர இன்னுமொரு முக்கியமான இடமும் சில நூறு உயிர்களைக் காப்பாற்றயது...

ஒரு ரயில் ஒருநூறு உயிர்களைக் காவு வாங்கியது.

மறுபுறம் ஒரு ரயில் சில நூறு உயிர்களைக் காவல்காத்தது.

ஆம் பெரும்பாலான மக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தேடி ஓடிய இடம் தனுஷ்கோடி ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்த ரயிலைத் தான்.

மொத்த மக்கள் கூட்டமும் ரயிலை நிரப்பி கதவு ஜன்னல்களை இறுக மூடிக் கொண்டது.

ஊர் முழுவதும் வெள்ளமும் சோகமும் ஒரு சேர பரவத் தொடங்கி இருந்தது.

தங்கள் குழந்தையை, துணையை, உறவினரைத் தேடத் தொடங்கியது.

தங்கள் உயிர் காப்பாற்றப்பட்டது என்ற மகிழ்ச்சியைவிட தொலைந்து போன உயிர்கள் பற்றிய பயமும் சோகமும் அவர்களை வாட்டியது.

எதிர்பாரா சம்பவங்கள் அவர்களை குழப்பத்தில் தள்ளியது. கூச்சலும் குழப்பமும் நிறைந்த தனுஷ்கோடி தன்னுடைய ஒட்டுமொத்த ஆர்ப்பரிப்பையும் அந்த ஒரு இரவில் வெளிப்படுத்தி அடங்கியது.

இவை எதுபற்றியுமே அறியாமல் தமிழகம் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தது.

அடுத்த நாள் பொழுதுபுலர்ந்த பொழுது கூட தனுஷ்கோடியின் நிலைமை குறித்து ஒருவரும் முழுவதுமாக அறிந்திருக்கவில்லை.

அந்த நாட்களில் ராமேஸ்வரம் செல்வதற்கு தரைப்பாலம் கிடையாது. படகுப் போக்குவரத்தும், ரயில் சேவையும் மட்டுமே.

மற்றுமொரு கொடுமையான விஷயம் குடிநீரும் உணவுப் பொருட்களும் தமிழகத்தில் இருந்து செல்லும் ரயில்கள் மூலமாக மட்டுமே கொண்டு சென்று கொண்டிருந்தார்கள்.

புயல் பாம்பன் பாலத்தையும் பதம் பார்த்திருந்தது.

தண்டவாளங்கள் அறுந்து தொங்கிக் கொண்டிருந்தன. ஒட்டு மொத்த தனுஷ்கோடியும் எவ்வித தொடர்பும் இன்றி தனித்து விடப்பட்டிருந்தது.

குடிக்கும் நீருக்குக் கூட வாயில்லாத ஆழி சூழ் உலகமாக மாறி இருந்தது தனுஷ்கோடி.

விஷயம் கொஞ்சம் கொஞ்சமாக பரவத் தொடங்கியது. தமிழக அரசாங்கம் விழித்துக் கொண்டது.

அன்றைய முதல்வர் மாண்புமிகு. அமரர். பக்தவத்சலம் உடனடியாக செயல்படத் தொடங்கினார்.

அன்றைய அவர் சார்ந்த காங்கிரஸ் அரசின் உதவியை நாடினார்.

நிலைமையைப் புரிந்து கொண்ட இந்திய அரசும் போர்கால அடிப்படையில் செயல்படத் தொடங்கியது.

தனுஷ்கோடி துயரச் சம்பவத்தை "தேசியப் பேரிழப்பு" என்று அறிவித்தது.

இராணுவம் தொடங்கி முப்படைகளும் தனுஷ்கோடி நோக்கி விரைந்தன.

முதல் தேவை நீரும் உணவும், வான்படையின் ஹெலிகாப்டர்கள் மூலமாக உடனடியாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டன.

இந்தியக் கப்பல் படையின் மீட்புக் குழுவும் களத்தில் இறங்கியது.

அடுத்த நாளும் மழை நின்றபாடில்லை. தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்த காரணத்தால் மீட்புப் பணியில் தாமதம் ஏற்பட்டது.

“காப்பாற்றப்பட்ட மக்களை விட கண்டெடுத்த சடலங்களே அதிகம்” என்று மீட்பு பணியில் ஈடுபட்டவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

எஞ்சிய தனுஷ்கோடியை “சாரதா” என்னும் கப்பல் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்ல விரைந்தது.

உயிர் பிழைத்த மக்கள் அனைவரையும் மதுரை அரசுப் பொது மருத்துவமனையில் அனுமதித்த பின்னும் கூட அரசாங்கத்தால் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

மூன்றாம் நாள் தான் அரசாங்கத்திற்கு நினைவு வந்தது. ‘ஒரு பயணிகள் ரயிலைக் காணவில்லை’ என்று.

மீண்டும் தேடல் தொடங்கியது.

இறுதியாக முடிவுக்கு வந்தனர்.

புயலில் இரயில் கடலோடு கடலாக கலந்திருக்க வேண்டுமென்று. கடலுக்குள் இறங்கித் தேடத் தொடங்கினர்.

இரயிலின் பெரும்பாலான பாகங்கள் அதாவது இரும்பு தவிர்த்த மற்றவை அனைத்தும் கடலோடு கடலாக அடித்துச் செல்லப்பட்டுவிட்டது.

அதில் பயணித்த 115 பயணிகளும் மாண்டுவிட்டதாக அறிவித்தனர்.

பேரழிவைப் பார்வையிட வந்த முதல்வர் பக்தவத்சலம் தன்னால் ‘ரயிலின் சில பாகங்களைக் காண முடிந்தது’ என்று குறிப்பிடுகிறார்.

தனுஷ்கோடியில் வெள்ளம் வடிய நான்கு நாட்களுக்கு மேல் ஆகியது.

இந்தியாவை நிலை குலைய வைத்த சம்பவம் பற்றி உலகமே பரபரப்பாகப் பேசத் தொடங்கியது.

தனுஷ்கோடியில் அடித்த புயலின் வேகம் மிக அதிகம். தலைமன்னாரைக் கடக்கும் பொழுது மணிக்கு 150 கி.மீ. வேகத்தில் நகர்ந்த புயல், தனுஷ்கோடியை தாக்கும் பொழுது மணிக்கு 250 கி.மீ. வேகத்தில் தாக்கியுள்ளது.

விளைவு 1500 மக்களின் உயிரைக் குடித்தது.

சொல்லப் போனால் மூன்று முழு கிராமங்கள் இன்றும் கடலடியில் தான் இளைப்பாறிக் கொண்டுள்ளன.

தனுஷ்கோடி துறைமுகத்தையும் சேர்த்து, “ஆசியாவின் இருபதாம் நூற்றாண்டுப் பேரிழப்பாக” ஐ.நா. சபை இந்த சம்பவத்தை அறிவித்தது.

# ⑥ சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின்

# 85 ஆம் உதய நாள் விழா

## காணொளிக் கூடல் உரைகள்!

*உரைகள் தொகுத்தவர்: அன்ஸாரி -இப்னு கிப்லா ஹள்ரத் - திருச்சி.*

**தரீகத்துல் ஹக்கியத்தில் காதிரியா தலைமை கலீபா. H.M. ஹபீபுல்லாஹ் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...**

இந்த மகாப் புனித சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் 85 ஆவது உதய தினவிழாவிலே நாம் மன்றாடி இறைவனைக் கேட்டுக் கொள்வது, அவர்களது உடல்நலம் பூரணமாகச் சுகமாகி, அவர்களும் அவர்களது திருக்குடும்பத்தார் அனைவரும் நன்றாக இருக்க வேண்டியும் – இந்த மீலாது விழாவுக்கு தலைமை தாங்கியிருக்கும் மவுலானா அவர்களுக்கும் முன்னிலை வகிக்கக்கூடிய திருக்குடும்பத்தார்களுக்கும் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் முரீதுப் பிள்ளைகளுக்கும் எனது அன்பு ஸலாத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி தஆலா பரக்காத்துஹு.

**நமக்கான நாயகர்**

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் மஜ்லிசுகளின் மூலமாகவும், ஆக்கங்கள் மூலமாகவும் சொற்பொழிவுகள் மூலமாகவும் நமக்குச் சொன்னவற்றில் முக்கியமானது, நான் தான் இந்தத் துன்யாவிலும் ஆகிராவிலும் உங்களுக்காக இருப்பேன் என்று அருளியது தான். இந்த விஷயத்தைப் பலமுறை சொல்லிக் கேட்டிருக்கின்றேன். ஆக, துன்யாவுக்கும் அவர்கள் தாம் இருக்கிறார்கள்... ஆகிறாவுக்கும் அவர்கள் தாம் இருக்கிறார்கள் என்றால், இது எப்படி சாத்தியம்? என்று சிந்தித்தேன். முரீதும் எனது நண்பருமான ஒருவர் மூலம் எனக்கு விடை கிடைத்தது.

எனது நண்பர். சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் ஆரம்பகால முரீது. சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் மீது அதிக அன்பு கொண்டவர். சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களும் அவர் மீது அன்பு பாராட்டி தான் நடந்து கொள்வார்கள். சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் இந்திய விஜயத்தின்போது, அவர் தமது வீட்டுக்கு சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களை அழைத்துச் செல்வது வழக்கம். எப்பொழுது அவர் சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களை அழைத்துச் சென்றாலும், அந்த முரீதுடைய தகப்பனார் அங்கு வீட்டில் இருப்பார், சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களைப் பார்ப்பார். ஸலாம் சொல்ல மாட்டார். முலாகத் உள்ளிட்ட மரியாதை செய்ய மாட்டார். எனினும் சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களை எதிர்ப்பவரும் அல்லர். சங்கைக்குரிய வாப்பா

நாயகமவர்கள் அந்த முரீதுடைய இல்லத்திற்குச் செல்லும்போது, அவர் வெளியே சென்று விடுவார். சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் வீட்டிலிருந்து கிளம்பியதும், வீட்டுக்கு வந்துவிடுவார். இதுவே தான் வழக்கமாக நடந்து கொண்டிருந்தது.

**மண்ணறையிலிருந்து விண்ணப்பம்**

சிறிது காலத்தில், அந்த முரீதுடைய தகப்பனார் வஃபாத்தாகிவிட்டார். அடுத்த நான்கைந்து மாதங்களுக்குப் பிறகு அந்த முரீதுடைய அவரது தகப்பனார் கனவில் வந்து, மகனே நான் இங்கு மிகவும் சிரமப்படுகின்றேன், பலவகைகளில் தொல்லைகள் அனுபவிக்கின்றேன். உங்களுடைய வாப்பா நாயகமவர்களிடம் சொல்லி இதிலிருந்து மீளச்செய்யுங்கள் என்று சொன்னார். இதைக் கனவிற் கண்ட அந்த முரீது பதறிப்போய் சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களுக்குக் கனவு செய்தியைக் கடிதமாக எழுதி வேண்டினார். அந்தக் காலத்தில் தற்போதுள்ளபோல போன் வசதிகளெல்லாம் இல்லை. சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களைக் கடிதம் வாயிலாகவே தொடர்பு கொள்ள முடியும். ஒரு கடிதம் சென்று அதற்குப் பதில் வந்து சேர பத்து இருபது நாட்களுக்கு மேலாகிவிடும்.

அதே மாதிரி, சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களிடமிருந்து பதில் வந்தது. அருமைப் பிள்ளையே! உங்களுடைய தகப்பனார் நிலை பற்றி எழுதித் தெரிவித்திருந்தீர்கள். இப்போது அவர் சிரமப்படாமல் நம்முடைய குடையின்கீழ் அவர் நன்றாக, சுகமாக இருக்கின்றார் என்பதாக சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் பதில் பட்டோலை வந்தது. அந்தக் கடிதம் வாசித்து அவர் நிம்மதியடைந்தாலும் முழுமையாக நிம்மதியடையவில்லை. அதற்குப் பிறகு, பத்து பதினைந்து நாட்களில் தமது தகப்பனாரை மீண்டும் கனவிற் கண்டார். அப்போது அந்தப் பெரியவர் தமது மகனான இந்த முரீதுப் பிள்ளையிடம், மகனே வாப்பா நாயகமவர்களின் கிருபையினாலும் உனது முயற்சியினாலும் நான் தற்போது மிகவும் சுகமாக இருக்கின்றேன். வாப்பா நாயகமவர்களின் குடையின் கீழடியில் நான் அவர்களுடைய காவலில் இருந்து கொண்டிருக்கின்றேன் என்று கூறினார். அப்போது முரீது முழுமையான நிம்மதியைப் பெற்றார்.

**இம்மைக்கும் மறுமைக்கும்**

ஆகவே, துன்யாவுக்கும் ஆகிறாவுக்கும் நானே என்றருளிய சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் அருள் வாக்கு சத்தியமானது – சாத்தியமானது என்பதற்கு இஃதொரு பெரிய உதாரணம். அவர்களால் எங்கிருந்தாலும் யாருக்கும் உதவி செய்ய முடியும் என்று அவர்கள் அந்தச் சம்பவத்தின் மூலம் நிகழ்த்திக் காட்டியுள்ளார்கள்.

சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், நிறைய சொல்லிக் கொண்டே போகலாம். சுருக்கமாகச் சொல்லி முடிக்கின்றேன். அவர்கள் இந்திய விஜயத்தில் இருக்கும்போது அடிக்கடி சொல்லும் வார்த்தை, நான் நித்திய ஜீவனாக இருப்பேன் என்பதாகும். இந்த நித்திய ஜீவனாக இருப்பேன் என்று அவர்கள் சொல்வதற்கு நமக்கு அர்த்தம் புரியவில்லை. இதற்கான விளக்கம் திருமுல்லைவாசலில் கிடைத்தது.

## நித்திய ஜீவன்

திருமுல்லைவாசல் தர்ஹாவுக்கு சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் செல்லும்போதெல்லாம் நாமும் சென்று விடுவோம். அங்கே ஒரே தருணத்தில் இரண்டு சன்னிதானங்களைச் சந்திக்கக்கூடிய வாய்ப்பிருக்கும். அவ்வாறு ஒருநாள், தர்ஹாவின் ஹாலில் மஜ்லிஸில் சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். நாங்களெல்லாம் சுற்றி அமர்ந்து அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தோம். அப்போது, நான்கைந்து பேர் சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களைக் கடந்து, சங்கைக்குரிய யாஸீன் மௌலானா நாயகமவர்களின் ரவ்ளா ஷரீஃபுக்குள்ளே சென்றார்கள். அப்போது சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் சத்தமிட்டுச் சொல்கின்றார்கள் : ஓ மனிதர்களே! நீங்கள் உங்களுக்குச் சேர்வதைப்போல சொத்தில் பங்கு பெண்களுக்கும் இருந்தால் அதைக் கொடுத்து விடுங்கள். அவ்வாறு நீங்கள் கொடுக்கவில்லையென்றால் மிகவும் சிரமப்படுவீர்கள். இறுதித் தீர்ப்பு நாளிலே நான் தான் தீர்ப்பளிப்பேன். அப்போது உங்கள் முகத்தை யாரிடம் காட்டுவீர்கள்? என்றார்கள். அப்பொழுதான் எனக்கு நித்திய ஜீவன் என்பதற்கான பொருள் விளங்கியது.

## ஐக்கியமே ஜெயம்

மேலும், இந்தச் சம்பவம் நடந்த அடுத்த நாள், அதேபோன்று தர்ஹா ஹாலில் சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் மஜ்லிஸ் நடந்து கொண்டிருந்தது. சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் அனைவரும் கேட்டுக் கொண்டிருந்தோம். அப்போது இரண்டு பேர் வந்தார்கள். உட்கார்ந்தார்கள். அடுத்த ஐந்து நிமிடத்தில் பாங்கு சொல்லும் சத்தம் கேட்டது. வந்த இரண்டு பேரும் எழுந்து சென்று விட்டார்கள். அந்த இரண்டு பேர் வந்திருந்த சமயத்தில் நான் ஒரு கேள்வியைக் கேட்டிருந்தேன். வாப்பா நாயகமே! என்று சொல்கிறார்களே... ஐக்கியமாகுதல் என்று சொல்கிறார்களே, குருவும் சீடனும் ஐக்கியமாகுதல் என்றால் என்ன பொருள், வாப்பா நாயகமே? என்று கேட்டிருந்தேன். ஐக்கியம் என்றால், நாம் இருக்கிறோம்... எங்களோடு நீங்கள் இருக்கிறீர்களே இது தான் ஐக்கியம் என்று கூறிவிட்டு, அந்த இரண்டு பேர் எழுந்து போனபிறகு... இப்படி எழுந்து போவது ஐக்கியமில்லை. எம்மிடம் வந்துவிட்டால் நாம் என்ன சொல்கின்றோமோ அதைத்தான் செய்ய வேண்டும். அதுதான் ஐக்கியம் என்று சொன்னார்கள். நான் கேட்ட சந்தேகத்திற்கான பதில் எனக்கு முழுமையாகக் கிடைத்துவிட்டது.

மேலும், சங்கைக்குரிய வாப்பா நாயகவமர்கள் நாம் இறுதிவரை இருந்து உங்கள் அனைவருக்கும் உதவி செய்து கொண்டிருப்பேன். நித்திய ஜீவனாக இருப்பேன் என்று அருளியதன் பொருள் எனக்கு அன்று விளங்கியது. அல்ஹம்துலில்லாஹ்!

# அலாவுத்தீன் அலீ அஹ்மது ஸாபிரீ (ரஹ்)

முற்றுகையோ நீடித்துக் கொண்டிருந்தது. குளிர் படுத்தும் கொடுமையோ தாங்க முடியாததாக இருந்தது. சுல்தானுக்கு வைகறை தொழுகை தொழ உளூச் செய்வதற்கு வெந்நீர் தேவைப்பட்டது. எனவே அடுப்பு மூட்ட சருகுகள் தேடி சுல்தானின் பணியாளன் கூடாரம், கூடாரமாகப் போனான். ஆனால் எங்குமே சருகுகள் இல்லை. ஆனால் ஒரே ஒரு கூடாரத்தில் மட்டும் சருகுகள் ஏராளமாக இருந்தன. அங்குச் சென்ற அவன் அங்கிருந்த ஒரு படைவீரரிடம் அனுமதி பெற்று சருகுகளை அள்ளி வந்து அடுப்பு மூட்டி சுல்தானுக்கு வெந்நீர் தயாரித்துக் கொடுத்தான். இவ்வாறு சில நாட்கள் தொடர்ந்து நடந்தன.

ஓரிரவு சருகு அள்ளி வருவதற்கு அப்பணியாள் அக்கூடாரத்திற்குச் சென்றபொழுது அப்படை வீரரைக் காணவில்லை. எனவே அவரைத் தேடி அருகிருந்த ஓர் ஏரிக்கு வந்தான் அவன். அங்கு அந்தப்படைவீரர் உளூச் செய்து கொண்டிருந்தார். இந்த நடுக்கும் குளிரில் எவ்வாறு இவர் இந்த ஏரிநீரில் உளூச் செய்கிறார் என்று அவனுக்கு வியப்பு ஏற்பட்டது. அவன் அவர் உளூச் செய்த இடத்தில் போய் ஏரிநீரை எடுத்துப்பார்த்தான். அந்த இரவும் அவன் மறைந்திருந்து அவர் உளூச் செய்து சென்றபின் அவ்விடத்திலுள்ள நீரில் கைவைத்துப் பார்த்தான். சூடாக இருந்தது. இதனை சுல்தானிடம் வந்து கூறினான். அது கேட்டுப் பெரிதும் வியப்புற்ற சுல்தான் தாமே அதனைச் சோதித்தறிய விரும்பி அடுத்த இரவு அங்கு வந்து மறைந்திருந்து அப்படை வீரர் உளூச் செய்து சென்றபின் அவர் உளூச் செய்த இடத்திலுள்ள தண்ணீரைத் தொட்டுப் பார்த்தார். இது மட்டும் வெந்நீராக இருந்தது.

இச்செய்தியை வேறு எவரிடமும் கூறக் கூடாதென்று தம் பணியாளனை எச்சரித்துவிட்டு தம் பாசறை மீண்ட சுல்தானுக்கு இதன்பின் மனம் அமைதி பெறவில்லை. தம்மிடம் அந்தச் சிற்றூரில் வாழ்ந்த வலீ கூறிய வலீ இவராகத் தாம் இருக்குமோ என்ற ஐயம் அவருடைய உள்ளத்தில் இலேசாக இரேகை விடலாயிற்று. எனினும் திட்டமாக இவர் தாம் என்று எவ்வாறு கருதுவது என்று மறுகணம் அவர் எண்ணினார். அவ்விதமாயின் இவர் எவராக இருப்பார்? ஏன் நம்படையணியில் சேர்ந்துள்ளார்? இவர் இறையருட் பெற்றவராக இருப்பின் இத்தனை நாட்கள் முற்றுகை நீடிப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பாரா என்ன? என்ற பல்வேறு

எண்ணங்கள் அவரின் உள்ளக்கோட்டையை முற்றுகையிட்டு அதன்மீது தாக்குதல் நடத்தின. எனினும் பொறுத்திருந்து பார்ப்போம் என்று முடிவுக்கு வந்தார் அவர்.

இறுதியாக அவர் எதிர்பார்த்துக் காத்திருந்த இரவும் வந்து சேர்ந்தது. சூறாவளி சுழற்றிச் சுழற்றி வீசியது. அத்துடன் சேர்ந்து மழையும் சோவென்று பெய்தது. அனைத்துக் கூடாரங்களும் கீழே விழுந்து விட்டன. ஆனால் ஒரே ஒரு கூடாரம் மட்டும் கீழே விழாது தலைநிமிர்ந்து நின்று கொண்டிருந்தது. அங்கே காற்றும் மழையும் விடுத்த அறைகூவலைத் துச்சமாய்க் கருதி ஒரு மெழுகு திரி 'மினுக், மினுக்' கென்று அணையாது எரிந்து கொண்டிருந்தது.

அக்கூடாரத்தை நோக்கி நடந்து சென்ற சுல்தான் அங்கு ஒரு பெரியார் அமைதியே உருவாய் அமைந்து திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருப்பதைக் கண்டதும் சற்று நேரம் மலைத்து நின்றுவிட்டார். ஏன்? அன்றிரவு ஏரிக்கரையில் பார்த்த அதே படைவீரர்தாம் அவர்.

தண்ணீரை வெந்நீராக மாற்றிய அவருக்கு ஏன் தம்தோல்வியை வெற்றியாக மாற்றியமைக்க முடியாது என்று தம்மையே தாம் கேட்டுக் கொண்ட சுல்தான் தம் படையணியில் சேர்த்து பணியாற்றும் அந்த இறைநேசச் செல்வரின் முன் சென்று கைகட்டி நின்றார். திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருந்த அப்பெரியார் சற்று நேரம் காத்து தலையை நிமிர்த்தி ஏறிட்டுப் பார்த்தார். சுல்தான் அவருக்கு ஸலாம் உரைத்து தமக்கு வெற்றி அருள இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டிக் கொண்டார். அவ்விதமே இறைஞ்சிய அவர். அதன்பின் சுல்தானை நோக்கி, "போம்; நாளை உம்படை வெற்றி பெறும்" என்று நன்மாராயம் நவின்றார்.

பொழுது புலர்ந்தது, சுல்தானின் படைகள் சித்தூர் கோட்டை மீது என்றுமில்லா வண்ணம் மும்முரமாகத் தாக்குதல் நடத்தின. அப்பொழுது ஒரு பெரியார் குதிரை மீது இவர்ந்து வந்து கீழே இறங்கி கோட்டைக் கதவின் மீது தம் நெஞ்சை வைத்து அழுத்தித் தம் குருநாதர் தமக்குப்போதித்த இஸ்முல் அஃலத்தைக் கூறி துஆச் செய்தார். அடுத்த கணம் கதவு படார் என்று திறந்தது. முஸ்லிம் படைகள் அல்லாஹு அக்பர் என்று ஒலி எழுப்பிய வண்ணம் சித்தூருக்குள் நுழைந்தன. இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 690 ஆம் ஆண்டு ரபீயுல் அவ்வல் பிறை பதின்மூன்று வியாழக்கிழமை யிலாகும்.

இப்பொழுது தான் அப்பெரியாருக்கு– ஷம்சுத்தீன் துர்க் (ரஹ்) அவர்களுக்கு– தம் குருநாதர் கூறியது நினைவுக்கு வந்தது. தம் குருநாதரின் வாணாள்

அன்றைய தினம் முடிவுற்றுவிட்டது என்பதை அவர்கள் விளங்கிக் கொண்டார்கள். அடுத்தகணமே அவர்கள் தம் படையணிப் பதவியைத் துறந்து கல்யர் நோக்கிப் பயணமானார்கள்.

சற்றுத் தொலைதான் சென்றிருப்பார்கள். வழியில் ஒரு கல் தடுக்கி அவர்கள் கீழே விழுந்தார்கள். எழுந்தார்கள். என்ன வியப்பு! அவர்களால் தம் கண்களையே நம்ப இயலவில்லை. கல்யரின் அவர்கள் தம் குருநாதரின் புனித உடலின் அருகே நின்று கொண்டிருந்தனர். அவர்களின் உடலிலிருந்து ஜலாலியத்தின் ஒளி வெளிவந்து நாலா திசைகளிலும் பரவிக் கொண்டிருப்பதையும் அவர்களின் உடலை ஒரு சிங்கம் பாதுகாத்துக் கொண்டு நிற்பதையும் அது தம்மைப் பார்த்ததும் வாலை ஆட்டிக் கொண்டு சென்று விட்டதையும் கண்டனர்.

இதன்பின் தம் குருநாதரின் புனித உடலை அணுகி, அப்பொழுதலர்ந்த செந்தாமரையையும் வென்ற நிலையில் இலங்கிய அவர்களின் முகத்தைத் தரிசித்தபின் அவர்களை நல்லடக்கம் செய்வதற்கான அலுவல்களை மேற் கொள்ளலாயினர். அப்பொழுது திடீரென பச்சை முகமூடி அணிந்த இருவர் புரவிமீது வந்து இறங்கினர். அவர்களில் ஒருவரின் கையில் கஃபன் துணி இருந்தது. மற்றொருவரின் கையில் கஸ்தூரியும் குவளையும் இருந்தன. இவர்களின் ஒருவர் சிக்கி முக்கிக் கல்லினால் நெருப்பு மூட்டி தண்ணீரைச் சுடவைத்து ஸாபிர் (ரஹ்) அவர்களின் புனித உடலைக் குளிப்பாட்டினார். மற்றவர் கஃபனிட்டு ஜனாஸா தொழுகை தொழ வைத்தார். ஷம்சுத்தீன் துர்க் (ரஹ்) அவர்கள் அத்தொழுகையில் கலந்து கொண்டு தொழுது முடித்துத் திரும்பிப் பார்த்த பொழுது ஆயிரக்கணக்கானோர் அணி அணியாக அதில் கலந்து கொண்டதைக் கண்டு பெரிதும் வியப்பெய்தினர். பின்னர் அவர்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து ஸாபிர் (ரஹ்) அவர்களின் புனித உடலை நல்லடக்கம் செய்தனர்.

அதன்பின் பச்சை முகமூடி அணிந்த இருவரும் திரும்பிப் போக முற்பட்ட பொழுது ஷம்சுத்தீன் துர்க் (ரஹ்) அவர்கள் தொழுகைக்குத் தலைமை தாங்கி நடத்தியவரின் குதிரையின் கடிவாளத்தை இழுத்துப் பிடித்து "தாங்கள் எவரெனக் கூறுங்கள், தங்களின் முகத்திரையைத் திறந்து காட்டுங்கள் என்னிடம் எவரேனும் உம்முடைய குருநாதரின் ஜனாஸா தொழுகையை எவர்முன் நின்று நடத்தினார் என்று வினவின் நான் என்ன பதில் கூறுவது?" என்று வினயமாகக் கூறினர்.

அப்பொழுது அவர் தம் முகத்திரையைத் திறந்தார், நடப்பது நிசமா, பொய்யா என்று ஷம்சுத்தீன் துர்க் (ரஹ்) அவர்களால் நம்ப இயலவில்லை. ஸாபிர் (ரஹ்)

அவர்களின் மலர் முகமே அவர்களின் கண்முன் காட்சி வழங்கியது. அப்பொழுது ஸாபிர் (ரஹ்) அவர்கள் தம் மாணவரை நோக்கி "என்னைப் போன்ற மிஸ்கீன் (ஏழை)கள் தங்களின் ஜனாஸாத் தொழுகையைத் தாங்களே தொழவைத்துக் கொள்கிறார்கள்" என்று கூறினர்.

இப்பொழுது ஷம்சுத்தீன் துர்க் (ரஹ்) அவர்களுக்கு தாம் முன்னர் அவர்களிடம் கேட்ட கேள்வி நினைவுக்கு வந்தது. உடனே அவர்கள், ஸாபிர் (ரஹ்) அவர்களை நோக்கி, "ஷைகு அவர்களே! முன்னர் நான் தங்களிடம் ஃபனா, பகா பற்றி வினவிய பொழுது அதற்கான பதில் பின்னர் எனக்குக் கிடைக்கும் என்று கூறினீர்களே, அதனை இப்பொழுது கூறுங்கள்" என்று வேண்டினார்கள். அப்பொழுது ஸாபிர் (ரஹ்) அவர்கள் புன்முறுவல் பூத்த வண்ணம் தம் அடக்கவிடத்தைச் சுட்டிக் காட்டி அதுவே ஃபனா என்று கூறிப் பின்னர் தம்மைத் தொட்டுக்காட்டி இதுவே பகா என்று கூறினர்.

மீண்டும் ஷம்சுத்தீன் துர்க் (ரஹ்) அவர்கள் தம் ஆசானை நோக்கி "மறுபடியும் தங்களின் தரிசனம் எனக்கு எப்பொழுது கிடைக்கும்?" என்று வினவினர். அதற்கு அவர்கள் "நான் உம்மை இருமுறை சந்திப்பேன்" என்று கூறி அவற்றிற்கான நேரங்களையும் குறிப்பிட்டனர்.

"நல்லது; நான் இப்பொழுது எங்கே போக வேண்டும்?" என்று வினவினார்கள் ஷம்சுத்தீன் துர்க் (ரஹ்) அவர்கள்.

"பானிப்பட்டுக்கு" என்று மறுமொழி பகர்ந்தார்கள் ஸாபிர் (ரஹ்) அவர்கள்.

"அங்கு அபூ அலி கலந்தர் இருக்கிறாரே" என்று ஷம்சுத்தீன் துர்க் (ரஹ்) அவர்கள் கூறிய பொழுது, "நீர் அங்குச் சென்றதும் அவர் அங்கிருந்து கிளம்பிவிடுவார்" என்று பதிலிறுத்துவிட்டு ஸாபிர் (ரஹ்) அவர்கள் மறைந்துவிட்டார்கள்.

இதன்பின் தம் ஆசானின் ஆணைப்படி பானிப்பட் வந்து சேர்ந்த ஷம்சுத்தீன் துர்க் (ரஹ்) அவர்கள் அங்கு ஒரு சுவரின் நிழலில் அமர்ந்திருந்தார்கள். சின்னாட்கள் கழிந்தபின் ஒரு கிண்ணத்தில் பாலை நிரப்ப அதனை ஒருவரிடம் கொடுத்து அபூ அலீ கலந்தர் (ரஹ்) அவர்களிடம் அதனைக் கொடுத்துத் தம் ஸலாத்தையும் தெரிவிக்குமாறு கூறினர். அவ்விதமே அவர் செய்தார். அதனைப் பார்த்தும் புன்முறுவல் பூத்த அபூ அலீ கலந்தர் (ரஹ்) அவர்கள் அப் பால் கிண்ணத்தில் சில ரோஜாப் பூக்களைப் போட்டு பதில் ஸலாம் கூறித் திருப்பி அனுப்பினார்கள். அதைக் கண்டதும் ஷம்சுத்தீன் துர்க் (ரஹ்) அவர்களின் இதழ்க்கோடியில் முறுவல் மின்னி மறைந்தது.

இந்த இரகசியம் உரையாடலின் பொருள் விளங்காது அங்கிருந்தோர் அது பற்றி ஷம்சுத்தீன் துர்க் (ரஹ்) அவர்களிடம் வினவினர். அதற்கு அவர்கள், “பானிப்பட்டின் விலாயத் எனக்கு என் குருநாதரால் அருளப்பட்டது. அதில் வேறு எவருக்கும் உரிமையில்லை. அபூஅலீ கலந்தர் (ரஹ்) அவர்கள் நான் அனுப்பிய பாலின் மீது ரோஜாப் பூக்களை வைத்துத் திருப்பி அனுப்பியதன் மூலம் தமக்கும் பானிப்பட்டின் விலாயத்திற்கும் சம்பந்தமில்லை என்று மறைமுகமாகத் தெரிவித்துள்ளனர்” என்று கூறினர். பின்னர் சில நாட்கள் கழித்து அபூ அலீ கலந்தர் (ரஹ்) அவர்கள் பானிப்பட்டை விட்டும் நீங்கினர்.

ஷம்சுத்தீன் துர்க் (ரஹ்) அவர்கள் பானிப்பட்டில் அமர்ந்து ஆன்மீகச் செங்கோல் செலுத்திக் கொண்டிருந்தார்கள். ஒருநாள் அவர்கள் ஸம்அ என்னும் பேரின்ப இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். அப்பொழுது அவர்கள் தன்னுணர்வை இழந்தனர். இச்சமயத்தில் கம்பளி உடையணிந்த பக்கீர் ஒருவர் அங்கு வந்து ஷம்சுத்தீன் துர்க் (ரஹ்) அவர்களின் மாணவர்களை நோக்கி, நான் தங்களின் குருநாதரிடம் அவரை இருமுறை சந்திப்பதாக வாக்களித்திருந்தேன். ஒருமுறை இப்பொழுது ஆகிவிட்டது. மறுமுறை நான் பின்னர் வருவேன் என்று கூறிவிட்டுச் சென்றார்.

சற்று நேரத்தில் ஷம்சுத்தீன் துர்க் (ரஹ்) அவர்கள் தன்னுணர்வு பெற்றதும் அவர்களின் மாணவர்கள் இச்செய்தியை அவர்களிடம் கூறினார்கள். அப்பொழுது அவர்கள் என்ன கைசேதம்! என்ன கைசேதம்!! என் குருநாதரல்லவோ வந்துவிட்டுச் சென்றுள்ளார்கள் என்று தம்மையறியாமல் அலறினார்கள். இதன்பின் அவர்கள் எந்த ஸம்அ நிகழ்ச்சியிலும் கலந்து கொள்வதில்லை.

இதன்பின் இரண்டாவது முறை ஷம்சுத்தீன் துர்க் (ரஹ்) அவர்கள் இறப்புப் படுக்கையில் கிடக்கும் பொழுது ஸாபிர் (ரஹ்) அவர்கள் தம் மாணவருக்கு தரிசனம் அளித்தனர். அக்கணமே அவர்களின் ஆன்மா அவர்களின் உடலை விட்டும் பிரிந்தது.

இப்பொழுது நாம் கல்யர் சென்று அங்குள்ள நிலையைப் பார்த்து வருவோம். ஸாபிர் (ரஹ்) அவர்களின் இறப்பிற்குப் பல ஆண்டுகளுக்குப் பின்பும் கல்யர் பாழடைந்தே கிடந்தது. அவர்களின் அடக்கவிடத்தை அணுகவே மக்கள் அஞ்சினார்கள். துணிந்து சென்றவர்களை ஓர் ஒளிதோன்றி சுட்டெரித்தது. அடக்கவிடத்தைப் பராமரிக்க எருவமே முன்வரவில்லை. எனவே நாளடைவில் அதன் அடையாளமே இல்லாது மறைந்துவிட்டது. இவ்வாறு ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள் கழிந்தன.

ஹிஜ்ரி பத்தாம் நூற்றாண்டில் ஒரு நாள் அப்துல் குத்தூஸ் கங்கோஹி (ரஹ்) அவர்கள் தம் குருநாதரான காஜா அப்துல் ஹக் (ரஹ்) அவர்களின் அடக்கவிடத்தைப் பெருக்கித் துப்புரவு செய்து கொண்டிருக்கும் பொழுது அவ்வழியே சென்ற பெரியார் ஒருவர், நீர் நம்முடைய அடக்கவிடத்தையும் இவ்வாறு பெருக்கித் துப்புரவு செய்யும் என்று கூறிவிட்டுச் சென்றார். “நல்லது; அவ்விதமே செய்கிறேன்” என்று அவர்கள் பதிலுரைத்தார்களேயொழிய “தாங்கள் யார்?” என்று அவரிடம் கேட்கவில்லை.

“அவர் எவராக இருக்கும்?” என்று அவர்கள் பல நாட்கள் சிந்தித்தனர். எனினும் அவர் எவர் என்பதற்கான அணுவத்தனை துப்பும் அவர்களுக்குத் தென்படவில்லை.

ஒருநாள் அவர்கள் தம் குருநாதரின் அடக்கவிடத்தின் அருகே அமர்ந்து இதுபற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது அவர் தமக்கு முன் ஐந்தாவது குரு பரம்பரையிலுள்ள அலாவுத்தீன் அலீ அஹ்மது ஸாபிர் (ரஹ்) அவர்கள் என்று உள்ளுணர்வின் மூலம் தெரிய வந்தது.

இதன்பின் சில நாட்கள் கழித்து அப்துல் குத்தூஸ் கங்கோஹி (ரஹ்) அவர்கள் கால்நடையாகக் கல்யர் புறப்பட்டார்கள். கல்யரை நெருங்கியதும் ஒவ்வொரு பத்து அடிக்கும் இரண்டு ரகஅத் வீதம் நஃப்ல் தொழுகை தொழுதார்கள். அப்பொழுது ஓர் ஒளி தோன்றியது. அதுகண்டு அது ஸாபிர் (ரஹ்) அவர்களின் ஜலாலியத்தின் ஒளி என்பதை விளங்கிக்கொண்ட அவர்கள் தங்களின் பேரனான அப்துல் குத்தூஸ் தங்களின் அடக்கவிடத்தைத் தரிசிப்பதற்காக வந்துள்ளேன் என்று கூறினர். உடனே அந்த ஒளி மறைந்தது.

அப்துல் குத்தூஸ் கங்கோஹி (ரஹ்) அவர்கள் மீண்டும் நடந்து முன்னே சென்றார்கள். மீண்டும் அவ்வொளி தோன்றியது. முன்பு போல் அவர்கள் மீண்டும் கூறினார்கள். உடனே அவ்வொளி மறைந்தது.

இப்பொழுது அவர்கள் ஸாபிர் (ரஹ்) அவர்களின் அடக்கவிடத்தை நெருங்கிவிட்டனர். மீண்டும் அவ்வொளி தோன்றியது. மீண்டும் அவர்கள் முன்புபோல் கூறினார்கள். மீண்டும் அவ்வொளி மறைந்துவிட்டது.

அடுத்தகணம் ஸாபிர் (ரஹ்) அவர்கள் தம் அடக்கவிடத்திலிருந்து வெளியே வந்து அப்துல் குத்தூஸ் கங்கோஹி (ரஹ்) அவர்களை ஆரத்தழுவி “அப்துல் குத்தூஸே! நீர் என் ஆன்மீக வழியில் வந்ததனால் உம்மால் எம்மை அணுக இயன்றது. இல்லையேல், எவராலும் இயலாது” என்று கூறினர்.

அப்பெழுது அப்துல் குத்தூஸ் கங்கோஹி (ரஹ்) அவர்கள் தம் ஆன்மீக முப்பாட்டனாரை நோக்கி, "இறைவனின் நல்லடியார்கள் தங்களின் அடக்கவிடத்தைத் தரிசித்து நற்பேறு பெற விரும்புகிறார்கள். தங்களின் ஜலாலியத்தின் காரணமாக எவருக்கும் இங்கு வரத் துணிச்சலில்லை. தாங்கள் தங்களின் ஜலாலிய்யத்தை, ஜமாலிய்யத்தாக மாற்றிக் கொண்டால் உலகமே தங்களால் பயனடையும்" என்று தாழ்மையுடன் எடுத்துரைத்தார்கள்.

அப்பொழுது ஸாபிர் (ரஹ்) அவர்கள், "நல்லது; நாம் நம் ஜலாலியத்தைக் குறைத்துக் கொண்டோம்; இனிமேல் எவரும் இங்கு வந்து நற்பயன் பெறலாம்" என்று அருள் மொழி பகர்ந்தனர்.

இதன்பின் மக்கள் அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசிப்பதற்காக சாரி சாரியாக வரலாயினர். முகலாய மன்னர் ஜஹாங்கீர், அவர்களின் அடக்கவிடத்தின் மீது கட்டடம் எழுப்பினார். கல்யரிலும் மக்கள் குடியேறி வாழலாயினர். கல்யருக்கு புதுவாழ்வு பிறந்தது!

---

*நாட்டு நடப்பு!*

☐ மசூதிக்கு அடியில் கோயில் இருக்கிறதா என்று ஆராயத் தெரிந்தவர்களுக்கு மருத்துவமனைக்குள் ஆகிசிஜன் சிலிண்டர்இருக்கிறதா என்று ஆராயத் தெரியவில்லையே...!

☐ பாபரி மஸ்ஜித் இடிக்கப்படாமல் இருந்திருந்தால் ஒரு வேளை அயோத்தி மக்களுக்கு இன்று மருத்துவ மனையாக இன்று அமைந்திருக்கும்.

☐ நாய் குரைக்கிறதுக்கெல்லாம் பதில் சொல்ல முடியாது.

(எச். ராஜா பற்றிய கேள்விக்கு தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன்.)

☐ பிரதமர் மோடி பேசும்போது கண்ணீர் வடித்தார் என்ற செய்தியை முதலையின் படத்தைப்போட்டு பிரதமர் கண்ணீர் வடித்ததாக தி நியூயார்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

☐ தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நடந்த போராட்டத்தில் துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்ட 13 பேர்களின் குடும்பத்தினருக்கு பணிநியம ஆணையை வழங்கினார் தமிழக முதல்வர் ஸ்டாலின் –நாளிதழ் செய்தி–

☐ விபூதிப் பொட்டலங்கள் வழங்கிய கோயில்களையெல்லாம் உணவுப் பொட்டலங்கள் வழங்க வச்சிட்டாங்களே அதுதான் திராவிடம்.

---

**பொய்களை எளிதாக நம்பும் உலகம் உண்மையை நிரூபிக்க ஆதாரம் கேட்கும்!**

தொடர் ( 25)

# இனிக்கும் இறைமொழி

இறையருட் கவிமணி கா. அப்துல் கஃபூர் எம்.ஏ.

**தொழுவதன் முன்னர் தூய்மை வேண்டும்.**

*“விசுவாசிகளே! நீங்கள் தொழுகைக்குச் சென்றால் (அதற்கு முன்னர்) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரையில் உங்கள் இருகைகளையும் கழுவிக் கொள்ளுங்கள். (நீரைத் தொட்டு) உங்கள் தலையைத் தடவி மஸஹுச் செய்து கொள்ளுங்கள். அன்றி கணுக்கால் வரையில் உங்கள் இரு பாதங்களையும் (கழுவிக் கொள்ளுங்கள்).” (5 : 6)*

மனோவாக்கு காயம்– உள்ளம், உரை, உடல்– ஆகிய மூன்றன் தூய்மையே – உள்+மை – உண்மை. வாயின்– உரையின்– தூய்மை, வாய்மை மெய்யின் தூய்மை, மெய்ம்மை, இம்மூன்றும் இணைந்ததே முழுத் தூய்மை; திரிகரண சுத்தி. இஸ்லாம் நெறியின் வாழ்வியலில் இம்மூன்றும் ஒருசேரப் பொருந்தியிருக்கக் காணலாம். எடுத்துக்காட்டாக, இறை வணக்கமாகிய தொழுகையில் உள்ளத்திலிருந்து வெளிப்படும் எண்ணமும், வாயிலிருந்து வெளிப்படும் சொல்லும், மெய்யின் இயக்கமாகிய செயலும், பருந்தும் அதன் நிழலும்போல் ஒன்றித்து இயங்கவேண்டும். மனத்தில் இறைவனை நினைந்து, உரையினால் அவன் உயர்வினைப் புகழ்ந்து, உடலினால் நின்றும், குனிந்தும், சிரம்பணிந்தும், அமர்ந்தும் புரியும் வணக்கமே தொழுகையாகும். சிந்தையள்ளும் சீறாவின் காப்புச் செய்யுள், “திருவுருவாய், உணருருவாய், அருவுருவாய்” இலங்கும் வளர்காவன் முதலவனைப் பணிந்துள்ளி வாழ்த்துவதைப் பார்க்கின்றோம். மெய்யினால் பணிந்து, நெஞ்சினால் உள்ளி, வாயினால் வாழ்த்துவதே அதன் விளக்கமாகும். இவ்வாறாக முத்திறத்துத் தூய்மையே எத்திறத்தும் போற்றப்படும்.

இஸ்லாம் நெறியில், ஈமான் எனப்படும் நம்பிக்கை, அனைத்திற்கும் அடிப்படையாக அமையும். அத்தகைய ஈமானின் அரைப் பகுதியாக அமைவது, தூய்மையாகுமென நாயக நன்மொழி நவில்கின்றது. “அத்துஹுரு ஷத்ருல் ஈமான்” (சுத்தம் ஈமானில் பாதி) என்பது அவ்வெழில் மொழி. “தொழுகை சுவனத்தின் திறவுகோல்; சுத்தம் தொழுகையின் திறவுகோல்” என்பதாகவும், “தூய்மையில்லாத தொழுகை அங்கீகரிக்கப்படமாட்டாது” என்பதாகவும் அண்ணலார் அவர்கள்

அருளியுள்ளார்கள். நாயகக் கோமான் அவர்கள் நபிப் பட்டம் பெற்ற ஆரம்ப நாட்களில், அவர்களுக்கு வெளியான இறைவசனங்களுள் ஒன்று, "யா அய்யுஹல் முத்ததிர்" (போர்த்திக் கொண்டிருப்பவரே!) எனத் தொடங்கும். அதனைத் தொடர்ந்து. "(நபியே!) நீர் எழும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும், உமதிறைவனைப் பெருமைப்படுத்தும், உமது ஆடைகளைத் தூய்மையாக வைத்துக்கொள்ளும், அசுத்தங்களை வெறுத்துவிடும்" என்னும் வசனங்கள் இடம்பெற்றுள்ளன.

தூய்மையான உடலிலே தான் தூய்மையான ஆத்மா நிறைவுடன் இலங்க முடியும். புறத் தூய்மையே அகத் தூய்மைக்கு ஆதாரம். இறைவன் நோக்குமிடமும், அமரும் இடமும், அகமேயாகும். புறத்தைத் தூய்மையாக்கி விட்டு அகத்தை அசுத்தங்களின் பண்டக சாலையாக வைத்திருப்பது அறிவிலிகளின் செயலாகும். அதற்கொரு உவமையும் கூறப்படுவதுண்டு. இல்லத்தில் விருந்துக்காக வரும் பிரமுகரொருவரின் வருகையை முன்னிட்டு வீட்டின் வெளிப்புறத்தைத் தூய்மையாக்கி அலங்கரித்து விட்டு, வீட்டிற்குள் அவர் வந்து அமருமிடத்தில் நாற்றமெடுக்கும் அசுத்தங்களைக் குவித்து வைப்பது எவ்வாறு பொருந்தும்? தூய்மையின் நுட்பங்களையெல்லாம் நன்கறிந்தோன் இறைவன் ஒருவனேயாகும். ஆகவே இறைமொழியாக இலங்கும் திருமறையின் அடியொற்றியே இஸ்லாமிய நெறியில் அகத் தூய்மைக்கும் புறத் தூய்மைக்கு முரிய வழிகள் வகுக்கப்பட்டுள்ளன. நல வாழ்வுக்கு வழிகாட்டும் நுட்பமான கருத்துக்களை இஸ்லாம் நெறியின் சட்ட நிபுணர்கள் இனிதெடுத்துரைத்துள்ளனர். சிறுநீர் கழிப்பதற்குக் கூட உங்கள் மதத்தில் வரையறைகள் உண்டாமே எனக் கிண்டலாகக் கேட்ட ஒருவருக்கு, ஆம்; சிறு நீர் கழிப்பதற்குக் கூட எங்கள் நெறியில் வரையறைகள் வகுக்கப்பட்டுள்ளன எனப் பெருமிதத்துடன் முஸ்லிம் அன்பரொருவர் மறுமொழி கூறிய நிகழ்ச்சி ஈண்டு நினைவு கூரத்தக்கதாகும். கழிப்பறையில் நுழைவது முதற் கொண்டு காவலனை வணங்குவது வரையில்- நகம் வெட்டுவது முதற்கொண்டு படுக்கையில் படுத்துறங்குவது வரையில்- ஒவ்வொரு துறைக்கும் செயலுக்கும், வாழும் நெறியாகிய இஸ்லாம் வழிகாட்டுவதில் வியப்பில்லை.

கழிப்பறையுள் நுழையும் போது இடது காலையும், வெளிப்படும் போது வலது காலையும் முற்படுத்த வேண்டும். நுழையும்போது "அல்லாஹும்ம இன்னீ அவூது பிக மினல் குபுதி வல் கபாயிதி" எனக் கூறி ஆண்- பெண் ஷைத்தான்களின் சேட்டைகளை விட்டும் இறைவன்பால் பாதுகாப்புத் தேட வேண்டும். வெளிப்படும் போது, "அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்ஹப அன்னியல் அதா வ ஆஃபானி" எனக் கூறித் துன்பத்தைப் போக்கி நலமருளிய நாயனுக்கு நன்றி செலுத்த வேண்டும்

திறந்த தலையுடனும் காலணியின்றியும் கழிப்பறைக்குள் நுழைதலாகாது. கிப்லாவை எதிர் நோக்கியோ புறங்காட்டியோ இருத்தலாகாது. மேடான இடத்திலிருந்து கீழ்நோக்கிச் சிறுநீர் பெய்தல் வேண்டும். தண்ணீரிலும் பொந்துகளிலும், காய்த்திருக்கும் மரத்தின் அடியிலும், மக்கள் தங்கும் நிழல்களிலும், விளை நிலங்களிலும், நடைபாதைகளிலும், சமாதிகளிலும், மலசலம் கழித்தல் கூடாது. நின்று கொண்டு சிறுநீர் பெய்தல் நோய்களுக்கு காரணமாகும். முழங்கால்களை மடித்துத் தரையில் காலூன்றிச் சிறுநீர் கழிக்கும் போது, நீர்த் தாரையிலிருந்து தொடர்ந்து செல்லும் இரு நீர்க்குழாய்களும் மடிந்திருக்குமாதலால், நீர் முழுவதும் வெளிப்படாமல் தங்கியிருந்து எழுந்ததும் சிறு சொட்டுக்களாக வெளிப்படும், அதற்காத மண்ணாங் கட்டியையோ பொருத்தமான வேறு பொருளையோ இடக்கையில் வைத்து நீரை ஒற்றியுலர்த்தி, எழுந்து சில அடிகள் உலவி ஈரம் போக்கித் தண்ணீரால் கழுவ வேண்டும். அமிலமும் கழிவுப் பொருட்களும் மிகுந்த நோயும் நாற்றமும் பெருக்கும் நஜீசாக உள்ள சிறுநீரால், உடலோ உடையோ பாதிக்கப்படாமல் இருப்பதற்கு இஸ்லாம் வகுத்திருக்கும் இதுபோன்ற நல வழிகள் பலவாகும்.

நகம் வெட்டுதல் சுகாதார வாழ்வுக்கு எவ்வளவு இன்றியமையாத தென்பதை எடுத்துரைக்கத் தேவையில்லை. நகத்திற் கடியில் இடம் பிடிக்கும் நுண்கிருமிகள், நாம் உட்கொள்ளும் உணவின் வழியாக உடலுக்குள் சென்று பல நோய்களும் தோன்றுவதற்குக் காரணமாகி விடுகின்றன. ஆகவே நகத்தை வெட்டும் "வறுமை, குருடு, வெண் குஷ்டம், பைத்தியம் ஆகியவைகளை விட்டு விடுதலை பெற எவர் விரும்புகிறாரோ, அவர் வியாழன் அஸருக்குப் பின்னர் நகத்தை வெட்டிக் கொள்ளட்டும்" என்பது ஹலரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவித்துள்ள நபிமொழியாகும். நகம் வெட்டும் போது, வலது கை ஆட்காட்டி விரலில் தொடங்கிச் சிறுவிரல் வரையில் வந்து, பின்னர் இடது கைச் சிறுவிரலில் தொடங்கி முடித்து, இறுதியில் வலது கைப் பெருவிரலுடன் முடித்தல் வேண்டும். நறுக்கியெடுக்கும் நகங்கள், மதிப்பிற்குரிய மனித உடலின் ஒரு பகுதியாகையால், அவற்றைக் கண்டபடிச் சிதற விடாமல், ஒதுக்கமான இடங்களில் போடவோ மண்ணுக்கடியில் மறைத்து விடவோ வேண்டும். வாரத்திற்கொருமுறை கைகால் நகங்களையும், நாற்பது நாட்களுக்குள்ளாக அக்குள் போன்ற மறைவிடங்களிலுள்ள முடிகளையும் அகற்றுதல் வேண்டும். தலையை முற்றாகக் களைந்து விடுவதிலும் தாடி வளர்ப்பதிலும் நன்மைகள் பல அமைந்துள்ளன. ஆண் உறுப்பில் அழுக்குகளும் சிறுநீரும் தேங்கி நிற்பதைப் போக்கி இல்லற இன்பத்தை முழுமையாகப் பெறுவதற்கு கத்னா எனப்படும் விருத்த

சேதன முறை துணை புரிகின்றது. புற்றுநோய் முதலியன எளிதில் பற்றிக் கொள்ளாமலிருப்பதற்கு ஆண்கள் அனைவரும் விருத்த சேதனம் செய்துகொள்ள வேண்டுமென இற்றைநாள் மருத்துவர்கள் கருத்துரைத்துள்ளனர்.

இவ்வாறாக, நலவாழ்வு சிறந்தோங்கத் தூய்மையைப் போற்றிக் காக்கும் ஒழுங்கு முறைகள் பலவற்றை நாயக வழியானது நமக்கெடுத்துக் காட்டுகின்றது துப்புதல், தும்முதல், இருமுதல், ஏப்பமிடுதல், கொட்டாவி விடுதல், மூக்குச் சிந்துதல் போன்ற தருணங்களில் கூட, அயலாருக்கு அருவருப்போ தொல்லையோ கொடுத்தல் கூடாது. வாகனங்களில் பயணம் செய்யும்போது, அலட்சியமாகத் துப்பி விடுவதன் காரணமாகப் பாதையிற் செல்வோருக்கும் பிற பயணிகளுக்கும் ஏற்படும் தொல்லைகளை நாம் உணர்வதில்லை. நெருக்கடி மிகுந்த இடத்திற் செல்லும் ஒருவரைக் கைதட்டியழைத்துப் பலரையும் துன்பத்திற்காளாக்கிச் சில நேரங்களில் விபத்திற்கும் வித்திடுகின்ற பழக்கம் எவ்வளவு ஆபத்தான தென்பதை நாம் அறிவதில்லை. காற்றோட்டத்திற்காகவும் வெளிச்சத்திற்காகவும் கதவுகள் அமைக்கப்பட்டுள்ள மஸ்ஜிதுகளில், நெருக்கடி மிகுந்த ஜும்ஆத் தொழுகையின் போது அக்கதவுகளை மூடிவிடுவது எவ்வளவு முரண்பட்டதென்பதை நாம் சிந்திப்பதில்லை. வீட்டில் பயன்படுத்தும் தொழுகைப் பாயை இரண்டாக மடக்கிய பின் சுருட்டாமல், ஒரேயடியாகச் சுருட்டி விடும்போது அடிப்புற அழுக்குகள் மேற்புறத்தில் படுவதற்கு ஏதுவாகுமென்பதை நாம் எண்ணிப் பார்ப்பதில்லை. காசநோயுள்ளவர்களின் காறல், சளி முதலியவை நலவாழ்வுக்கு எவ்வளவு ஊறு விளைக்கும் மென்பதை நாம் உணர்வதில்லை.

அசுத்தமான பொருட்கள் எவை என்பது பற்றியும், அவற்றால் உடலிலோ உடையிலோ அசுத்தம் ஏற்படுமாயின், அவற்றை எவ்வாறு போக்கிக் கொள்ளுதல்வேண்டும் என்பது பற்றியும் இஸ்லாமியச் சட்ட நிபுணர்களாகிய இமாம்கள் விரிவாக ஆராய்ந்து விளக்கமான தீர்ப்புகள் வழங்கியுள்ளனர். நாயின் உமிழ் நீர் உடையிலே பட்டுவிட்டால், ஏழுமுறை கழுவ வேண்டும்; ஒரு முறை மண்ணாலும் தேய்த்தக் கழுவ வேண்டும் என்பது நபிமொழியாகும். நாயின் எச்சிலில் கொடுமையான நோய்க் கிருமிகள் அடங்கியிருக்கின்றனவென்பதும், மண் ஒன்றே அதற்கு மாற்று என்பதும் இன்றைய விஞ்ஞானம் தரும் விளக்கமாகும். கிணறு முதலிய நீர் நிலைகளில் எலி, பூனை, ஆடு போன்ற உயிரினங்கள் விழுந்து செத்தாலும், வீங்கி வெடித்தாலும், எவ்வாறு அந்நீர் நிலையைச் சுத்தப்படுத்துவது என்பது பற்றியும், நீர் நிலைகள் உளுச் செய்து கொள்வதற்குரிய தகுதியைப் பெறுவதற்கு எவ்வளவுகொள் அளவு உடையனவாக

இருக்க வேண்டுமென்பது பற்றியும் நல்லிமாம்கள் நல்ல விளக்கம் தந்துள்ளனர். ஐவேளைத் தொழுகையானது முஸ்லிம்கள் அனைவருக்கும் கட்டாயக் கடமையாக இருப்பதால், தொழுவோரின் உடம்பும் உடையும் தொழுமிடமும் தூய்மையாக இருக்க வேண்டுமென்பதும் இன்றியடையாததாகும். ஆகவே தொழுவதற்கு முன், உளூ என்னும் அங்க சுத்தி செய்துகொள்வதுபற்றி அருள் மறையின் ஐந்தாவது அத்தியாயமாகிய மாயிதா சூறாவின் ஆறாவது வசனம் விரிவாக விளக்குகிறது.

*(இனிமை பரவும்)*

---

*சற்றே நகுக!*

## நக்கல் பாஷா– நையாண்டி காதர்.

மோடி ஜி: நாம் கண்ணுக்குத் தெரியாத எதிரியுடன் போராடி வருகிறோம்.

*நக்கல் பாஷா: ஆனா... நாங்க 7 வருஷமா கண்ணுக்குத் தெரிஞ்சுதான் ஒருத்தரோட போராடிக்கிட்டு இருக்கோம் ஜி....!*

நக்கல் பாஷா: பணக்காரர்கள் கொரானாவை நினைத்து பயப்படுகின்றனர். காரணம்....உயிரு!

*நையாண்டி காதர்: ஏழைகள் லாக்டவுனை நினைத்து பயப்படுகிறார்கள். காரணம் – வயிறு*

நக்கல் பாஷா: தமிழ்நாட்டில் கொரோனா எப்படி இருக்கு பாய்?

*நையாண்டி காதர்: 4500 பஸ்கள் மூலம் தமிழகத்தில் எல்லாப் பகுதிகளுக்கும் போய்க்கிட்டிருக்கு?*

நக்கல் பாஷா: என்னஙக மேலேயே பாத்துக்கிட்டு படுத்து இருக்கிறீங்க?

*நையாண்டி காதர்: இல்ல..மே மாசம் தாண்டிருவோமா? மேலதான் போயிருவோமான்னு தான்...!*

ஏ டி எம்களில் மாதத்திற்கு 4 முறைக்குமேல் பணம் எடுத்தால் ரூ.150 கட்டணம் வசூலிக்கப்படும்! – செய்தி –

*நக்கல் பாஷா: எடுக்கப்போறது 100 ரூவா..அதுக்கு பைன் 150 ரூவாவா? நல்ல பார்ட்னர்ஷிப்...இப்படியே மெயின்டைன் பண்ணுங்க.....!*

நக்கல் பாஷா தமக்குத்தாமே பேசிக்காண்டார்: வருடத்துக்கு 6 சிலிண்டர் இலவசம்னு சொல்லும்போது நான் அடுப்பு எரிக்கிற சிலிண்டர்னு நெனெச்சேன்....இப்பத்தான் புரியுது அது ஆக்சிஜன் சிலிண்டர்னு.

நக்கல் பாஷா: நிர்மலா சீதா ராமன் மேடத்தை இப்ப ஹெல்த் மினிஸ்டரா போட்டா நல்லா இருக்கும்ல......? ஏன்னா .....பொருளாதாரத்தைக் காலி பண்ண மாதிரி கொரானாவையும் காலி பண்ணிடுவாங்கல்ல....!

# சாமான்யரா? சர்தார் நபி

## ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

*கொடிக்கால் பாளையம் ஹாஜி. கே.பி.எம். பஷீர் அஹ்மது ஹக்கிய்யுல் காதிரி*

**இஸ்லாமியக் கோட்பாடுகள்**

இஸ்லாமியக் கோட்பாடுகள் தெளிவானதும் திட்டவட்டமானதும் சந்தேகமற்றதும் இலகுவானதும் எளிமையானதுமாகும் என்பது பேருண்மை. இது இஸ்லாத்தில் உள்ளவர்கள் மட்டுமல்ல இஸ்லாத்தை ஆராய்ந்து விளங்கிய அறிஞர்களும் எடுத்துரைத்த உண்மை. ஆயினும் இதன் தாற்பரியத்தை அறிவதே இஸ்லாமியனைப் பூரணப்படுத்துவதாகும்.

இஸ்லாத்தின் தாற்பரியத்தை அறியாமல் முஸ்லிம் என்ற பெயரளவில் திரியும் இந்த தவறுகிறவாதிகள் ஈடு இணையற்ற தவ்ஹீதை அறிவார்களா? அதை அறியாததால்தானே குழப்பங்கள், குழுக்கள், இவர்களின் நிலை மிகவும் பரிதாபகரமானதன்றோ?

நம் முன்னோர்கள் ஹதீதுகளைத் தாங்களே கண்டறிந்து– பல சிரமங்களுக்குப் பின் அவற்றைக் கோவை செய்தருளினார்கள். இவ்விவரங்களை அந்தந்த ஹதீதுக் கிரந்தங்களிலேயே காணலாம்.

ஆனால் இன்றுள்ளவர்களோ (குழப்பவாதிகளோ) சமைத்து வைக்கப்பட்ட சோற்றில் கல்லைத் தேடுவதைப்போல் இது ளயீஃப், அது ஸஹீஹ் என்கின்றனர். சரி, அந்த கித்தாபுகளின்றி ஒரு ஹதீதையாவது கண்டுபிடிக்க முடிந்ததா? அவ்வாறிருக்க இம்மனிதர்களின் கூற்றை எப்படி நாம் ஏற்க முடியும்?

**எப்படிப்பட்டவர்கள் இவர்கள்?**

இறைவனுக்கு முகம் இருப்பதாகவும் கை இருப்பதாகவும் கூறி இறைவனுக்கு உருவம் உண்டு எனக்கூறி இஸ்லாத்தின் அடிப்படைத் தத்துவமான தவ்ஹீதுக்கு முரணான கருத்தைக் கூறத் தொடங்கியுள்ளனர்.

“நீங்கள் எங்குத் திரும்பினும் இறையின் முகத்தை காண்கிறீர்கள்” என்பதாகவும் “அல்லாஹ்வின் கை அவர்களின் கைகளில் மேல் உள்ளது” என்பதாகவும் திருக்குர்ஆனில் கூறப்படுகின்றது உண்மைதான். ஈங்கு

'இறைவனின் முகம்', 'இறைவனின் கை' எனக் கூறப்படுவதின் உட்கருத்தை விளங்கிக் கொள்ள வேண்டுமே தவிர இறைவனுக்கு கை இருக்கிறது. முகம் இருக்கிறது என்று உருவகப்படுத்தினால் இவர்கள் யார் என்பதைக் கண்டு ஒதுங்க வேண்டுமேயல்லாது அதிலும் ஏதோ இருக்கிறதா என எண்ணி மருண்டு போய் இந்த அறிவிலிகளிடம் நெருங்கவே கூடாது.

எப்பேர்ப்பட்ட பெருமானார்...?

எவர்களும், ஏன் எந்த நபியாலுமே நிறைவு செய்யப்பட முடியாத தவ்ஹீதை பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிறைவு செய்தது மட்டுமல்ல, தங்களின் காலத்திலேயே மிகப்பெரிய அளவு – அதிகமானோரை– அத்தவ்ஹீதை ஏற்கவும் செய்தார்களே (இந்த அதிகமானோர் எந்த நபிமார் காலத்திலேயும் இல்லை) ஏறக்குறைய 1.25 லட்சம் பேர் அவர்களின் சீடர்களாக இருந்தார்கள். மேலும் அந்த சீடர்கள் அனைவரையும், தங்கள் வல்ல இறையோனின் அருட்கொடையான தூதராக இருந்தும், ஸஹாபாக்களாக– தோழர்களாக– வைத்துள்ளார்களே அத்தகைய மாநபிகளார் சாமான்ய மானவர்களா?

மாநபிகளாரையே சாமான்யரென்றால் சாமான்யரை என்னவென்று கூறுவது? சாமான்யரென்றால் என்னவென்றாவது புரிகிறதா இந்த அறிவிலிகளுக்கு? ஏன் இந்த வஞ்சம்? நபிகளார் மீது இவர்களுக்கு அப்படியென்ன மாற்றமுடியாத கொடுங்கோபம்? இவர்கள் யாரென்று புரிந்து கொள்ள வேண்டும் நாம். 1400 வருடங்களுக்கு முன்னும் இருந்தனர். ஒரு கூட்டம்– அந்தக் கூட்டம் இந்த தவறுகிறவாதிகளின் முன்னோர்கள்தாம். அதாவது, அன்று இருந்த அறிவிலிகளின் சந்ததியினர்தான் இந்த அறி விலிகள்.

வயலிலிருந்து கொண்டு வரப்படும் நெல் மூட்டையில் ஆங்காங்கே காணப்படும் பதர்கள்தான் இந்த அறிவிலிகளும். நெல்லோடு கலந்திருந்தாலும் புடைத்து எப்படி பதரை ஒதுக்குவோமோ அப்படி இந்த அறிவிலிகளை அறிவுக் கண்கொண்டு நாம் ஆய்ந்து ஒதுங்கிவிட வேண்டும்.

வல்ல அல்லாஹுத்தஆலா திருக்குர்ஆனில் யா அய்யுஹல்லதீன ஆமனூ லாதர்ஃபஊ அஸ்வாத(க்)கும்... 49 : 1 மூமின்களே உங்களது (சப்தத்தை) குரலை நபியின் குரல் சப்தத்திற்கு மேல் உயர்த்திவிடாதீர்கள் எனக் குறிப்பிடுகிறான். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குரலுக்கே இப்படி மிக உயர்ந்த அந்தஸ்தைக் கொடுத்திருக்கும் வல்ல அல்லஹுத்தஆலாவின் கூற்றுக்கே– மதிப்பளிக்கவில்லையெனில் மதிக்காதவன் எப்படி முஸ்லிமாக ஏன் முஃமினாகவே இருக்க முடியுமா? நிச்சயம்இருக்க முடியாது. அதுவும் அந்த

நேரத்தில்–இஸ்லாம் வளர்வதற்கே மிக்க நெருக்கடியான நேரத்தில் இவ்வளவு பெரிய கட்டளையை இறைவன் அருளியிருக்கிறான் என்றால் பெருமானாரின் மகத்துவம் என்னவென்பது! இக்கட்டான அந்த நேரத்திலேயே இவ்வளவு பெரிய கட்டளையை இட்டுள்ளான். அதாவது முஃமினுடைய அந்தஸ்துக்கே பங்கம். அதாவது அப்புனிதக் குரல் சப்தத்திற்குமேல் தன் சப்தத்தை உயர்த்தாமல் இருந்தவர்தான் முஃமின் என்றாகிறது.

தன் உயிரைவிட மேலாய் யார் பெருமானாரை நேசிக்கன்றாரோ அவர்தான் முஃமின் என்று கூறிய இறைவன் அத்தோடு விட்டிருக்கலாமே. பிறகு குரலுக்கும் உள்ள கண்ணியத்தை ஏன் கூறினான்? சிந்திக்க வேண்டாமா? சிந்தித்தால்தான் சீர்பெறலாம். மேலும் குரலைத் தாழ்த்தவில்லையெனில் உங்கள் அமல்களும் அழிந்துவிடும் எனவும் கூறுகிறான். அமல்களைவிட பெருமானாரின் குரலுக்குத் தரும் கண்ணியம் மிக முக்கியமானதென்றல்லவா ஆகிறது. ஆக, என்னதான் அமல்கள் செய்து கொண்டிருந்தாலும் அந்த அமல்கள் செய்ய வாய்ப்பளித்து மனிதனை மனிதனாக வாழ வைத்த எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களைப் போன்றவர்கள் என்று கூறும் இக்கொடும் அறிவிலிகளின் கதி அதோகதிதான். வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ள குர்ஆன் திருவசனத்தை ஒப்புக் கெள்ளாதவன் எப்படி முஃமினாக– முஸ்லிமாக இருக்க முடியும்? கொடுங் காஃபிரல்லவோ இவர்கள்.

அன்றைய குறைஷிகள் அனைவரும் (காஃபிர்கள் உட்பட) பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை 'அல்அமீன்' (நன்னம்பிக்கையாளர்) என்று அழைத்ததைப் போல் வேறு எந்த நபியையாவது அந்தக் காலத்து முஸ்லிமல்லாதோர் அழைத்ததுண்டா? ஆனால் இன்று முஸ்லிம் என்று பெயர் மட்டும் உள்ளோர் எம்பெருமானாரை சாமான்யர் என சப்தமிட்டுக் கொண்டிருக்கின்றனர். இப்படிக் கூக்குரலிடுவோரின் இறுதி நிலை எப்படியிருக்கும் என எண்ணவே குலை நடுங்குகிறது. இறையின் நாட்டம் அப்படியிருக்கும் போது நாம் என்ன செய்ய முடியும்?

திருக்குர்ஆன் இறுதிவேதம் மட்டுமல்ல. இணையில்லாததும் கூட. உலகப் பொதுமறையும் கூட. இதில் இன்றளவும் ஏன் என்றளவும் கூட, புள்ளி கூட மாற்ற முடியாது. மற்ற சில வேதங்கள் எதுவுமே இன்று இல்லை. ஏன் வெகு காலத்திற்கு முன்பே இல்லாமலாய் விட்டது. இன்று மனிதக் கைகள் ஊடாடி ஒரு சில வேதங்கள்உள்ளன. அவ்வேதங்களைக் கொண்டு வந்த நபிமார்களுக்கும் இறைவன்தானே வேதங்களைத் தந்தான். ஏன் இன்று இல்லை? சிலுவை தூய்மையாகவும் இல்லை. ஏன்? மிகப்பெரிய அளவில் சிந்திக்க வேண்டுமே!

தன் வேதங்களிலேயே மனிதக் கைகள் ஊடாட இறைவனே விட்டுவிட்டானா? சில வேதங்கள் இல்லாமலேயும் ஆக்கிவிட்டானே. இவை ஏன் சிந்திப்போமா?

இங்கு சிறப்பான தெளிவு கிடைக்கின்றது. முத்திரை நபியும் 'முழுத்திரை' நீக்கிய நபியும் எல்லாவற்றுக்கும் மேலாக ரஹ்மத்துன்(ல்)லில் ஆலமீன் ஆகிய நபியுமாகிய எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மேன்மை புரியும். இறைவன் அவர்களுக்கு அளித்த இணையில்லா சிறப்பும் தெரியும். எத்தனையோ அற்புதங்கள் மறையவே மறையாது. எவரும் மறைக்க முடியாது. விண்டு சொல்ல முடியாதளவு அற்புதங்கள் தந்த அற்புத அகில நாதரை சாமான்யரென்பவன் சாணத்தைவிடக் கேவலமானவன். மிருகத்தைவிடக் கொடியோன். நிர்கதியானவன்.

குர்ஆனிலேயே "லகத் ஜாஅகும் ரஸூலும் மின் அன்ஃபுஸிகும் அஜீஜுன் அலைஹி மாஅனித்தும் ஹரீஸுன் அலைகும் பில் முஃமினீன ரவூஃபுர்ரஹீம்".

மேற்கண்ட திருவசனத்தில் முஃமின்களுக்கு ரவூஃப், ரஹீம் ஆக இருப்பவர்கள் எனது ரஸூல் என்று வல்ல அல்லாஹுத்தஆலா கூறுகிறானே இதைவிட வேறு என்ன வேண்டும் சாமான்யரல்ல என்பதற்கு? உங்களிலேயே என ஏன் இங்கு குறிப்பிடுகிறான் தெரியுமா? உங்களின் மனித இனத்திலேயே தோன்றினாலும் நம்மைப் போன்ற என நீங்கள் நினைத்துவிட வேண்டாம் என்பதற்காகத்தான்.

ரவூப், ரஹீம் எனும் திருப்பெயர்கள் இறைவனுக்குரியன. இங்கு எப்படி அர்த்தம் கொள்வது. அவ்விரண்டு தன்மைகளும் எனது ரஹ்மத்தாகிய திருநபியிடம் வெளியாக்கியுள்ளேன் என்று அறைகூவல் விடுகிறான். தனக்குரிய தன்மைகள் வெளியாகுமிடம் என இறைவன் குறிப்பிடும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைவிட எந்தளவும் உயர்ந்தவருண்டோ? இதை உணராதவர் இஸ்லாமியரா? ஏனெனில், முஃமின்களுக்குத்தான் அந்த நபியவர்கள் ரவூஃப், ரஹீம் மற்றவர்களுக்கல்ல.

**முக்கியக்குறிப்பு:**

1. உங்கள் குரலை பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குரலுக்கு மேல் உயர்த்தாதீர்கள் என்றது முஃமின்களுக்குத்தான்.

2. ஸலவாத் கூறுங்கள் என்றதும் முஃமின்களைப் பார்த்துத்தான்.

**ஸலவாத்**

இது நமக்கு வாய்த்த மிகப்பெரிய பாக்கியம்."இன்னல்லாஹ வமாலிகத்(த்)தஹு யுஸல்லூன அலன்னபிய்யி, யா அய்யுஹல்லதீன ஆமனூ ஸல்லூ அலைஹி

வஸல்லிமூ தஸ்லீமா" "அல்லாஹ்வாகிய நானும் எனது மலக்குகளும் நபியின் மீது ஸலவாத் கூறுகிறோம். ஈமான் கொண்டவர்களே நீங்களும் அந்த நபியின்மீது ஸலவாத் கூறுங்கள்". என்று வல்ல அல்லாஹுத்தஆலா திருமறையில் கூறுகிறது. பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பெயரில் ஸலவாத் கூறுவது முஃமின்கள் மீது கடமையாகவல்லவா ஆகிவிட்டது. ஏனெனில் இறைவன் முஃமின்களைப் பார்த்து ஸலவாத் கூறுங்கள் எனக் கட்டளையிட்டு விட்டானே! அறிவிலிகள் ஸலவாத் முக்கியமல்ல என்கிறார்கள்.

இறைவன் கட்டளையை அது அவசியமில்லை என்றால், இவர்கள் யார்? நிச்சயமாக முஃமின்களில்லை. பெயரளவில் முஸ்லிமாக இருக்கலாம். உண்மை முஸ்லிமுமில்லை. ஏனெனில் இறைவன் கட்டளையை மறுக்கும் இவர்கள் இறைவேதமான திருக்குர்ஆனையும் மறுக்கிறார்கள். திருக்குர்ஆனை மறுக்கும் கூட்டம் இறைவனையும் மறுக்கும் காஃபிரேயன்றி வேறு யாருமல்ல. கொடிய வஹ்ஹாபி காஃபிர்கள்தான் இவர்கள். இவர்களுடன் நாம் நெருங்கிப் பழகலாமா? நிச்சயம் கூடாது.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மற்ற மத, இன, மொழிக் காபிர்கள் புகழ்கிறார்களே அவர்கள் நிச்சயமாக கொடிய காஃபிர்கள் அல்ல. **"The Hundred"** எழுதிய மைக்கேல் ஹார்ட், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை புகழ்ந்துரைக்கும் ஜார்ஜ் பெர்னாட்ஷா, இன்னும் எத்தனையெத்தனையோ அறிஞர்கள் அவர்களை முடிந்த அளவு புகழ்கிறார்கள். இவர்கள் அனைவருமே நிச்சயமாக நன்மையை சுமந்தவர்களே.

மேலை நாடுகள் இருளில் ஆழ்ந்திருந்த போது கிழக்கு வானிலே ஒளிமிக்கதொரு நட்சத்திரம் தோன்றியது; துன்பத்தில் மூழ்கியிருந்த உலகினுக்கு இன்ப ஒளியையும் சுகத்தையும் கொடுத்தது; ஹிந்துக்கள் அதைக் கவனத்துடன் கற்று. ஆழ்ந்து சிந்தனை செய்வார்களா! அப்பொழுது நான் நேசிப்பது போலவே முஹம்மது நபியவர்களை அவர்களும் நேசிப்பார்கள் என்றும்,

அக்கால உலகினில் இஸ்லாம் மார்க்கத்தை உயர்த்தி நல்லிடம் அளித்த(தற்கு)...பெருமானாரின் கண்டிப்பான எளிமை, தன்னலமற்ற தன்மை, வாக்குறுதிகளை நிறைவேற்றல், நண்பர்கள், பின்பற்றுவோர் மீதான ஆழிய அன்பு நிறைந்த பற்று, அஞ்சாமை, ஆண்மை, இறைவன் மீதும் தூதின்மீதும் பூரண நம்பிக்கை ஆகிய இவையே காரணங்களாகும். என்றும் அண்ணல் காந்தியடிகள் அழகாகக் கூறியிருக்கிறார்கள்.

*எடுத்தகாரியம் யாவினும் வெற்றி! எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி. விடுத்த தாய்மொழிக் கெங்கணும் வெற்றி. வேண்டு முன்னர் அருளினன் அல்லாஹ்!*

*முஹம்மது நபி மஹா சுதந்திர புருஷர். மஹாசூரர் .மஹாஞானி. மஹா பண்டிதர்! மஹா பக்தர் மஹா லௌகீக தந்திரி!*

என்று மகாகவி பாரதியார் சிறப்பாக கூறியிருக்கிறாரே. எல்லாவற்றுக்கும் மேலாக முன்வந்த வேதங்கள் அனைத்திலும் பெருமானார் அவர்களின் வருகை பற்றி குறிப்பிட்டிருந்ததே மிகப்பெரிய விஷயமல்லவா?

இந்தக் குர்ஆனை ஒருமலையின் மீது இறக்கி இருந்தால் அம் மலை சுக்கு நூறாகியிருக்கும் என்று ஏக இறையே கூறியபின் இதயத்தில் தாங்கிய பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எப்பேர்ப்பட்டவர்கள் என்று விளங்க வேண்டாமா? அப்பேர்ப்பட்ட பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சாமான்யமானவர்களா? சாமான்யரென்று சொல்லும் அளவுக்கு இவர்களுக்கு என்ன கேடு வந்தது? ஏதோ கேடு வந்துவிட்டது, போகட்டும்.

வல்ல அல்லாஹுத்தஆலா திருக்குர்ஆனில் சொல்வதுபோல் நம் உயிரினும் மேலாக பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது நேசம் வைத்து அவர்கள் மீது ஸலவாத்தும் சொல்லிக் கொண்டேயிருப்போமாக. இறைவன் கூறுவதுபோல் அல்லாஹுவுக்கும் வழிபட்டு, ரஸூலுல்லாஹுவுக்கும் வழிபட்டு நற்பேறு அடைவோமாக. இருலோக பாக்கியங்களும் பெற்று இன்பம் அடைவோமாக. ஆமீன் யாரப்பல் ஆலமீன்!

ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம். அல்ஹம்துலில்லாஹ். **(நிறைவு பெற்றது)**

---

## இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் முரீதாவும், கலிக்கம்பட்டி, ஸூஃபி அமீர்பாஷா ஹள்ரத் அவர்களின் மகன் வழிப்பேத்தியும், எம்.ஏ. நிஜாமுத்தீன் அவர்களின் மகளும், எஸ். மஹ்பூப் பாஷா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் மனைவியும், திண்டுக்கல் ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை செயலாளர் எம். அப்துல்லாஹ், எம். அஹமது இப்றாஹீம் ஹக்கிய்யுல் காதிரிய் ஆகியோரின் தாயாரும், என். அப்துல் வாஹித் பாஷா, என். ஜமால் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய் ஆகியோரின் சகோதரியுமான என். ஜமால் மஹமூதா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் 1.6.2021 செவ்வாய் இரவு இறையடி சேர்ந்தார். 2.6.2021 புதன் அன்று பேகம்பூர் பெரிய பள்ளிவாசல் கப்ருஸ்தானில் நல்லடக்கம் நடைபெற்றது. அல்லாஹ் அவரது பிழைகள் பொறுத்து சுவனப்பேற்றினை வழங்குவானாக!

# ஒரு பாடல் பாடிட அருள் புரிவீர்!

ஏந்தலரே எங்கள் காவலரே
உம்மைப் போற்றுகிறோம்
ஒருபாடல் பாடிட அருள்புரிவீர்
இனியவரே எம்குருவே!

எதைப் பாடுவேன் உங்கள்
சொல்லழகா?
எதில் மூழ்குவேன் உங்கள்
கருத்தழகா?
எவரையும் வசீகரிக்கும்
பண்பழகா?
எவராலும் ஈர்க்கப்படும்
புன்னகைப் பூமுகமா?

அழகிய மரபாலே
நபிநாதர் வழியல்லவோ!
செந்தமிழ்க் கவிநடையே
நீர்பேசும் மொழியல்லவோ!
ஆங்கில நுண்புலமை
வித்தகரும் தாங்களன்றோ!
மொழிகளின் கருப்பொருளின்
மெய்ப்பொருளும் தாங்களன்றோ!

உலகின் மாந்தர்கள் பலகோடி
உலகின் காதங்கள் பலகோடி
காசினி மீதினில் அதிசயம் கோடி
அனைத்தையும் ஒன்றாக்கி
பகரும் இறை ஒன்றே!

கடலின் மீனும்
நீரைத் தேடும்!
மனிதன் தேடுவான்
இறையை எங்கும்!
மார்க்கம் பகரும்
ஏக இறையை
அறியா தோரே
சிர்க்காக் கினரே!

***ஏ.என்.எம்.***
***முஹம்மது யூஸுஃப்***
***ஹக்கிய்யுல் காதிரிய்.***
***மதுக்கூர்.***
***(கேம்ப்) கத்தார்.***

கற்பிக்க வருகை தரும்
இறை நேசர்களையும்
சிர்க்காக்கி வந்தனரே
அறியாத மாந்தர்
சீர்கெட்ட மாந்தர்தமை
திருத்திடுவாய்
இறைவா
அவரும் நேர்வழிக்குத்
திரும்பிட அருள்வாய்!

அண்ணலாரின் திருமுகத்தைப்
பார்த்ததில்லை நாங்களுமே
தங்களைக் கண்டதனால்
அந்தக்குறை இன்று இல்லை!
கண்கள் குளிர்ந்ததம்மா
ஆவல் தீர்ந்ததம்மா
வாழும் நாளெல்லாம்
மகிழ்வே தங்குதம்மா!

ஏழை பணக்காரர்
அறியாதோர் அறிந்தோர்
எல்லோரையும் இணைத்தீர்
பாசத்தினால் அணைத்தீர்
எங்கோ பிறந்தவர்கள்
அன்பில் இணைந்தார்கள்
ஆராய்ந்து பார்த்தால்
அர்ஷின் அரசே...!

தேவை சொல்லும் முன்னரே
நிறைவேறப் பெறுகின்றோம்
தங்களின் நல்லருளால்
நிறைவாக வாழுகின்றோம்!
தாங்கள் தந்த ஒளியால்
அறிவின் துலக்கம்
உயிர்ப்புமிகு போதனையால்
உயர்வான விளக்க...

***மீதி 66 ஆம் பக்கம் பார்க்க...***



# மதுரஸா நன்கொடை



## திருநெல்வேலி

(*Er.*அப்துல்வஹாப் அவர்கள் மூலம்)

பாஸித் என்ற ஹுமாயூன் துஆ செய்ய 25 கிலோ அரிசிக்கு ஹதியா ரூ. 1250 /- ம்,

சையதலி யாஸீன் துஆ செய்ய 25 கிலோ அரிசி ஹதியா ரூ. 1250 /- ம்,

முஹம்மது ஆசாத் முஜா துஆ செய்ய 25 கிலோ அரிசி ஹதியா ரூ. 1250 /- ம்,

ஜன்னத்துல் பிரதவ்ஸ் துஆ செய்ய 25 கிலோ அரிசி ஹதியா ரூ. 1250 /- ம்,

முஹம்மது சுலைமான் துஆ செய்ய 25 கிலோ அரிசி ஹதியா ரூ. 1250 /- ம்,

ஷேக் ஷபீக் துஆ செய்ய 10 கிலோ அரிசி ஹதியா ரூ. 500 /- ம்,

முஹம்மது சையது மசூத் துஆ செய்ய உணவுக்காக ரூ. 3050 /- ம்,

அப்ஸர் அலி துஆ செய்ய உணவுக்காக ரூ. 5500 /- ம்,

சென்னை. நௌஷீன் மீரா **D/o I.S.**இப்றாஹீம் குழந்தை பாக்கியம் பெற துஆ செய்ய ரூ.1000/ம்,

## திண்டுக்கல்

காந்தி கிராமம் சித்தீக்கா அம்மாள் காணிக்கை ரூ. 1000 /- ம்,

காந்தி கிராமம். பத்தூல் காணிக்கை ரூ. 1000 /- ம்,பத்தூல் குடும்பம் சதக்கா ரூ. 3600 /

காந்தி கிராமம்.ஜமால் முஹம்மது இஸ்மாயீல் மகள் **J.** இஷ்ஃபா பிறந்த நாளை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 500 /- ம்,

காந்தி கிராமம். **S.** மஹபூப் பாஷா குடும்பம் சதக்கா ரூ. 600 /- ம்,

**M.** முஹம்மது அப்துல்லாஹ் குடும்பம் நிய்யத் ரூ. 400 + சதக்கா ரூ. 600 ஆக மொத்தம் ரூ. 1000/- ம்,

**A.M.** ஜைனுலாபுதீன் அவர்கள் காணிக்கை ரூ. 1000 /- ம்,

பாத்திமா பஞ்சர் கடை **U.** நாகூர் மீரான் உண்டியல் சேமிப்பு ரூ. 2140 /- + உண்டியல் சேமிப்பு ரூ. 2000 /- ம்,

மீரா பஞ்சு மில்- பர்மா காலனி பள்ளிவாசல் முத்தவல்லி ஹாஜி **M.** முஹம்மது மீரா அவர்கள் உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ. 2511 /- ம்,

E.ஷாகுல் ஹமீது H.Q. அவர்களின் தாயார் மர்ஹூமா அப்துல்லாஹ் பீவி அவர்களின் 40 ஆம் நாள் 25/4/2021 ம் தேதி முன்னிட்டு துஆ செய்ய விஷேச உணவுக்கு ரூ. 15000 /- ம்,

கொடிக்கால் பாளையம் ஹாஜி பஷீர் அஹமது மகன் முஹம்மது இஸ்மாயில் புஹாரிக்கு ஷைகு நாயகம் அவர்கள் அருளால் சிறப்பாகதிருமணம் நடந்தமைக்கும் சிறப்பாக வாழ துஆ செய்யவும் ரூ.2000/ம்,

M. ஹபீப் மன்ஸூர் மகன் H. முஹம்மது அஷ்ரப் அலி 24.4.21 பிறந்த நாளை முன்னிட்டு நல்வாழ்வுக்கு துஆ செய்ய ரூ.2000/ம்,

பாக்கம் கோட்டூர் ரஹ்மத் நிஸா துஆ செய்ய ரூ.500/ம்,

சென்னை பேராசிரியர் N. ராஜா உசேன் துஆ செய்ய சதக்கா ரூ. 1000 /- ம்,

சென்னை பேராசிரியர் N. ராஜா உசேன் அவர்களின் மகன் சாக்கிர் அஹமது துஆ செய்ய சதக்கா ரூ. 1000 /- ம்,

மறைஞானப்பேழை வளர்ச்சிக்காக நத்தர்ஷா ஹக்கிய்யுல் காதிரிய் (கேம்ப் -குவைத்) அவர்கள் மூலம் அஹ்மதுல்லாஹ் ரூ.5000/ம், ஷபீர் அஹமது அவர்கள் ரூ.5000/ம் வழங்கியுள்ளார்கள்.

மறைஞானப்பேழை ஆசிரியர் குழு – நிர்வாகக் குழுவின் சார்பாக நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

*64 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

எளிமையாய் இறை விளக்கும்
ஏந்தலரே தாங்கள்
மாநபி அவர்களது
மறு உதயப் பதிப்பு!
குத்பு நாயகத்தின்
திருக் குலவிளக்கு
அவ்னென வந்த எம்
அற்புதப் புனிதம்!

தாயொடும் தந்தையோடும்
உலகுயிர் அனைத்தும்
சமர்ப்பணம் எம் குருவே
நிகரில்லாக் கருவே!

நேர்மை வாழ்வைக்
காட்டிய திருவே
நித்திய சத்தியத்தில்
சேர்த்திட்ட அருளே!

கருணைக்கடலே
சையித் கலீலே
அவ்ன் எனும் நாயகரே!
வாழ்க பல நூறே!
தாங்கள் வாழ நாங்கள்
வாழ்வோம்
நித்திய அருளே!
வேண்டும் வரம் வேண்டும் வரம்
கிடைத்திட மகிழ்வோம்!